விலை
ரூபா 20

பக்கங்கள்
32

# உதயன்

சுடர் 31 | கதிர் 181 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 12, புதன்கிழமை 25.05.2016




# பாலச்சந்திரன், இசைப்பிரியா படுகொலை விசாரணையில் திண்டாடுகிறது பரணகம குழு

## இருவரிடம் மட்டுமே சாட்சியம் மட்டு. அமர்வும் இடைநிறுத்தம்



யாழ்ப்பாணம், மே 25
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் இளைய புதல்வரான பாலச்சந்திரன், தமிழீழ தொலைக் காட்சியின் செய்தி வாசிப்பாளரான இசைப்பிரியா ஆகியோர் இறுதிப் போரின்போது படுகொலை செய்யப்பட்டனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக, காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை இருவரிடம் மாத்திரமே சாட்சியங்கள் பக்.26

## லலித் வீரதுங்கவிடம் விசாரணை

கொழும்பு, மே 25
முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் செயலாளரான லலித் வீரதுங்க, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் நேற்று முன்னிலையானர்.
முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சிகிச்சை பெறுவதற்காக ஜனாதிபதி உதவித் பக்.26

முச்சந்தி முரளி



விசாரணை நடந்தால் பல உண்மைகள் வெளிவந்திடும் பாருங்கோ...

## யாழ். மாவட்ட நகர அபிவிருத்தி ஆளுநர் தலைமையில் ஆராய்வு

### நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், மே 25
யாழ்.மாவட்ட நகர அபிவிருத்தி தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுக் பக்.26

## வடக்கு அரசின் தீர்வு வரைவை விமர்சிக்கவேயில்லை ஆளுநர்

### சிடி ஒலிப்பதிவு ஆதாரத்தை வைத்து அவைத் தலைவர் சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25
வடக்கு மாகாண ஆளுநர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை விமர்சனம் செய்யும் வகையில் எதுவும் தெரிவிக்கவில்லை. அவர் அனுப்பிய குறுந்தகட்டில் (சிடி) உள்ள ஒலிப்பதிவின் அடிப்படையில் இதனை நான் தெரிவிக்கின்றேன்.
இவ்வாறு தெரிவித் பக்.29

## கைக்குண்டுடன் கைதான 7 பேருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 25
வாள்கள் மற்றும் கைக்குண்டுகள் சகிதம் கைது செய்யப்பட்ட ஏழு இளைஞர்களின் விளக்கமறியலை எதிர்வரும்வெள்ளிக்கிழமை வரை நீடிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன் பக்.29

## கவுணாவத்தை வேள்விக்கு இடைக்காலத் தடை உத்தரவு

### நேற்று வழங்கியது மல்லாகம் நீதிமன்று

யாழ்ப்பாணம், மே 25
கவுணாவத்தை வைரவர் கோயிலில் மிருக வேள்வி நடத்துவதற்கு மல்லாகம் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்துள்ளது.
அத்துடன், குறித்த வேள்விக்கான அனுமதி பற்றிய விடயத்துக்கு சமர்ப்பணம் செய்ய விரும்பினால், யாழ்.மேல்நீதிமன்றில் சமர்ப்பிக்க முடியும் என்றும் மல்லாகம் பக்.26

## கடன் நிபந்தனை குறித்து மீள் பரிசீலனை வேண்டும்

### உலக வங்கியிடம் மைத்திரி கோரிக்கை

கொழும்பு, மே 25
இலங்கைக்குக் கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் தாக்கம் செலுத்தும் உலக வங்கியின் நிபந்தனைகள் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறு உலக வங்கியின் நிறைவேற்று அதிகாரிகளிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.
இந்தக் கோரிக்கைக்குச் சாதகமாகப் பதிலளிக்கப்படும் என்று உலக வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.
உலக வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள் 12 பேர்கள் கொண்ட குழு நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபாலவை, ஜனாதிபதியின் பக்.27

## தமிழர் கலாசார முறைப்படி யாழ். மாநகர சபைக் கட்டடம்

### அதனை வடிவமைப்பது குறித்த கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 25
தமிழர் கலாசார முறைப்படி யாழ்.மாநகர சபைக்கான கட்டட அமைப்பு அமைய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.
யாழ்.நகர அபிவிருத்தி தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில், உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கும் வடக்கு மாகாண சபையினருக்கும் இடையில் பக்.27

## பசிலின் மற்றொரு செயலாளர் கைது

கொழும்பு, மே 25
முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் மற்றுமொரு செயலாளர் நேற்று பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கம்பகா ஒருத்தொட்ட பிரதேசத்தில் முன்னாள் அமைச் பக்.26

## கருத்தறியும் குழு அறிக்கையை மொழி பெயர்க்கும் பணி தீவிரம்

யாழ்ப்பாணம், மே 25
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காகப் பொதுமக்களின் கருத்துக்களை அறிய நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தயாரிக்கப்பட்டு வருகின்றது.
இந்த வார இறுதியினுள் தமிழ் – சிங்கள மொழிகளில் அறிக்கைகள் தயாராகிவிடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பக்.26




Digitized by Noolaham Foundation.

# சமஷ்டியையே நாம் கோருகின்றோம் விசேட அதிகாரங்களை கோரவில்லை

## வடக்கு மாகாண அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25

வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலத்துக்கு நாம் விசேட அதிகாரங்களைக் கோரவில்லை. நாட்டைப் பிரிக்குமாறும் கோரவில்லை. சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே கோருகின்றோம். இந்த சமஷ்டித் தீர்வை சிங்களத் தலைவர்களே முதலில் முன்வைத்தார்கள் - இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்டம் ஊடகவியலாளர்களிடம் உத்தியோகபூர்வமாக நேற்றுக் கையளிக்கப்பட்டது. இதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பு பேரவைச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவைத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

எங்களது தீர்வுத் திட்டத்தில் நாட்டைப் பிரிக்கின்ற முன்மொழிவு எதனையும் முன்வைக்கவில்லை. இலங்கையின் தற்போதைய அரசமைப்பை மீறவும் இல்லை.

சமஷ்டியைத் தீர்வாகக் கேட்டிருக்கின்றோம். இதனை நாம் இப்போது புதிதாகக் கேட்கவில்லை. தந்தை செல்வாவின் காலத்திலிருந்தே இதனை வலியுறுத்தி வருகின்றோம். எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் தீர்வுத் திட்டத்தை கையளித்த போது அவர் கருத்துத் தெரிவிக்கையில், சமஷ்டியை நாம் ஆரம்பம் முதல் கோரி வருகின்றோம். வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் கபடமான முறையில் வடக்கு - கிழக்கு இணைப்பு பிரிக்கப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

நாங்கள் வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலத்துக்கு விசேட அதிகாரம் கோரவில்லை. இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் போன்று அதிகாரங்களைக் கோரவில்லை.

சிங்கள ஊடகங்கள் நாங்கள் சமஷ்டி என்று கோரியதை தவறாக அர்த்தப்படுத்தியுள்ளன. சிங்கள மக்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.

சிங்களத் தலைவர்கள்தான் முதன் முதலில் சமஷ்டியைக் கோரினார்கள். இதனை நாம் எமது தீர்வுத் திட்ட முன்மொழிவில் குறிப்பிட்டுள்ளோம்.

மேலும் இந்த முன்மொழிவு ஒட்டுமொத்த வடக்கு மாகாண சபையினுடையது - என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்-

எமது தீர்வுத் திட்டம் சகல நாடுகளின் தூதுவர்களுக்கும் கையளிக்கப்படும். நாம் சமஷ்டியைத் தான் கோரியுள்ளோம்.

சிங்களத் தலைவர்கள் தற்போது ஒற்றையாட்சியைத் தூக்கிப் பிடிக்கின்றனர். நாங்கள் ஒரு போதும் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. நிரந்தர நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், சிங்களத் தலைவர்கள் சமஷ்டியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தென்னாபிரிக்காவில் உண்மை கண்டறியப்பட்ட பின்னரே அங்கு நல்லிணக்கம் உருவானது. அதே போன்று இங்கும் உண்மை கண்டறியப்பட வேண்டும். அவ்வாறு கண்டறியப்பட்டாலே நிரந்தர நல்லிணக்கம் உருவாகும் - என்றார். (ற-5)

## செல்வாவோடு தீர்த்திருந்தால் பிரபாகரன் வந்திருக்கமாட்டார்

யாழ்ப்பாணம், மே 25

வேலுப்பிள்ளை செல்வநாயகத்துடன் சிங்களத் தலைவர்கள் பிரச்சினையைத் தீர்த்திருந்தால் வேலுப்பிள்ளை பிரபாகரன் இந்த அரங்குக்கு வந்திருக்க மாட்டார். அதேபோன்று இராஜவரோதயம் சம்பந்தன் - கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரனுடன் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைச் சொல்ல முடியாது. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்துடன், சிங்களத் தலைவர்கள் எமது பிரச்சினையை பேசித் தீர்த்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்யாமையால்தான், வேலுப்பிள்ளை பிரபாகரன் இந்த அரங்குக்கு வரவேண்டி வந்தது.

இப்போதும் எமது தலைவர்களான இராஜவரோதயம் சம்பந்தன் - கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரனுடன் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைச் சொல்ல முடியாது. அடக்கு முறைகள் தொடர்ந்ததால் என்ன நடந்தது என்பதை கடந்த கால இலங்கையின் வரலாறுகள் சொல்லும் - என்றார். (ற-5)

## கடமை நேரத்தில் பேஸ்புக் பாவித்தால் இனிச் சிக்கல்!

கொழும்பு, மே 25

கடமை நேரத்தில் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத் தளங்களைப்பயன்படுத்தும் அரச ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பொது நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார இது குறித்து தெரிவித்துள்ளதாவது-

அரச ஊழியர்கள் தங்கள் கடமை நேரத்தில் பேஸ்புக் போன்ற சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்துவதில் கூடுதல் நேரத்தைச் செலவிடுவது தெரிய வந்துள்ளது.

அண்மையில் தொழிற்சங்கம் ஒன்று மேற்கொண்ட சுயாதீன ஆய்வொன்றின் பிரகாரம், ஒவ்வொரு அரச ஊழியரும் சராசரியாக ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரத்தை பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தள பாவனை மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு செலவழிக்கின்றனர் என்று தெரிய வந்துள்ளது.

தற்போதைக்கு ஒன்பது இலட்சம் அரச ஊழியர்கள் சேவையில் உள்ளனர். இதன்பிரகாரம் ஒருநாளைக்கு பதினெட்டு இலட்சம் மணித்தியாலங்கள் மனித உழைப்பு வீணடிக்கப்படுகின்றது.

இதனைக் கருத்திற் கொண்டே அரச ஊழியர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாடு ஒன்றைக் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது.- என்று குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-5)

## தங்கச்சங்கிலியை அபகரித்து தலைமறைவான இளம்பெண்

### சுதுமலை அம்மன் ஆலயத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 25

ஆலயத்தில் தனியே நின்று அழுது கொண்டிருந்த சிறுமியை அதன் தாயாரிடம் சேர்ப்பதாகக் கூறித் தந்திரமாக அழைத்துச் சென்ற இளம் பெண் ஒருவர், சிறுமி அணிந்திருந்த 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

தாயையும் தவறவிட்டு, சங்கிலியையும் பறிகொடுத்த நிலையில் அலைந்து திரிந்த சிறுமி அங்கு நின்ற அடியார்களின் உதவியுடன் தாயிடம் சேர்க்கப்பட்டார்.

இந்த நூதனத் திருட்டு சுதுமலை அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழாவின் போது நடைபெற்றுள்ளது.

தேர்த் திருவிழா பார்ப்பதற்காக 5 வயது மகளுடன் ஆலயத்துக்குள் சென்ற சாவற்கட்டைச் சேர்ந்த பெண், அடியார்களின் கூட்டத்தின் மத்தியில் மகளைத் தவறவிட்டு விட்டார். தாயைத் தேடி அழுது கொண்டிருந்த இந்தச் சிறுமியை அணுகிய இளம் பெண்ணொருவர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அம்மாவிடம் சேர்ப்பதாக அழைத்துச் சென்று சிறுமி அணிந்திருந்த 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைத் திருடிச் சென்றுள்ளார்.

தாயையும் தவறவிட்டு சங்கிலியையும் பறிகொடுத்த நிலையில் அழுது கொண்டிருந்த சிறுமி அடியவர்களின் உதவியுடன் தாயிடம்ஒப்படைக்கப்பட்டார்என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-115)

## பேராசிரியர் கனகரத்தினம் காலமானார்

யாழ்ப்பாணம், மே 25

விபத்தில் காயமடைந்த பேராதனைப் பல்கலைக்கழக ஓய்வு நிலை இந்துநாகரிகப் பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம் சிகிச்சை பயனின்றி நேற்று காலை 70 ஆவது வயதில் உயிரிழந்தார்.

இயக்கச்சியில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற விபத்தொன்றில் காயமடைந்த அவர், யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று காலை உயிரிழந்தார்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட இவர் 30 ஆண்டுகளுக்கு மேலாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் இந்து நாகரிக விரிவுரையாளராகவும் நிறைவாக துணைப் பேராசிரியராகவும் பணியாற்றியவர். அத்துடன் நூலாசிரியர், பதிப்பாசிரியர், மலராசிரியர் எனப் பன்முக ஆளுமைகளைக் கொண்டவர். ஆறுமுகநாவலரதும் அவரது மாணவர் பரம்பரையினரதும் புலமைத்துவம் தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டவர். பண்பாட்டியல் என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவரின் இழப்பு இலங்கை சைவத் தமிழுலகுக்கு ஈடு செய்யமுடியாததாகும் - என யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் தெரிவித்துள்ளார். (ற-ரி)

## போக்குவரத்துக்கு இடையூறு அபராதத்துடன் சீர்திருத்தம்

பொது இடத்தில் மதுபானம் அருந்தி, போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த நபருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும், 100 மணித்தியாலங்கள் சமூதாய சீர்திருத்த கட்டளையும் மல்லாகம் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டது.

குறித்த நபரைப் பிணையில் விடுவித்ததுடன், வழக்குமீண்டும் எதிர்வரும் ஜூலை மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற-ஐ-107)

## வவுனியா ரயில் கடவைக் காப்பாளர்கள் இடரால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

வவுனியா, மே 25

வவுனியா மாவட்ட ரயில் கடவை காப்பாளர் சங்கம் இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்முகமாக, அனைத்துஊழியர்களினதும் ஒரு நாள் கொடுப்பனவான 250 ரூபாவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முன்வந்துள்ளது என்று வவுனியா மாவட்ட ரயில் கடவைக் காப்பாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.கே.றொகான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ரயில் கடவை ஊழியர்களுக்கு பொலிஸ் திணைக்களம் ஊடாகவே சம்பளம் வழங்கப்படுகின்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் வெள்ள இடர் காரணமாக, அசாதாரண சூழ்நிலைக்குள் சிக்கித் தவிக்கும் உறவுகளுக்கு உதவும் முகமாக வவுனியா மாவட்டத்தில் பணியாற்றும் 75 ஊழியர்களின் விருப்பத்துக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒருநாள் கொடுப்பனவை இடர் நிவாரண முகாமைத்துவ மத்திய நிலையத்துக்குஅனுப்பி வைக்குமாறு, வவுனியா பொலிஸ் அத்தியட்சகரைக் கடிதம் மூலம் கோரியுள்ளது.

பொலிஸ்அத்தியட்சர் இந்தச்செயற்பாட்டுக்குப் பாராட்டுத் தெரிவித்ததுடன், உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு குறித்த பணத் தொகைநிவாரணத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என உறுதியளித்தார் - என்று தெரிவித்தார். (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நியத்த ஜய

வெற்றி வாரம் : 464
திகதி : 24.05.2016
வர்ணம் : மஞ்சள்

விஷேட வெற்றி இலக்கம்
**2103**

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 10,386,560/=

வெற்றி இலக்கங்கள்: **19 33 36 53**
ஆங்கில எழுத்து: **Q**

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ vd ilg; nra;J 1919 இற்கு அனுப்பவும்.
Tel: 011 4 824 824

27.05.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

---

## லக்ஸ்பதி

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 24.05.2016 | 1982 | நீலம் |

வெற்றி இலக்கங்கள்: **18 38 48 50**

வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,845,800/-

2016-05-27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

---

## கோடிபதி ஷனிடா

வெற்றி வாரம் 013
2016-05-24

அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.81,388,320/-

2016-05-27 வெள்ளிக்கிழமை செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
**B 15 24 66 77**

தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk

---

## ஆலய திருப்பணி வேலைக்கான கேள்வி அறிவித்தல்

ஆலய திருத்த வேலைக்கான கேள்வி ஆலய திருப்பணிச்சபையினால் கோரப்படுகின்றது.

குறித்த வேலைக்கான கேள்வி வைப்புப் பணத்தையும்,கேள்விப் பத்திரக்கட்டணத்தையும் செலுத்தி படிவத்தினை கோயில் திருப் பணிச்சபையிடம் பெற்றுக்கொள்ளலாம்.

01.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 2016.05.29 முற்பகல் 11.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2016.06.04 முற்பகல் 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி 2016.06.04 முற்பகல் 10.30 மணிக்கு
04. விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் கோயில் திருத்த வேலைகள் செய்த முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் கேள்விப் பத்திரத்தினை பெற்றுக் கொள்ளவும்.

**தலைவர்**
**ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி தேவஸ்தான திருப்பணிச்சபை,**
**கல்வியங்காடு.**

---

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி அதிபர் **அருட் தந்தை ஜே.ஏ.ஜேசுதாஸ்** அவர்களது அன்புத் தாயார் **அமரர் விக்டோரியா (நல்லம்மா) யோசப் அந்தோனிப்பிள்ளை** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவிப்பதோடு அவர்க ளின் ஆத்மா சாந்தியடைய இறைவ னைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரி கழகம்**
**யா/புனித ஹென்றியரசர் கல்லூரி**
**இளவாலை.**

---

## கண்ணீர் அஞ்சலி



வவுனியா மாவட்ட செயலகத்தில் உதவி மாவட்டச் செயலாளராக கடமையாற்றும் **நா.கமலநாதன்** அவர்களின் பாசமிகு தந்தையார் **கந்தவனம் நாகலிங்கம்** (ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்) அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.

**மாவட்டச் செயலகம்**
**வவுனியா.**

**வவுனியா அரசாங்க அதிபரும்,**
**நிர்வாக உத்தியோகத்தர்களும்.**

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் **செல்வி.ம.மங்களவதனி** அவர்களின் தாயார் **திருமதி சிவசோதி மகாதேவா** அவர்கள் 23.05. 2016 அன்று இறைபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். யாழ் கல்வி வலய நலன்புரி சங்கத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.

**நலன்புரி சங்கம், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

---

# இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
## சிங்களமொழிப் பாடநெறி– 2016/17

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் மொழிக் கற்கைகள் துறையினால் பின்வரும் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அனுமதித் தகைமைகள்

- 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் இக் கறகைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்
- இப்பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு எந்தவித கல்வித் தகைமையும் அவசியமில்லை ஆயினும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் 2016.06.12 ஆம் திகதி நடைபெறவுள்ள தரப்படுத்தல் பரீட்சைக்கு விண்ணப்பித்த நிலையத்திற்கமைய தோற்றுதல் கட்டாயமானதாகும்.
- 2016 ஆம் ஆண்டிற்குமுன் ஆரம்பப் பாடநெறியில் தகுதிகாண் தகைமையை (Eligibility) பெற்றவர்கள் தரப்படுத்தல் பரீட்சைக்குத் தோற்றவேண்டியதில்லை.
- 2015/2016 ஆம் ஆண்டில் ஆரம்பப் பாடநெறியினைத் தொடர்ந்தவர்களில் இறுதிப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு அடிப்படைப் பாடநெறியினைத் தொடர்வதற்கான கற்கைப் பொதியானதுஅனுப்பிவைக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களைwww.ou.ac.lkஎன்ற இணையத்தளத்திற்குப் பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும். அவ்வாறன்றி விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் பிராந்திய / கற்கை நிலையங்களில் பெற்றுக் கொள்ளமுடியும்.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண்வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 2223374<br>076 - 6596615 |
| வவுனியா கற்கை நிலையம் | இல 366, கண்டிவீதி, தேக்கவத்தை வவுனியா. | 024 - 2222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155ஆம், மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 02 1- 2283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 071 - 3522367 |
| மன்னார் கற்கை நிலையம் | தலைமன்னார் வீதி, மன்னார் | 077 - 5625352 |

மேலதிக விவரங்களுக்கு உதவிப் பணிப்பாளர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதிகொக்குவில் என்னும் முகவரியுடனோ அல்லது 021 222 3374 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 31.05.2016

பதிவாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

---

## வாகனங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்
## தந்திரோபாய நகர அபிவிருத்தித்திட்டம்
## பெரு நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் அமுல்படுத்தப்படும் மேற்படி செயற்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட செயற்திட்ட அமுலாக்கல் பிரிவிற்காக வாகனங்களை குத்தகை அடிப்படையில் பணிக்கமர்த்துவதற்குரிய கேள்வி கோரப்படுகின்றது.

தேவைப்படும் வாகனங்கள்

| வாகனம் | எண்ணிக்கை | விவரம் |
|---|---|---|
| கார் | 02 | Full option, A/C, 1300CC அல்லது அதற்கு மேல் உற்பத்தி வருடம் 2010 அல்லது அதற்கு பிந்தியது |
| வான் | 02 | Full option dual A/C, இருக்கைகள் - 08 உற்பத்தி வருடம் 2009 அல்லது அதற்கு பிந்தியது |
| டபிள்கப் | 02 | Full option A/C, உற்பத்தி வருடம் 2009 அல்லது அதற்கு பிந்தியது |

திங்கள் முதல் வெள்ளி வரையான வழமையான அலுவலக வேலை நாள்களில் காலை 7.30 மணி முதல் மாலை 5.00 மணிவரையான சேவை.

கூறுவிலையானது மாதம் 2500km இற்கான வாடகைப் பெறுமதி, மேலதிக ஒவ்வொரு கிலோமீற்றருக்கான கட்டணம் மற்றும் சாரதியின் கொடுப்பனவு (மேலதிக நேரம், பட்டா மற்றும் வெளியிடப்பயணங்களுக்கான இரவுக்கான கொடுப்பனவு) ஆகியவற்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

நிபந்தனைகள், விதிமுறைகளுடன் கூடிய கூறுவிலையினை மூடிய உறையிலிட்டு கீழ்காட்டிய முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபாலிலோ 03.06.2016ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திட்டப் பணிப்பாளர்,
தந்திரோபாய நகர அபிவிருத்தித் திட்டம்
பெரு நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
4ஆம் மாடி, செத்சிறிபாய முதலாம் கட்டம்,
பத்தரமுல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்விப் பத்திர விளம்பரத் திருத்தம்

" விலை கேள்வி கோரல், முதலமைச்சர் அமைச்சு, வடக்கு மாகாணம், குறித் தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி கொடை (PSDG 2016) என தலையங்கமிடப்பட்டு 20 ஆம் திகதியில் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி விளம்பரத்தில் தொடர் எண் 4 இன் வேலைக்கான தேவையான தரம் C8 எனவும், தொடர் எண் 6 இன் வேலைக்கான தேவையான தரம் C7 எனவும் மாற்றி வாசிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்".

**தலைவர்**
**மாகாண அமைச்சு பெறுகைக்குழு**
**முதலமைச்சர் அமைச்சு**
**வடமாகாணம்**
**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி என்**
**021 205 7114**

# வெசாக் தினத்தில் மதுபானம் விற்பனை ரூ.5 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், மே 25

அச்செழுவில் வெசாக் தினத்தன்று அரச மது பானப் போத்தல் ஒன்றை விற்பனை செய்த சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அதி கூடிய விலைக்கு மதுபானத்தை விற்பனை செய்யும் நோக்கில், சுன்னாகம் பகுதியில் இருந்து அச்செழு பூலசிட்டி பகுதிக்கு, அரச மதுபானம் 750 மில்லி லீற்றர் கொள்ளவு உடைய போத்தல் ஒன்றை எடுத்து வந்த நபரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்திருந்தனர். இது தவிர கீரிமலைப் பகுதியில் உள்ள பஸ் நிலையத்தில் வைத்து 4 அரச மதுபானப் போத்தல்களை விற் பனை செய்த மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற-ஜ-107)

# கஞ்சாவுடன் கைதான இளைஞனுக்கு அபராதம்

அச்செழு பூலசிட்டி பகுதியில் கஞ்சாவுடன் கைதான இளைஞனுக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித் தது நீதிமன்று.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவர் 10 கிராம் கஞ்சாவைத் தனது உடைமை யில் வைத்திருந்த குற்றச் சாட்டில் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேக நபரை நேற்று முன்தினம் மாவட்ட நீதி மன்றில் முற்படுத்தியபோது குறித்த அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட் டது. (ற-ஜ-107)

# வெசாக் நிகழ்வுகள்

ஒட்டுசுட்டான் 64 ஆவது இராணுவப் படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் வெசாக் பண்டிகை நிகழ்வுகள் கடந்த வெசாக் தினத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லை மாவட்டச் செய லாளர் மற்றும் மேலதிக மாவட்டச் செய லாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆங்காங்கு வெசாக் கூடுகள் கட்டப் பட்டு, மின்விளக்குகளால் அலங்கரிக் கப்பட்டதுடன், இராணுவத்தினரால் இனிப்புப் பண்டங்களும் வழங்கப்பட் டன. (ற-ஜ-500)

## சாவகச்சேரி பிரதேசசபை - கொடிகாமம்
## Chavakachcheri Pradeshiya Sabha - Kodikamam

### சபை நிதி வேலைத்திட்டத்திற்கான கேள்வி கோருதல்

01.தலைவர் பெறுகைக்குழு சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிட மிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02.கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக் கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல்

03. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் **செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம்** (**தொலைபேசி:** 021-3734825 மின்னஞ்சல் - chavakachcheripsl@yahoo.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 15.00 மணி வரை **25.05.2016** தொடக்கம் **16.06.2016** திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை ,கொடிகாமம்** எனும் இடத்திலிருந்து 25.05. 2016 ம் திகதியிலிருந்து 16.06.2016 வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.877.50 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

05. விலைக் கேள்விகள் 16.06.2016 ம் திகதியன்று 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகியவற்றை பூரணப்படுத்தி "**தலைவர் பிரதேச சபை பெறுகைக்குழு சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம்**" எனும் முகவரிக்கு உரிய காலத்திற்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும் காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். 16.06.2016 ஆம் திகதியன்று 14.30 மணிக்கு விலைக் கேள்விகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமூகமளிக்க லாம்.

06.கேள்வி பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாக செலுத்தப்பட வேண்டும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | சங்க வீதி புனரமைப்பு -நாவற்குழி | 0.435 | 03 மாதம் | C10 | 4400.00 |
| 02 | கைதடிநுணுவில் மட்டுவில் தெற்கு ஊரெல்லை வீதி புனரமைப்பு- மட்டுவில் தெற்கு | 0.392 | 03 மாதம் | C10 | 4000.00 |
| 03 | CCTMS பாடசாலை வீதி புனரமைப்பு – எழுதுமட்டுவாள் தெற்கு | 0.392 | 03 மாதம் | C10 | 4000.00 |
| 04 | புழைய வாய்க்கால் வீதி புனரமைப்பு – எழுதுமட்டுவாள் வடக்கு | 0.348 | 03 மாதம் | C10 | 3500.00 |
| 05 | கரம்பகம் ஊரெல்லை வீதி புனரமைப்பு – கரம்பகம் | 0.392 | 03 மாதம் | C10 | 4000.00 |
| 06 | அண்ணமார் வீதி புனரமைப்பு -இராமாவில் | 0.392 | 03 மாதம் | C10 | 4000.00 |
| 07 | பிலிப் வீதி புனரமைப்பு – சந்திரபுரம் | 0.392 | 03 மாதம் | C10 | 4000.00 |
| 08 | மிருசுவில் உசன் ஊரெல்லை வீதி புனரமைப்பு (மிருசுவில் புகையிரத நிலைய வீதி | 0.392 | 03 மாதம் | C10 | 4000.00 |
| 09 | சேர்ச் வீதி புனரமைப்பு மட்டுவில் | 0.347 | 03 மாதம் | C10 | 3500.00 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
**24.05.2016**
(அ/21062) (11,18)

## குருக்கள் தேவை

**பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபன சித்தி விநாயகர் ஆலயத் துக்கு குருக்கள் / அர்ச்சகர் தேவை. குடும்பமாக இருக்கக் கூடியவர்கள் உடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**077 601 7086, 077 087 8034**
சித்திவிநாயகர் ஆலய நிர்வாகம்.

## கார் விற்பனைக்கு

**நல்ல நிலையிலுள்ள** Toyota Prius 3rd Generation yom. 2011 yor 2014 cruise contal, Auto Mirror folder, push start, Foglinght, welcom Light, Dual. multi fuction, 8 Air Bags, Surround sound system, original carpet, Door visor, LED Interior Lights, Reveres camera. 1st Owner, mint condition.

Contect : **077 322 0722**

## விலைமனுக்கோரல்
## பாதுகாப்புச் சேவை
## மாவட்ட செயலகம், முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 06 பிரதேச செயலகங்களிலும் பாதுகாப்புச் சேவையை ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றுவதற்காக பதிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு.

01. நன்கு பயிற்றப்பட்டதும் ஆற்றலுடைய தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட வேண்டும்.
02. பாதுகாப்பு சேவை 12 மணித்தியாலங்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.
03. சேவைக்கான ஒப்பந்தம் ஒரு வருடத்திற்கு கைச்சாத்திடப்படும். இக்காலத்திற் குள் சேவைகள் திருப்தியற்றதாயின் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படலாம்.
04. இச்சேவைக்கு பயன்படுத்தப்படும் உத்தியோகத்தர்களுக்கான நாளாந்த. மாதாந்த சம்பளம் தெளிவாகக் குறிப்பிடப்படுவதுடன் ( VAT உடனும் VAT இன்றியும்) ஊழியர்களுக்குரிய ETF,EPF மற்றும் அத்துடன் தொடர்புடைய பாதுகாப்பு வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.
05. பாதுகாப்புச் சேவை வழங்குவதற்காக பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்து வதற்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய சகல வரி அறவீடுகளும் சகல வரி செலுத்துதல்களிற்கும் ஒப்பந்தகாரர் உட்படுதல் வேண்டும்.
07. கடந்தகால, நிகழ்கால அனுபவச்சான்றிதழ்களையும் பெறுகை விண்ணப் பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி இல 0212290032 ஊடாகவோ நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொருத்தமான பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் குறித்த சேவையின் விலைமனு விண்ணப்பங்களை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 15.06.2016 ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு முன்னதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " பாதுகாப்புச் சேவை விலைமனு " எனக் குறிப்பிடல் வேண்டும்.

**திருமதி.றூ.கேதீஸ்வரன்**
**மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம்,**
**முல்லைத்தீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட கோழிகள் கடும் மழையால் இறப்பு

## கிளிநொச்சி மாவட்டச் செயலர் தகவல்

கிளிநொச்சி, மே 25

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட கோழிகள் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக இறந்துள்ளன என்றும், பல கோழிகள் காணாமற்போயுள்ளன என்றும் பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன - இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அண்மையில் பெய்த கடும் மழையால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக மாவட்டச் செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் நிறுவனங்களாலும், சுயமாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பு திட்டத்தில் கோழி வளர்ப்பை மக்கள் மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் அண்மையில் பெய்த கடும் மழையால், மக்களால் பராமரிக்கப்ட்டுவளர்க்கப்பட்ட பெருந்தொகையான கோழிகள் இறந்துள்ளன. மற்றும் பல கோழிகள் வெள்ளத்துடன் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்தநிலையில் பல குடும்பங்கள் மீண்டும் தமது வாழ்வாதாரத்தை இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. மக்களுடைய நிலையைக் கருத்திற்கொண்டு தற்போது பாதிக்கப்பட்ட மக்களின் விவரங்கள் அனைத்தையும் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த அறிக்கைகள் கிடைக்கும் பட்சத்தில் குறித்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பில் ஆராயப்படும்.–என்றார்.

(ற–ஜ–21,101)

## யாழ்ப்பாணத்தில் இன்று மின் தடை

[illegible]யர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மின் தடைப்பட்டிருக்கும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, யாழ். பிரதேசத்தில் பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரதக் கடவையிலிருந்து தட்டாதெருச் சந்தி வரை, கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோயிலிருந்து சிவன் கோயில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடிச் சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் இருந்து அரசடி வீதிச் சந்தியூடாக ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ். வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ.தம்பிலேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி வீதி, கன்னாதிட்டி வீதி, மணிக்கூட்டு வீதி, சிவன்பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, கம்பஸ்லேன், நாவற்குழி, பனை வள ஆராய்ச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளான்ட் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் தீவீரகம (பெரிய உளுக்குளம்), கோவில் குளம் சிவன் கோயிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப் பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

(து–வ–ரி)

## டெங்குத்தொற்றைத்தடுக்க விசேட நடவடிக்கைகள்

சாவகச்சேரி,மே 25

அண்மையில் பெய்த மழையையடுத்து வடமாகாணத்தில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடாக விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை மாகாண சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தொடக்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாகாணத்திலுள்ள அனைத்துச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும், டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெறும் என்று மாகாண சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், இன்று புதன் கிழமை மந்துவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும், நாளை வியாழக்கிழமை கைதடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும், எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும், எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி நகர் பிரிவிலும் 29 ஆம் திகதி சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பிரிவிலும் விசேட டெங்குக் கட்டுப் பாட்டுப் பரிசோதனைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ற–ஜ–9)

**அறிவித்தல்**

பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்குமாகாணம்

**வடக்கு மாகாண பொதுச்சேவையின் நன்னடத்தை உத்தியோகத்தர் சேவையின் தரம் - II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் வரி உத்தியோகத்தர் சேவையின் (மாகாண இறைவரித் திணைக்களம்) தரம் - II பதவிக்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் - 2016**

தமிழ்/சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் மூலம் நிரப்பப்படும். இந்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.06.25 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk →Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத் தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அந்த மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ரூ.வரதலிங்கம்**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம் (சி.2081)(13.18)

**வேலையாள் தேவை**
கடை ஒன்றுக்கு வேலையாள் தேவை. சம்பளம் 12000/= வழங்கப்படும்.
076 639 8980

**20L DSI Mount Spring**
20L போத்தலில் அடைத்த சுத்தமான குடி தண்ணீர் உங்கள் வீடுகளுக்கு கொண்டு வந்து தரப்படும். (ஜ/825)(12.8)
077 254 3253

**விஷேட பல் வைத்திய சேவை**
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**பணிப் பெண் தேவை**
வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (ஜ/825)(12.18)
077 704 1767, 075 203 5424

**வைரஸ் பிறிண்டேர்ஸ்**
கே.கே.எஸ் வீதி, இணுவில்.
அச்சுத்துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.
+ ரைப்பிங் (Computer Typing)
+ கிரபிக்ஸ் டிசைனர் (Graphic Designer)
+ புத்தகம் கட்டுனர் (Book Binder)
அனுபவமுள்ளவர்கள் நேரில் சமூகம் தரவும்
தொடர்பு : 021 224 1815

**வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா தலைமையில் ஆசிரிய மகாநாடு - 2016**

காலம் : 2016.05.26 (வியாழக்கிழமை)
2016.05.27 (வெள்ளிக்கிழமை)
இடம் : நகரசபை கலாசார மண்டபம் வவுனியா

**முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி க.சீனிவாசகம் அரங்கு 2016.05.26 வியாழக்கிழமை**

தலைமை : திருமதி அன்ரன் சோமராஜா (வலயக்கல்விப் பணிப்பாளர்)
பிரதம அதிதி : உயர்திரு.செ.உதயகுமார் ( வடமாகாண கல்விப் பணிப்பாளர்)
சிறப்பு உரை : பேராசிரியர் - சி.ஸ்ரீசற்குணராஜா (பீடாதிபதி விஞ்ஞான கற்கைகள் பீடம்)

**முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் வீ.ஆர்.ஏ. ஒஸ்வேல்ட் அரங்கு 2016.05.27 வெள்ளிக்கிழமை**

நேரம் : காலை 9.00 மணி
பிரதம அதிதி : உயர்திரு.இ.ரவீந்திரன் (செயலாளர் - கல்வி பண்பாட்டு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு வடமாகாணம்)
சிறப்புரை : பேராசிரியர் மா.சின்னத்தம்பி

ஆய்வரங்கு கண்காட்சி, பேருரைகள், கலைநிழ்வுகள் ஆகியன இடம் பெறும்.

(கண்காட்சி வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெறும்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
கல்விச் சமூகம்
வவுனியா தெற்கு, வலயக் கல்வி அலுவலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCIES

**Applications are invited by me up to 30th June 2016 from suitably qualified persons for the following posts.**

1. **POST OF WORKS ENGINEER [CIVIL] GRADE III ( Vavuniya Campus)**

**QUALIFICATIONS:**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution.

**OR**

(B) Should possess a National Diploma in Technology specializing in Civil Engineering or equivalent, with at least seven (07) years of experience in Civil Engineering works in a recognized establishment.

**NOTE**: - The in-plant training period shall not be counted for the period of experience.

**Salary Scale**: U- EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645-36,160/- p.m.
**Selection** : By structured interview.

2. **ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (University of Jaffna)**

**Qualifications:**

Should possess a Bachelor of Law Degree from a recognized University/HEI or Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar.

**Salary Scale** : U-EX 1(II) - Rs. 26,020 – 3x585 – 27,775 (EB) 28,420; 12 x645 – 36,160/- p.m.
**Selection** : By Structured Interview.

3. **UNIVERSITY MEDICAL OFFICER (University of Jaffna/ Kilinochchi Premises / Vavuniya Campus)**

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.
**Qualifications:**
Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.
**NOTE**: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting of study leave to the selected candidates to obtain post graduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale** : U- MO 1 (II) - Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/- p.m.
**Selection** : By Interview.

4. **CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna/ Vavuniya Campus)**
**Qualifications:**
1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/ Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U- EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28, 420;12X645 - 36,160/- p.m.
**Selection** : By Structured Interview.

5. **POST OF SUB WARDEN (FULL TIME) – FEMALE (University of Jaffna)**
**Qualifications** :
A graduate of a recognized University. Preference will be given to those with experience in administration and management of hostel.

**Salary Scale** : U-MN 3 (II) - Rs.22,240-18x320-28,000 p.m
**Selection** : By Interview

**SERVICE CONDITION**
Full-time Sub-Wardens shall reside in the halls of residence to which they are appointed. A sum to be stipulated by the Higher Educational Institution will be recovered from their salaries to meet the cost of Board.

6. **SUPERVISOR (CIVIL), GRADE III (University of Jaffna)**

**Qualifications:**
a) National Certificate in Technology or equivalent qualifications with 3 years experience may be obtained while following the NCT course;

**OR**

b) G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings
with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

**Salary Scale**: U-MT1 (IIIA) - Rs.16,535 - 7x155; 10x185 - 19,470 p.m
**Selection** : By Interview

7. **SUPERVISOR (LANDSCAPE) GRADE III (Vavuniya Campus)**
**Qualifications:**
i) G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings.
**AND**
ii) Successful completion of one year's practical training course in Agriculture conducted by the Department of Agriculture or equivalent.
**Salary Scale**: U-MT1 (IIIA) - Rs.16,535 - 7x155; 10x185 - 19,470 p.m
**Selection** : By Interview

8. **PUBLIC HEALTH INSPECTOR GRADE III (University of Jaffna)**
**Qualifications:**
Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.
**Salary Scale** : U-MT 1 (III A) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection** : By Interview

9. **PUBLIC HEALTH NURSE (University of Jaffna)**
**Qualifications:**
a) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or Public Health Service in a recognized Institution.

**OR**

b) Certificate of competence as a Nurse recognized by the Sri LankaMedical Council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects of nursing.
**Salary Scale** : U-MT 1(II) - Rs. 18,360 – 7x185; 9x245 – 21,860 p.m.
**Selection** : By Aptitude Test and Interview

10. **NURSING OFFICER GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)**
**Qualifications:**
(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

**AND**

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.
**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection** : By Aptitude Test and Interview

11. **ELECTRICIAN, GRADE II ( University of Jaffna)**
**Qualifications:**
i. Pass in the 8th standard.
ii. Should be conversant with
a) Detecting faults, repairs and assembly of materials, transformers and all types of machinery and appliances, cables, wires and their ratings, measuring instrument and their uses various types of wiring, joining, testing meters and small transformers ;
b) Reading and understanding drawings and diagrams. Reading scales and record fractional dimensions;
c) Care and the use of the tools in the trade.
iii. Not less than 2 years' experience as an electrician in a government department, State Corporation or in a recognized establishment.
**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m
**Selection** : By trade test and interview

12. **MASON GRADE II (Vavuniya Campus)**
**Qualifications:**
i. Pass in the 8th standard
ii. Should be conversant with –
a. Brick work and the different types of courses used in the construction of wall footings, wall arches, taper pillars, chimneys, sewer chambers etc.;
b. All types of plaster, mixing and laying of reinforced concerted;
c. Reading plans and setting out foundations for simple constructions;
d. Colour washing including use of emulsion paint.
iii. Not less than 2 years' experience in masonry
**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m
**Selection** : By trade test and interview

13. **PLUMBER, GRADE II (Vavuniya Campus)**
**Qualifications:**
i. Pass in the 8th standard.
ii. Should be conversant with
a) Reading scales up to 1/64"and maintenance and current use of tools;
b) Laying C.I and G.I and lead pipes including various joints and their testing;
c) Repair of ball-valves, cisterns etc., and reading and understanding of simple drawings.
iii. Not less than 2 years' experience in plumbing.
**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m
**Selection** : By trade test and interview

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**
**Note:** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**
1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non–Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University **or** the forms available in the University website (www.jfn.ac.lk) annex with the Money Order/ Postal Order to the value of Rs.100/-. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted. **(Please attch copies of relevant documents)**

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

**REGISTRAR**
**24/05/2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராறு மண் அகழ்வால் விவசாயிகள் பாதிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு,மே 25
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மணல் அகழ்வு இடம்பெறுவதால் பேராறு மிகவும் ஆழமாக்கப்படுகின்றது. அதனால் ஆற்று நீரை நம்பிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான இடங்களில் ஒன்றான ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள பேராற்றுப் பகுதியில் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் பலர் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். அவர்கள் அனுமதி பெற்றே தாம் மண் அகழ்வை மேற்கொள்கின்றோம் என்று கூறுகின்றனர். பேராற்றுப் பகுதியிலும், ஆற்றினுள்ளும் அள்ளப்படும் இந்த மண் அகழ்வால் ஆற்று நீரை நம்பியிருக்கும் விவாசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.
சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வை மேற்கொள்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆற்று மண்ணை அகழ்வதற்கு அனுமதி வழங்குவதை நிறுத்த வேண்டும்.- என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

> “பேராற்று காட்டுப் பகுதி எங்களுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு மண் அகழ்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றால், எங்களிடம் அனுமதி கட்டாயம் பெறப்பட வேண்டும். நாங்கள் அனுமதிக்க வேண்டுமானால் அதற்கு முன்னர் கனிம வளங்கள் பிரிவு அனுமதிக்க வேண்டும்.”

இது தொடர்பாக ஒட்டு சுட்டான் பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது-
பேராறு பகுதியில் பிரதேச செயலாளரின் கீழ் ஒரு எல்லையும், வன பரிபாலன திணைக்களத்தின் கீழ் இன்னொரு எல்லையும் உள்ளன.
பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் சட்ட விரோதமான மண் அகழ்வுகள் இடம்பெறுவதில்லை. தற்போது வீட்டு மணலுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. சட்ட விரோதமாக மண் அகழ்வை மேற்கொள்வோர் தொடர்பில் கவனம் எடுக்கப்படும்.- என்று தெரிவித்தார்.
ஒட்டு சுட்டான் பிரதேசத்துக்குப் பொறுப்பான வன பரிபாலன திணைக்கள அதிகாரியைத் தொடர்பு கொண்டு இது தொடர்பில் கேட்டபோது-
பேராற்று காட்டு பகுதி எங்கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு மண் அகழ்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றால், எங்களிடம் அனுமதி கட்டாயம் பெறப்பட வேண்டும். நாங்கள் அனுமதிக்க வேண்டுமானால் அதற்கு முன்னர் கனிம வளங்கள் பிரிவு அனுமதிக்க வேண்டும். அடுத்து விவசாயிகள் தங்களுக்குப் பாதிப்பு இல்லை எனத் தெரிவிக்க வேண்டும். அதற்கான அனுமதியை கமக்கார அமைப்புக்கள் எங்களுக்குத் தர வேண்டும். அதன் பின்னரே நாங்கள் மணல் அகழ்வை மேற்கொள்ள அனுமதிப்போம்.
தற்போது மணல் அகழ்வை மேற்கொள்பவர்கள் இவ்வாறான அனுமதிகளைப்பெற்றேமணலை அள்ளுகின்றனர். சட்ட விரோதமாக எவராவது மண் அகழ்கின்றார்களா எனச் சோதனைகள் மேற்கொள்ளப்படும்.- என்றார்.
(ற-ஐ-21,ரி7,500)

# கல்விசார் ஆள்சேர்ப்பில் முறைகேடு உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

அச்சுவேலி, மே 25
கல்வி அமைச்சின் கீழ் உள்ள கல்விசார் சேவைகளுக்கு ஆள்சேர்ப்பு செய்யும் போது, அவற்றின் சேவைப் பிரமாண குறிப்புக்களுக்குப் புறநடையாகவும், பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி அங்கீகாரம் இன்றியும், ஆள்சேர்ப்பு செய்வதற்கு கல்வி அமைச்சு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இந்த வழக்கை இலங்கை ஆசிரியர் சங்கமும், அகில இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சங்கமும் இணைந்து கடந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளன.
கல்வி அமைச்சின் கீழ் இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை கல்வியியலாளர் சேவை, இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை என நான்கு சேவைகள் கல்விசார் நிலையில் உள்ளன.
இந்தச் சேவைகளுக்கு தனித்தனியாக சேவைப்பிரமாணக் குறிப்புக்களும் உள்ளன. மேற்படி சேவைகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்யும் போது, சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைய வர்த்தமானி மூலம் விளம்பரம் செய்து போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதுடன், தெரிவு செய்யப்படும் ஆளணிப் பட்டியலை இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழு அங்கீகாரம் செய்து அனுமதி வழங்க வேண்டும்.
இந்த நடைமுறைக்கு முரணாக அரசியல் பழிவாங்கல் என்ற வகையிலும், அரசியல்வாதிகளின் பரிந்துரையிலும் நியமனங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.
கல்வி அமைச்சின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராகவே உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கை இலங்கை ஆசிரியர் சங்கமும், அகில இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சங்கமும் இணைந்து தாக்கல் செய்துள்ளன.
“கல்வி அமைச்சு சேவைப்பிரமாணக் குறிப்புக்களுக்கு புறநடையாகவும் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி அங்கீகாரம் இன்றியும் நியமனங்களை வழங்குவதற்கு முற்பட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருவதற்கு எதிராகவே தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அதனோடு இணைந்த செயற்பாடாக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம்” என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார். (ற-ஐ-11)

# தேசிய சுற்றாடல் வாரத்தில் கைதடியில் பாதீனிய ஒழிப்பு

## அனைவரையும் இணையுமாறு அழைப்பு

சாவகச்சேரி,மே 25
ஜனாதிபதியின் ஏற்பாட்டில் சுற்றாடல் அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, தேசிய சுற்றாடல் வார நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.
தென்மராட்சி பிரதேச செயலகத்தால் முதல் நாளான எதிர்வரும் 30 ஆம் திகதி; கைதடிப் பிரதேசத்தில் பாதீனியச் செடிகளை அழிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அனைத்துப் பொது மக்களுக்கும் அறிவித்துள்ளார்.
இந்தப் பகுதியில் பராமரிப்பற்ற காணிகளில் காணப்படும் பாதீனியச் செடியை அழித்து, பிரதேசத்தில் பாதீனியத்தை அழிக்கும் நடவடிக்கையாக தேசிய சுற்றாடல் வாரத்தில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கைதடி சமுர்த்தி வங்கிக்கு முன்பாக அனைவரையும் ஒன்றிணையுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

### தொழில்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விருந்தோம்பல் கற்கை நெறிகளுக்கும், ஏனைய கற்கை நெறிகளுக்கும் விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விருந்தோம்பல் கற்கைநெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர் ஆகிய கற்கை நெறிகளுக்கும், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இருசக்கர மற்றும் ஓட்டோ திருத்துநர், அலுமினியப் பொருத்துநர், வீட்டு மின் இணைப்பாளர், மரவேலை தொழில்நுட்ப வியலாளர், பெண்கள் சிறுவர் களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இவற்றில் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), அலுமினியப் பொருத்துநர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகியகற்கைநெறிகளுக்குநிபந்தனைக்குட்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.
இந்தக் கற்கை நெறிகளுக்கான பதிவுகள் இன்று புதன்கிழமையுடன் முடிவடைவதால் விரைவில் இல. 12 கே.கே.எஸ்.வீதி வீரசிங்கம் மண்டபம் முதலாம் மாடியில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலத்தில், சுயவிவரக் கோவை மற்றும் சான்றிதழ்களுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)




சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றால் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் காணப்பட்ட பழைமை வாய்ந்த பெரிய மரம் அடியுடன் சாய்ந்தது. அதனால் நிலைய பணியாளரொருவரது மோட்டார் சைக்கிள் அதனுள் அகப்பட்டு சேதமடைந்தது. (ற-ஐ-9)

# நாவற்குழியில் 5 ஏக்கர் காணி பொலிஸ் திணைக்களத்துக்கு

சாவகச்சேரி, மே 25
நாவற்குழியில் உள்ள வீடமைப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில், 5 ஏக்கர் காணி மட்டுமே பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய காணிகள் எவருக்கும் கையளிக்கப்படவில்லை.- இவ்வாறு வீடமைப்புத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.
நாவற்குழியில் வீடமைப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில், மத்திய தர அலுவலர்களுக்கென ஒதுக்கப்பட்ட 30 ஏக்கர் காணிகள் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று மாகாண சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் போதே வீடமைப்புத்திணைக்கள அதிகாரிகளால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது, நாவற்குழிப் பகுதியில் வீடமைப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் குடியமர்ந்திருந்த, காணியற்ற குடும்பங்களை வெளியேற்றிவிட்டு படையினர் தமக்குச் சொந்தமானது எனப் பெயர்ப்பலகை நாட்டியுள்ளனர். படையினருக்கு எப்போது இந்தக் காணி வழங்கப்பட்டது என மாகாண சபை உறுப்பினர்களால் குழுத் தலைவரிடம் கேட்கப்பட்டது.
அதற்குப் பதிலளித்த வீடமைப்புத் திணைக்கள அதிகாரி, நாவற்குழியில் உள்ள திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில், ஐந்து ஏக்கர் காணி மட்டும் பொலிஸ் திணைக்களத்துக்குக்கையளிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக எந்தவொரு காணியும் படையினக்கோ அல்லது வேறு திணக்களங்களுக்கோ வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார். (ற-ஐ-9)

# அவசர விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 25
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினால் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு அவசர விசேட பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.
‘குருகுலம்’, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி என்ற முவரியில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால், அனைத்து அந்தணக் குருமார்களையும் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மலையாளபுர பகுதியில் உள்ள கிணறு ஒன்றின் அருகே உள்ள வயல் காணியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த உழவு இயந்திரம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சுமார் 35 அடி ஆழமான குறித்த கிணற்றினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. அருகில் உள்ள வயல்களில் நின்றவர்களால் சாரதி சிறுகாயங்களுக்கு உள்ளான நிலையில் மீட்கப்பட்டார். உளவு இயந்திரமும் பல மணி நேரப் போராட்டத்தின் பின்னர் வெளியே எடுக்கப்பட்டது. (ற-ஜ-21)

# குளத்தைப் புனரமைத்த பைக்கோ புதையுண்டது

## வரணியில் சம்பவம்

கொடிகாமம், மே 25

குளம் ஒன்றின் புனரமைப்புக்காக எடுத்து வரப்பட்ட பைக்கோ இயந்திரம், குளத்தினுள் முழுமையாக புதையுண்ட சம்பவம் வரணிப் பிரதேசத்தில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

வரணி இடைக்குறிச்சி மாவில் வயல் வெளிப் பிரதேசத்தில் அமைந்துள்ள வண்ணான்துறைக் குள புனரமைப்பு வேலைகள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வேலைக்காக சிறிய ரக பைக்கோ இயந்திரம் ஒன்று உரியவர்களால் கொண்டு வரப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், பைக்கோ இயந்திரம் குளக்கரையில் புதைந்துள்ளது. சாரதி நிலைமையை உணர்ந்து வெளியே குதித்துத் தப்பி விட்டார்.

இந்த நிலையில் குளத்தில் புதைந்த பைக்கோ இயந்திரத்தை வெளியில் எடுப்பதற்கு வேறொரு பெரிய பைக்கோ இயந்திரம் கூலிக்கு எடுத்து வரப்பட்டு, இயந்திரம் புதைந்திருந்த பகுதி மண்ணை அகழ்ந்த சமயம் ஏற்கனவே புதையுண்ட இயந்திரம் மேலும் மண்ணினுள் புதைந்துள்ளது.

புதையுண்ட இயந்திரத்தை எடுக்க வந்த பைக்கோ இயந்திரமும் தற்சமயம் பெய்த கடும் மழை காரணமாக வெளியில் எடுத்துச் செல்ல முடியாத நிலையில், வெள்ளத்தின் மத்தியில் தாழ்ந்து நிற்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-122)

## ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் சனிக்கிழமை இடம் பெறவிருந்த நிலையில், அவை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன என்று மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டமும், தெரிவும் அடுத்த மாதம் 11 ஆம்திகதி மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் தலைமையில் இடம் பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ற-ஜ-4)

## திறமை நிதியத்துக்கு 8 மாணவர்கள் தெரிவு

வரணி, மே 25

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடப்பாண்டு வேலைத்திட்டத்தில், வறுமையில் திறமை நிதியத்துக்கு 8 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. சாதரண தரப் பரீட்சையில் அதிசிறப்புச் சித்தி பெற்ற, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பிரதேச பாடசாலை மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இது தொடர்பில் 21விண்ணப்பங்கள் கிடைத்திருந்த நிலையில், தெரிவுக்குழு ஒன்றின் மூலம் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ஜ-122)

# தொழில்நுட்ப அலுவலர் சேவைக்கு ஆள் சேர்ப்புச் செய்வதில் நெருக்கடி

## தகைமையுடையோர் இல்லாததால்

சாவகச்சேரி, மே 25

வடமாகாணத்தில் தொழில்நுட்ப அலுவலர் சேவைக்கு போதிய தகைமையுள்ளவர்கள் இல்லாததால், தொழில்நுட்ப அலுவலர் சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய்ய முடியாத நிலை மாகாண சபைக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் வேலைகள் பரிசோதகர் பதவிகளுக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கு மாகாண சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வடமாகாண திணைக்கள அலுவலகங்களில் வெற்றிடமாகக் காணப்படும் 71 தொழில்நுட்ப அலுவலர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக வடமாகாண சபையால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு கடந்த வாரம் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டோரில் 24 பேரே தொழில்நுட்ப அலுவலர் பதவிக்குரிய போதிய தகைமையைக் கொண்டிருந்தனர்.

வடமாகாணத்தின் பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகளால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பான நடவடிக்கைகளை தொழில்நுட்ப அலுவலர்களே மேற்கொண்டு வருகின்றனர்.

தொழில்நுட்ப அலுவலர்கள் பற்றாக்குறையால் பல வேலைத் திட்டங்களை உரிய காலப்பகுதியில் மேற்கொள்ள இயலாதுபோன நிலையில், இந்தப் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்ய மாகாண சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

போதிய தகைமையுள்ளவர்கள் இல்லாததால் இந்தப் பதவிகளுக்கு வேலைப் பரிசோதகர்களை நியமிக்க மாகாண சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் , சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளரால் தமது அலுவலகத்தில் தொழில் நுட்ப அலுவலர் பதவிகளுக்கு 5 பேர்களுக்கான ஆளணி உள்ள போதிலும், தற்போது இருவர் மட்டுமே பணியாற்றுவதால் சபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உரிய காலத்தில் மேற்கொள்வதில் தாமதமேற்படுகிறது.

இதனால் சபையின் ஆளணிக்குரிய தொழில்நுட்ப அலுவலர்களைப் பெற்றுத் தர வேண்டும் என்று கோரியபோதே மேற்கூறிய தகவல்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

(ற-ஜ-9)



## வாள்களுடன் கைதான இளைஞர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், மே 25

சுன்னாகம், கந்தரோடை பகுதியில் அபாயகரமான இரு வாள்களுடன் கைதானார்கள் என்று கூறப்படும், சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய பல சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் , அவர்கள் ஊடாக பெற்றுக்கொண்ட தகவலின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்களான 17, 18 வயதுடைய பாடசாலை மாணவர்கள் கந்தரோடைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் கூறினர்.

அத்துடன் தடை செய்யப்பட்ட வாள்களை உடைமையில் வைத்திருந்த நிலையில், அவற்றையும் பொலிஸார் மீட்டிருந்தனர். இவர்கள் இருவரும் தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் பிரதேசத்தில் உள்ள பிரபல்யமான பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ற-ஜ-4,107)

# தென்மராட்சியில் தூர்ந்துள்ள குளங்கள் குடியிருப்பு நிலங்களாக மாறும் அபாயம்

## நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

சாவகச்சேரி,மே 25

தென்மராட்சிப் பிரதேசத்தில் குளங்கள் போதிய பராமரிப்பின்றி காணப்படுவதால், அவை தூர்ந்து குடியிருப்பு நிலங்களாக மாறும் அபாயம் உள்ளது. பராமரிப்பின்றிக் காணப்படும் குளங்களை சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் ஊடாக புனரமைப்பதுடன் உரிய வாய்க்கால்களையும் சீர் செய்ய வேண்டும். - இவ்வாறு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது

பிரதேசத்தில் முன்னைய காலத்தில் மழை நீர் சேகரிப்பு திட்டத்தின் கீழ் பல இடங்களில் குளங்கள் வெட்டப்பட்டு கால்நடைகளின் பாவனைக்கும், குளத்தை அண்டிய பகுதிகளின் விவசாயத்துக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

அத்துடன் மழை காலங்களில் வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் பல குளங்களை இணைத்து வடிகால்களும் வெட்டப்பட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இந்தக் குளங்கள் போதிய பராமரிப்பின்மையால் காலத்துக்கு காலம் பெய்த மழையால் தூர்ந்து தற்போது குடியிருக்கக் கூடிய அளவுக்கு சமநிலைக்கு வந்துள்ளன. அத்துடன் மழை நீர் வழிந்தோட அமைக்கப்பட்டிருந்த வடிகால்கள் செல்லும் இடங்களில், குடியிருப்பாளர்களால் மதில்கள் அமைக்கப்பட்டு வடிகால்கள் மூடப்பட்டுக் காணப்படுகின்றன.

இதனால் மழை நீர் தேங்கக்கூடிய அளவுக்கு குளம் இல்லாததாலும், மழை வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் வடிகால் இல்லாததாலும் வெள்ளம் குடியிருப்புகளுக்குள் புகுந்து மழை காலங்களில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குளங்கள் புனரமைக்கப்பட்டு, வடிகால்களும் சீர் செய்யப்பட்டால் மழை நீர் சேகரிக்கப்படுவதுடன், கால்நடைகளின் பாவனைக்கும் போதிய அளவு நீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

எனவே பிரதேசத்தில் உள்ள தூர்ந்துள்ள குளங்களைப் புனரமைப்பதுடன், வடிகால்களையும் சீர்செய்து மழை நீர் வழிந்தோடக்கூடிய வகையில் அமைக்க வேண்டும் என்று மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் தனி பணியகம் குறித்த வரைவு நகல் கூட்டமைப்பிடம்

கொழும்பு, மே 25

காணாமற்போனோர் தொடர்பான விவகாரத்தைக் கையாள்வதற்கு இலங்கை அரசு அமைக்கவுள்ள தனிப்பணியகம் குறித்த தான ஆரம்ப கட்ட வரைவு நகல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதிலுள்ள 90 சதவீதமான பரிந்துரைகளுக்கு தமிழ்க் கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் சில பரிந்துரைகளை மாற்றியமைக்குமாறும், கூட்டமைப்பு யோசனை முன்வைத்துள்ளது என்றும் அறிய முடிகின்றது.

இலங்கையில், இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரி, அமெரிக்காவால் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஐ.நாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது. நான்கு கட்டமைப்புகளின் கீழ் உள்ளக விசாரணையை முன்னெடுப்பதற்கு அரசு தயாரானது. அதில் காணாமற்போனோர் பணியகத்தை அமைத்தல், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நிறுவுதல் போன்ற விடயங்களும் அடங்குகின்றன.

> ஐ.நா. மனித உரிமைகள் சபை யின் 32 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் ஜெனிவாவில் நடை பெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடருக்கு முன்னர் காணாமற் போனோர் பணியகத்தை இலங்கையில் நிறுவுவது தொடர்பான சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்திருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடருக்கு முன்னர் காணாமற் போனோர் பணியகத்தை இலங்கையில் நிறுவுவது தொடர்பான சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, மேற்படி சட்ட வரைவின் ஆரம்பகட்ட வரைவு நகல் (முதலாவது வரைவு) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்போது 90 சதவீதமான பரிந்துரைகளை கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது. இதிலுள்ள சில முக்கிய குறைபாடுகளை மாற்றியமைக்கும்படி தமது தரப்பிலிருந்து பரிந்துரைகளை கூட்டமைப்பு முன்வைத்துள்ளது. அத்துடன், காணாமற் போனோர் குறித்து முழு தகவல்களையும் அறிந்து கொள்ளும் உரிமை அவர்களது உறவினர்களுக்கு உள்ளது என்றும் கூட்டமைப்பு அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறு கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு அமையவே தற்போது இந்தச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு தீவிரம் காட்டி வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, மேற்படி பணியகம் அமைக்கப்பட்ட பின்னர், பரணகம ஆணைக்குழு கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-ஐ-5)

## மாபெரும் நற்கருணை பேரணி

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாண மறைக்கோட்ட குருக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இயேசுவின் திரு உடல், திரு இரத்தம் பெருவிழாவை முன்னிட்டு மாபெரும் நற்கருணைப் பேரணி யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பேராலயத்தில் ஆரம்பமாகி, பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சென்றடையும்.

பேராலயத்திலிருந்து புறப்படும் பேரணி குருசோ வீதி, பழைய பூங்காவீதி, கொய்யாத் தோட்டம் புதுவீதி வழியாக கிறிஸ்து அரசர் ஆலயத்தைச் சென்றடைந்து வழிபாடுகள் இடம்பெறும்.

தொடர்ந்து புதுவீதி. ஈச்சமோட்டை, கடாந்தரைவீதி, கடற்கரைவீதி, அன்ரனிஸ் வீதி வழியாக பாசையூர் அந்தோனியார் ஆலயத்தைச் சென்றடைந்து, இறுதி வழிபாடுகளுடன் நிறைவடையும்.

நாட்டில் அமைதியும் நீதியான தீர்வுடன் கூடிய சமாதானம் நிலவவும், கலாசார மனித நேய விழுமியங்கள் பாதுகாக்கப்படவும், இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டோருக்காக வேண்டுதல் புரியவும், யாழ்.மறைக் கோட்ட பங்கு மக்கள் அனைவரையும் இதில் பங்கேற்குமாறு குருக்கள் ஒன்றியம் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ற-ஐ-135)

## சமூக விஞ்ஞான போட்டிகள்

கரணவாய், மே 25

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகள் இன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

தரம் 6,7 மாணவர்களுக்கான போட்டிகள் இன்று பிற்பகல் 2.15 மணிக்கும் , தரம் 8, 9 மாணவர்களுக்கான போட்டிகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கும், தரம் 10, 11,12 மற்றும் 13 மாணவர்களுக்கான போட்டிகள் நாளை பிற்பகல் 2.15 மணிக்கும் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் வட இந்து மகளிர் கல்லூரியிலும், கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரியிலும், மருதங்கேணி கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை களுக்கிடையிலான போட்டிகள் செம்பியன் பற்று அ.த.க. பாடசாலையிலும் நடைபெறவுள்ளன.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களைக் குறித்த நேரத்துக்குச் சமுகமளிக்கமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் கேட்டுள்ளார்.

(ற-ஐ-108)

# பார்வையற்றவர்களை ஒருபோதும் யாசகம் எடுக்க அனுமதிக்காதீர்கள்

### யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் கோரிக்கை





யாழ்ப்பாணம்,மே 25

பார்வையற்றவர்களை யாசகம் எடுப்பதற்கு அனுமதிக்காதீர்கள். அவ்வாறு பிச்சை எடுப்பவர்களைக் கண்டால், யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு அறிவியுங்கள்.- இவ்வாறு யாழ். விழிப்புலனற்றோர் சங்க தலைவர் எஸ்.அற்புதராஜா தெரிவித்தார்.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விழிப்புலனற்றோர்களால் முடியாதது என ஒன்றும் இல்லை. விழிப்புலனற்றோர் கல்வியில் சிறந்து விளங்கி வருகின்றார்கள். அனைத்துத் துறைகளிலும் மிளிர்கின்றார்கள். கடந்த காலத்தில் பல சவால்களைக் கடந்து வந்தாலும், விழிப்புலனற்றவர்கள் பல்வேறு இலக்குகளை அடைவதற்கு முயற்சிக்க வேண்டியுள்ளது.

அத்துடன் பார்வையற்ற முதியவர்களைப் பராமரிப்பதற்கான தகுந்த இடம் இல்லை. கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் பார்வையற்ற முதியவர்களுக்கான பராமரிப்பு இடத்தைத் தேடி வருகின்றோம். ஆனால் அந்த இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது.

அதற்கான இடமொன்றை ஒதுக்கித் தந்தால் பார்வையற்றவர்கள் தமது சாகும் வரையான காலப் பகுதியை அந்த இடத்தில் நிம்மதியாகக் கழிப்பார்கள்.

இலங்கையில் பல இடங்களில் விழிப்புலனற்றவர்கள் யாசகம் எடுப்பவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் எந்த இடத்திலும் வெள்ளைப் பிரம்பு ஏந்திய ஒருவர் யாசகம் எடுப்பதைப் பார்க்க மாட்டீர்கள். வடமாகாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் பார்வையற்றவர்கள் யாசகம் எடுப்பதற்கு அனுமதிக்கப்படக் கூடாது. எவராவது யாசகம் எடுப்பதைக் கண்டால் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு அறிவியுங்கள்- என்றார். (ற-ஐ-106)

## மருத்துவ காப்புறுதி அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சனச அபிவிருத்தி வங்கி, சிறுவர் சேமிப்புக் கணக்கு வாடிக்கையாளர்களுக்கு மருத்துவக் காப்புறுதியை அறிமுகப்படுத்தவுள்ளது.

இதன் அறிமுக நிகழ்வு, நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள சனச அபிவிருத்தி வங்கியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஐ-ரி4)

## நியமனம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட வுள்ள விசேட மத்தியஸ்த சபை (காணி) களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் நடைபெற வுள்ளது.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது என்று நீதி அமைச்சு அறிவித்துள்ளது. (ற-ஐ-5-35)

# நயினை திருவிழாவுக்காக விசேட பந்தல்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், மே 25

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு நயினாதீவு இறங்கு துறையில் இருந்து ஆலயம் வரைக்கும் விசேட பந்தல்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்தும் பக்தர்கள் படகுகள் மூலம், இறங்கு துறையூடாக ஆலயத்துக்கு செல்ல வசதியாக இந்தப் பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட ஆலயச் சுற்றாடலிலும் பக்தர்களின் வசதி கருதி விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஆலயத் திருவிழாவுக்கு இந்த முறை 50க்கும் மேற்பட்ட படகுகளைச் சேவையில் நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் நயினாதீவு மற்றும் குறிகாட்டுவான் இறங்கு துறைகளுக்கு இடையில் பயணிகளின் வருகைக்கு ஏற்ப கடற்பாதை சேவையும் நடத்தப்படும்.

பக்தர்களின் வசதி கருதி ஆலயச் சூழலில் குடிதண்ணீர், சுகாதார வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன. (ற-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் இடர் பாதிப்பால் 2 பில்லியன் டொலர் இழப்பு

கொழும்பு, மே 25
நாட்டில் கடந்த வாரம் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால், சுமார் 1.5 பில்லியன் டொலர் தொடக்கம் 2 பில்லியன் டொலர் வரையான இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என்று, அரசு தெரிவித்துள்ளது என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி இடருக்குப் பின்னர், தற்போது இயற்கை இடரால் கடுமையான பாதிப்பை இலங்கை சந்தித்துள்ளது.

இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 93 ஆக அதிகரித்துள்ளது என்றும் 109 பேர் காணாமற் போயுள்ளனர் என்றும் அதிகாரபூர்வ தகவல்கள் கூறுகின்றன.

மூன்றரை இலட்சம் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியிருந்தனர். இவர்களில் பலர் தற்போது தமது வீடுகளுக்குத் திரும் பியுள்ளனர்.

இந்த இடர்களால் 1 இலட்சத்து 25 ஆயிரம் வீடுகளும், 3 இலட்சத்துக்கும் அதிகமான, சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களும், அழிந்துள்ளன அல்லது பாதிக்கப்பட்டுள்ளன என்று, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த அழிவுகளால் குறைந்த பட்சம், 1.5 பில்லியன் டொலர் தொடக்கம் 2 பில்லியன் டொலர் வரை இழப்பு ஏற்பட்டிருக்கும். இந்தக் குறைந்த பட்ச இழப்பில், சேதமடைந்த வாகனங்கள், கருவிகள், இயந்திரங்கள் சேர்க்கப்படவில்லை. வெளிநாட்டு கொடையாளிகள், அரசுகளிடம் உதவிகளை வழங்குமாறு கேட்டுவருகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# பாகிஸ்தானின் இரண்டாவது விமானமும் வந்தடைந்தது

## உதவிப் பொருள்களுடன்



இலங்கையில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர நிவாரணப் பொருள்களுடன், பாகிஸ்தான் விமானப்படையின் இரண்டாவது விமானம் நேற்று கட்டுநாயக்கவை வந்தடைந்துள்ளது.

இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர உதவிப் பொருள் களுடன், பாகிஸ் தான் விமானப் படையின் சி-130 போக்குவரத்து விமானம் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்த டைந்தது. அதில் மின்பிறப் பாக்கிகள், கூடாரங்கள், மருந்துகள் போன்றவை எடுத்து வரப்பட்டன. இவற்றைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் சை யட் சகீல் ஹுசேன், இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவிடம் கையளித்தார்.

முன்னதாக, பாதிக்கப்பட்ட மக் களுக்காக, 30 படுக்கைகளைக் கொண்டதும், அனைத்து வசதிகளையும் கொண்டதுமான கள மருத்துவமனை ஒன்றையும், 17 மருத்துவர்களையும் அனுப்பி வைப்பதாக பாகிஸ்தான் அறி வித்திருந்தது. எனினும், இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைய, கள மருத்துவமனைக்குப் பதிலாக அவசர நிவாரணப் பொருள்களை மாத்திரம் பாகிஸ்தான் அனுப்பியுள்ளது. (ற-ஜ-5)

## பேரிடர் பாதிப்புகளுக்கு 5 நாடுகளே உதவிகள்

கடந்த வாரம் இடம்பெற்ற இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐந்து நாடுகள் மாத்திரமே இதுவரை உதவிகளை அனுப்பியுள்ளன என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த, சிறப்பு ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தில், இடர் நிவாரணப் பணிகள் தொடர்பாக விளக்கியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தியா, ஜப்பான், துருக்கி, பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய ஐந்து நாடுகள் மாத்திரமே பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை இதுவரை வழங்கியுள்ளன. மேலும் பல நாடுகள், உதவிகளை வழங்குவதாக வாக்குறுதி அளித்திருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுரவுக்குப் பிணை வழங்குவது மக்களை குழப்பமடையச் செய்யும்

## குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 25

ரக்பி வீரர் தாஜுதீனின் தந்தையிடம் இது ஒரு விபத்து. மேலதிக விசாரணை தேவையற்றது என்று தெரிவித்து இந்த விசாரணையை மூடிமறைக்க அனுர சேனநாயக்கா முயன்றுள்ளார். இந்த வழக்கு சர்வதேச முக்கியத்துவத்தை பெற்றுள்ள நிலையில், சந்தேக நபருக்கு பிணை வழங்குவது மக்களை குழப்பமடையச் செய்யும். எனவே அனுர சேனநாயக்காவுக்கு பிணை வழங்கக் கூடாது. -இவ்வாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

ரக்பி வீரர் தாஜுதீன் படுகொலை தொடர்பில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்காக நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இவரைக் கொழும்பு மேலதிக நீதிவான் நிஸாந்த பீரிஸ் முன்னிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நிறுத்தினர். நீதிமன்றத்தில் பீ அறிக்கை முன்வைக்கப்பட்டது. அதில், சம்பவம் இடம்பெற்ற நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி, குற்றவியல் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் விசாரணை முன்னெடுக்கப் பட்டது. தாஜுதீன் விவகாரத்தை விபத்தாகக் காட்டி விசாரணைகளை மேற்கொள்ள சந்தேக நபர் (அனுர சேனநாயக்கா) உத்தரவு பிறப்பித்துள்ளமை உறுதியாகின்றது. இது தொடர்பில் சந்தேகநபரிடம் கடந்த 3 நாள்களாக விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளோம். தாஜுதீன் படுகொலைக்குச் சதித் திட்டம் தீட்டியமை, சாட்சிகளை மறைத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை இவர் மீது சுமத்த நாம் எதிர்பார்க்கின்றோம். அதனால் விசாரணைகள் தொடரும் நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்க நாம் கோருகின்றோம் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதன் பின்னர் அனுர சேனநாயக்கா சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி அனில் சில்வா, சட்டக் கோவையின் 296, 198, 189 உள்ளிட்ட பல பிரிவுகளின் கீழ் புலனாய்வுப் பிரிவினரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் 296 ஆவது பிரிவின் கீழ் குற்றச்சாட்டு முன்வைக்க முடியாது. சந்தேக நபருக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டு இல்லாத நிலையில் அதனை நியாயப்படுத்தவும் முடியாது. கொலை என்று நம்பப்படும் விடயத்தை விபத்தாக கருதி விசாரணை செய்ய ஆலோசனை வழங்கியமையே புலனாய்வுப் பிரிவினர் கூறும் குற்றச்சாட்டு. அதனை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படியே அதனை அவர் செய்திருந்தாலும் கூட, 296 ஆவது பிரிவின் கீழ் குற்றம் சுமத்த முடியாது. 198 ஆவது பிரிவின் கீழேயே ஆராயலாம். இங்கு சதி முயற்சிக் குற்றச்சாட்டு 198 ஆவது பிரிவின் கீழேயே ஆராயப்பட வேண்டும். அதனை 296 ஆவது பிரிவுனுள் எடுக்க முடியாது.

198 ஆவது பிரிவானது, நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஒருவரால் பிணை வழங்க முடியுமான குற்றச்சாட்டுக்களைக் கொண்டது. எனவே சந்தேக நபருக்கு பிணை வழங்க இந்த நீதிமன்றத்துக்கு பூரண அதிகாரம் உள்ளது. இந்த நிலையில் புலனாய்வுப் பிரிவு 296 ஆவது பிரிவின் கீழ் சந்தேக நபருக்கு எதிராக குற்றம் சுமத்துகின்றமை அடிப்படையில் நியாயமானதா என்பது எனக்குத் தெரியவில்லை.

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றவாளியாக இனங்காணப்படின் அவருக்கு அதிகபட்சமாக 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்க முடியும். சந்தேக நபருக்கு பிணை வழங்குவதற்கு மன்றுக்கு எந்தத் தடையும் இல்லை. சந்தேக நபர் புலனாய்வுப் பிரிவு கோரிய சகல சந்தர்ப்பங்களிலும் வாக்கு மூலம் வழங்கியுள்ளார். இதனால் அவர் நீதிமன்றைப் புறக்கணிப்பார் என்ற சந்தேகம் தேவையற்றது. இப்பொழுது சந்தேக நபர் அதிகாரமற்ற ஒரு செல்லாக் காசு. அவரால் சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்க முடியும் என்று நம்பவும் முடியாது. அதனால் சந்தேகநபருக்கு பிணை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேசேகர, தாஜுதீன் படுகொலைச் சம்பவமானது அதிகாலை 12.17 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் பதிவாகியுள்ளது. அந்த நேர இடைவெளிக்குட்பட்ட அதிகாலை 2.45 மணி முதல் 3 மணி வரை சந்தேக நபரான இந்த முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிவில் உடையில் வேறு ஒரு காரில் சம்பவ இடத்தில் இருந்துள்ளார். அதனைக் கண்ணால் கண்ட சாட்சியம் இருக்கின்றது.

இது தொடர்பில் தவறான பதிவை இடுவதற்கு நாரஹேன்பிட்டி முன்னாள் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரிக்கும், குற்றவியல் பிரிவுப் பொறுப்பதிகாரிக்கும் சந்தேக நபர் உத்தரவிட்டுள்ளார். சம்பவம் இடம் பெற்ற தினத்துக்கு மறுநாள் கிருலப்பனையில் வைத்து தாஜுதீன் பணப்பை கிடைத்தும் அது தொடர்பில் விசாரணை செய்ய சந்தேக நபர் தவறிவிட்டார்.

தாஜுதீனின் தந்தையிடம், இது ஒரு விபத்து. இது தொடர்பில் மேலதிக விசாரணை தேவையற்றது என்று தனது அலுவலகத்தில் வைத்து தெரிவித்துள்ள சந்தேக நபர், இறுதியாக வெரி சொறி, என்று கூறி விசாரணையை மூடி மறைக்க ஒத்தாசை வழங்கியுள்ளார். சந்தேக நபருக்கு பிணை வழங்குவதனால் சாட்சியங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். தற்போதும் அவ்வாறு அச்சுறுத்தல் உள்ளது. முழு நாடும் சர்வதேசமும் இந்த வழக்கை உற்று நோக்கி வரும் நிலையில் பிணை வழங்குவதால் பொது மக்களிடையே குழப்பம் ஏற்படலாம். சந்தேக நபருக்கு பிணை வழங்கக் கூடாது.- என்றார்.

சந்தேக நபரின் சட்டத் தரணி, அதற்கு ஆட்சேபம் வெளியிட்டார். சாட்சிகளுக்கு அச்சுறுத் தல் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. அரசியல்வாதிகளின் தேவைக்காக அரசியல் காரணங்களுக்காக பொது மக்கள் குழப்பப்படுவார்களே தவிர, வேறு ஏதும் காரணங்கள் இல்லை. இதனை நாம் இப்போதே அவதானிக்கின்றோம். இது ஒரு பழி வாங்கல் நடவடிக்கை - என்றார்.

இதனையடுத்து நீதிவான் நிஸாந்த பீரிஸ் தனது முடிவை அறிவித்தார். முன்வைக்கப்பட்ட அனைத்துக் காரணிகள் தொடர்பிலும், எனது அவதானத்தைச் செலுத்துகின்றேன். சந்தேக நபரின் சட்டத்தரணி முன்வைத்த சட்ட ரீதியிலான தர்க்கங்களை கவனத்தில் கொள்கின்றேன். அதேசமயம் சந்தேக நபர் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் முன்வைக்கும் விடயங்களும் முக்கியமானவை.

சந்தேக நபர் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிணைக் கோரிக்கையை நான் நிராகரிக்கின்றேன். அதன்படி அவரை நாளை 26 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுகின்றேன் - என்றார். (ற-ஜ-5)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## என்னவோ நடக்குது; ஏறுமாறாய்த் தெரியுது உண்மையை யாரறிவார் பராபரமே...!

முன்னாள் பிரபல இடதுசாரித் தலைவரும், பின்னாள் மகிந்த ஆதரவு பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார, தமது புதிய கருத்து ஒன்றை வெளிப்படுத்தி உள்ளார்.

வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல மாகாணங்களுக்கும், அவை தம்மைத் தாமே ஆளும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று அறுத்து உறுத்து விளம்பி உள்ளார் அவர்.

அதற்கு எதிர்மறையாக, சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைத் தாம் ஆதரிக்க இயலாது என்று அவர் "பிரகடனம்" செய்துள்ளமையும் ஊன்றிக் கவனிக்க வேண்டியதாகும்.

மேலும், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை வழங்கும், எந்த நிலைப் பாட்டையும் தாம் அடியோடு ஆதரிக்கவில்லை என்று அறுத்து உறுத்து, கூறியுள்ளதன் மூலம்--

தாம் சந்தர்ப்பவாதி என்பதை அவர் பட்ட வர்த்தனமாக நிரூபித்துள்ளார் எனக் கொள்ளலாம். இல்லையா?

அது மட்டுமன்றி, அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள், தகிடுதத்தம் பண்ணும் பேர்வழிகளே என்பதையும் இங்கு தொட்டுக் காட்டுவது, அதி பொருத்தம்!

அதேவேளை, அந்தந்த மாகாணங்கள் தம்மைத் தாமே ஆளும் அதிகாரத்தைப் பெற்றால், அந்தந்த மாகாண மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது மிக இலகுவாக அமையும் என்றும் முன்னாள் அமைச்சர் "சான்றிதழ்" வழங்கியுள்ளார் என்றும் கொள்ளலாம் அல்லவா...?

மேலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர், இந்த நாட்டு மக்களைப் பிரித்தாளும் நோக்குடனேயே சமஷ்டியை ஆதரிக்கின்றனர் என்றும் ரணில் விக்கிரமசிங்கவை "வம்புக்கு"இழுத்திருக்கிறார்.

ஒட்டு மொத்தத்தில்--

மாகாணங்களுக்கு அவை தம்மைத் தாமே, ஆளும் அதிகாரம் வழங்க வேண்டும் என்று ஆக்கபூர்வமான கருத்தை வெளியிட்டுள்ள வாசுதேவ நாணயக்கார--

தமிழர் பிரச்சினைக்கு சுயநிர்ணயத் தீர்வு வழங்குவதைத் தாம் ஆதரிக்கவில்லை என்று தொப்பியைப் பிரட்டுகிறார். அல்லவா?

இதனைத்தான் சந்தர்ப்பவாத அரசியல், அரசியல்வாத நிலைப்பாடு என்று சொல்வது...!!

சுதந்திரத்துக்குப் பின்னரான இன்றைய, இலங்கை அரசியல் வரலாற்றில், கொள்கை நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவர்கள் என இடதுசாரி அரசியல்வாதிகள் பேசப்பட்டவர்கள்.

ஆனால் காலப்போக்கில், சுயஇலாப நோக்கில் அரசியல் குத்துக்கரணங்கள் போடுவதில் வல்லவர்களான சிங்கள அரசியல்வாதிகள் தரப்பில் இடது சாரிகளும் உள்ளடங்கிய வரலாற்றில், வாசுதேவ நாணயக்காரவுக்கும் பங்குண்டு.

அந்த வகையில், மாகாணங்களுக்குத் தம்மைத் தாமே ஆளும் அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்ற அவரது கருத்துவெளிப்பாட்டின் அடிப்படை அரசியல் நிலைப்பாடு என்ன என்பதைக் கண்டறிய முடியவில்லை.

என்னவோ நடக்குது, ஏறுமாறாய்த் தெரியுது. உண்மையை யார் அறிவார் பராபரமே என்று மட்டுமே சொல்லலாம்...!

# ஐ.நா. இலங்கை உறவு தமிழருக்கு ஆபத்தானதா?

எம்.ஐ.முபாறக்

அரசியல் தீர்வு மற்றும் போர்க்குற்ற விசாரணை ஆகிய இரண்டும் தமிழருக்குச் சாதகமாக அமையும் காலம் எப்போது வரும் என்று தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.
இந்த இரண்டுவிடயங்களையும் நோக்கிய நகர்வுகள் இப்போது சமாந்தரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசியல் தீர்வை வழங்குவதற்காக புதிய அரசமைப்பொன்றைக் கொண்டுவரும் முயற்சிகள் ஒருபுறமும் போர்க்குற்றச்சாட்டை விசாரிக்கும் முயற்சிகள் மறுபுறமும் தொடங்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு விடயங்களும் எதிர்பார்த்த பயனைக் கொண்டு வந்துவிட வேண்டும் என தமிழர்கள் விரும்புகின்றனர். அதற்கேற்ப, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மிகவும் நிதானமாக – பொறுமையாக காய்நகர்த்துகின்றது.

### அதிக கவனத்தை ஈர்த்த போர்க்குற்றம்

இதில் போர்க்குற்ற விசாரணைதான் சர்வதேசத்தின் அதிக கவனத்தை ஈர்த்த – சர்வதேசத்தை அதிகம் அக்கறைசெலுத்த வைக்கின்ற விடயமாகும். 2009இல் போர் முடிவடைந்தது முதல் சர்வதேசம் இந்த விடயத்தில் கவனம் செலுத்தத் தொடங்கியது. அதிலும் அமெரிக்கா கடுமையாக நின்றது. இது தொடர்பில் பல தீர்மானங்களை இலங்கைக்கு எதிராக நிறைவேற்றியது.
ஆனால், அப்போதைய ஜனாதிபதி மகிந்த எதற்கும் அடி பணியவில்லை. 2010இல் வெறும் கண்துடைப்புக்காக நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைத்தார். அந்த ஆணைக் குழுவின் அறிக்கை கிடப்பில் போடப்பட்டது. மறுபுறம், தமிழர்கள் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் போராட்டங்களைத் தீவிரப்படுத்தினர்.
இந்தநிலையில்தான், மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்து புதிய ஆட்சி மலர்ந்தது. புதிய அரசு இந்த விவகாரத்தில் நெகிழ்வுத் தன்மையுடன் செயற்படத் தொடங்கியது. போர்க்குற்றச் சாட்டு தொடர்பில் உள்நாட்டிலேயே உரியமுறையில் விசாரணைகளை நடத்தி, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்றும், அந்த விசாரணைக்காக உள்ளகப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசு சர்வதேசத்துக்கு உறுதியளித்தது.
ஐ.நா.மனிதஉரிமைகள்ஆணையாளர் செயித் அல்–ஹுசைன் இலங்கை வந்திருந்தபோது உள்ளகப் பொறிமுறையின் உறுப்பினர்களை அரசு நியமித்தது. அவர் நாட்டை விட்டுச் சென்று சில நாள்களில் யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வமாகஉள்ளகப்பொறிமுறையை அரசு ஆரம்பித்து வைத்தது.

> ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயித் அல் –ஹுசைன் இலங்கை வந்திருந்த போது உள்ளகப் பொறிமுறையின் உறுப்பினர்களை அரசு நியமித்தது. அவர் நாட்டை விட்டுச் சென்று சில நாட்களில் யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வமாக உள்ளகப் பொறிமுறையை அரசு ஆரம்பித்து வைத்தது.

### ஐ.நா.கூட்டத்தொடர் ஆரம்பம்

இந்த நிலையில், ஐ,நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகின்றது. அந்தக் கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை நிலைமை தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் அதாவது, மகிந்தவின் ஆட்சியில் ஐ.நாவால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் –தீர்மானங்கள் போல் இந்த அறிக்கை இறுக்கமானதாக இருக்குமா என்ற கேள்வி இப்போது எழுகின்றது. அவ்வாறு இறுக்கமாக இருப்பதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவுதான். வேண்டுமென்றால் காலதாமதத்துக்காக இலங்கையை ஐ.நா. எச்சரிக்கக் கூடும். மற்றப்படி, இலங்கைக்குத் தலையிடியைக் கொடுக்கும் வகையில் அந்த அறிக்கை ஒருபோதும் இருக்காது.
இந்த அரசு ஐ.நாவுடனும் சர்வதேச நாடுகளுடனும் மிகவும் நெருங்கிப் பணியாற்றி வருகின்றது. சர்வதேசத்தின் விருப்பத்துக்கு ஏற்ப நடந்துகொள்கின்றது. ஆட்சி மாற்றத்தின்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பின்னர், எந்தவொருநாடும் இலங்கையை மோசமாக விமர்சித்தது கிடையாது. இந்த நாட்டில் மனித உரிமை விவகாரம் இப்போது நல்ல நிலையில் இருக்கின்றது என்றே அவை கூறி வருகின்றன. ஐ.நாவின் நிலைப்பாடும் அதுதான்.

ஐ.நா. இலங்கையுடன் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் – எத்தகைய உறவைப் பேணி வந்தாலும் அது தமிழ் மக்களைப் பொறுத்தவரை பெரிய விடயம் கிடையாது. ஆனால், அந்த உறவு – அந்த நிலைப்பாடு போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் தமிழர்களுக்குப் பாதகமாக அமையுமாக இருந்தால் அல்லது அது தொடர்பில் குறைந்தளவு நீதி தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படுமாக இருந்தால் தமிழர்கள் அந்த உறவை நிராகரிக்கவே செய்வர். அவ்வாறு தமிழர்கள் அந்த உறவை நிராகரிக்கும் வகையில் இப்போது இலங்கை – ஐ.நா. உறவு அமைந்துள்ளதா என்ற கேள்வி எழுகின்றது. அவ்வாறு எழுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

போர்க்குற்றச்சாட்டு என்ற பதத்தை அரசு நிராகரித்து அதற்கு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு என்று பெயர் சூட்டியபோது ஐ.நா. அதை எதிர்க்கவில்லை. உள்ளகப் பொறிமுறை ஊடாகக் கண்டறியப்படும் குற்றங்கள் போர்க் குற்றங்களா அல்லது மனித உரிமை மீறல்களா என்று இலங்கை நீதிமன்றமே தீர்மானிக்கட்டும் என்று மனித உரிமை ஆணையாளர் கூறிவிட்டார். அத்தோடு, இது தொடர்பில் சர்வதேச விசாரணையையும் அவர் நிராகரித்துவிட்டார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் இந்த இரண்டு நிலைப்பாடுகளும் தமிழர்களின் அடிப்படை நிலைப்பாட்டுடன் முரண்படுகின்றன. தமிழர்களோ அவை போர்க்குற்றச் சாட்டுக்கள் என்றும், அது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கூறி வருகின்றனர். ஆனால், இந்த இரண்டையும் அவர் மறுக்கின்றார். இலங்கை அரசின் நிலைப்பாட்டுடன் அவர் நிற்கின்றார். ஐ.நா. – இலங்கை உறவைத் தமிழர் கள் நிராகரிப்பார்களா என்ற கேள்வி எழுவதற்கு இதுதான் காரணம்.

### அச்சமடைந்துள்ள தமிழர்கள்

மகிந்தவின் காலத்தில் இலங்கைக்கு எதிராக மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த ஐ.நா. இப்போது இந்த ஆட்சியில் அந்த இறுக்கத்தைத் தளர்த்தியுள்ளது. அது தமிழர்களுக்குப் பூரண நீதியைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தமிழர்கள் அஞ்சுகின்றனர்.

தமிழர்களும் இந்த அரசுடன் ஒத்துப்போய் நட்புறவான அரசியலைத்தான் நடத்துகின்றனர். ஆனால், அந்த நட்புக்காக – இணக்கப்பாட்டு அரசியலுக்காக போர்க்குற்ற விசாரணை மற்றும் அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் அவர்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றத்தையும் அவர்கள் செய்யவில்லை. இது தொடர்பில் மகிந்தவின் காலத்தில் எந்த நிலைப்பாட்டில் இருந்தார்களோ அதே நிலை பாட்டில் தான் இப்போதும் இருக்கின்றனர். அரசுடனான உறவு என்பது உறவாகவே இருக்கின்றது. நிலைப்பாடு என்பது நிலைப்பாடாகவே இருக்கின்றது.

ஆனால், ஐ.நாவோ அவ்வாறில்லை. உறவுக்காக சில விட்டுக் கொடுப்புக்களை அது செய்துள்ளமை தெளிவாகின்றது. இது ஐ.நா. மீது தமிழர்கள் வைத்துள்ள நம்பிக்கையைச் சிதைப்பதாக அமைந்துள்ளது. உள்நாட்டில் தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றால் அவர்கள் நீதியைத் தேடும் மாற்றிடம் சர்வதேசம்தான். அந்த சர்வதேசம் தமது நிலைப்பாட்டுடன் ஒத்துப்போகவில்லை என்றால் நீதி கிடைத்தாலும் அது பூரணமான – திருப்திகரமான நீதியாக அமையாது என்பது தமிழர்களின் கருத்தாகும். இந்த நிலையில், அடுத்த மாதம் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடர் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதாக – தலையிடியைக் கொடுப்பதாக அமையாது என்பது நிச்சயம்., ஆகவே, ஐ.நா. – இலங்கை உறவைத் தமிழர்கள் எப்படிப் பார்க்கப் போகின்றார்கள் என்பதை சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**உள்நாட்டில் தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றால் – அவர்கள் நீதியைத் தேடும் மாற்றிடம் சர்வ தேசம்தான். அந்தச் சர்வதேசம் தமது நிலைப்பாட்டுடன் ஒத்துப்போக வில்லை என்றால் நீதி கிடைத்தாலும் அது பூரணமான – திருப்திகர மான நீதியாக அமையாது என்பது தமிழர்களின் கருத்தாகும்.**



## நிவேதிதாவும் பாரதியாரும்

காலையில் எழுந்தவுடன் உதயன் பத்திரிகை படிப்பதில் எல்லோருக்கும் ஆனந்தம். ஏன் என்றால் உங்கள் பத்திரிகையின் சுதந்திரமே அதற்குக் காரணம். துணிவுடனும் உண்மையுடனும் செயற்படும் உதயனின் நேர்மைமிகு துணிவு மற்றப் பத்திரிகைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அதுபோல் மற்றவர்களும் சுதந்திரமாக வாசகர்களது கருத்துக்களை எழுதுவது அவசியம். மகாகவி பாரதியார், சக்கரவர்த்தினி இதழைத் தொடங்கிய பின்னர் தன்னுடைய கருத்துக்களை சுதந்திரமாக எழுதினார். வந்தே மாதரம் என்ற கவிதையைத் தமிழில் மொழி பெயர்த்து விளக்கக் கட்டுரை ஒன்றையும் வெளியிட்டார். எவ்வாறான துணிவு பார்த்தீர்களா? நாமும் துணிவுடனும் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். மற்றவரின் கருத்துக்களுக்கும் நாம் செவிசாய்க்க வேண்டும். அன்றொரு நாள் பாரதியார் மாநாடு ஒன்றுக்கு சென்றிருந்தார். அங்கே சுவாமி விவேகானந்தரின் பெண் சீடரான சகோதரி நிவேதிதாவை சந்தித்தார். அப்போது பாரதியிடம் உங்கள் மனைவியை அழைத்து வரவில்லையா? என்று அவர் கேட்டார். அதற்கு பாரதியார் பெண்களுக்கு என்ன தெரியும்? அவள் இந்தக் கூட்டத்திற்கு வந்து என்ன செய்யப் போகிறாள் என்று பதில் கூறினார். அதற்கு அந்தச் சகோதரி; எமது நாட்டில் உள்ள பெண்களை அடிமைகளாகவே வைத்திருக்கிறீர்கள். ஆண்களுக்கு என்ன மரியாதை கொடுக்கிறீர்களோ, பெண்களுக்கும் அது வேண்டும் என்று பதில் சொன்னார். இனியாவது பெண்களுக்கு சம உரிமை கொடுங்கள் என்றார். பாரதியார் விழித்துக் கொண்டார். இவரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டார். பெண் சுதந்திரத்தைப் பற்றி கவிதைகள், மேடைப் பேச்சுக்கள் என்பவை அவரது குறிக்கோளாக இருந்தன. தனது மனைவியை அனைத்து இடங்களுக்கும் அழைத்துச் செல்ல ஆரம்பித்தார். அதுபோல் மற்றவரின் கருத்துக்களை நாம் கேட்டு தரம்பிரித்து அறிந்து கொள்ள வேண்டும். மற்றவரின் கருத்துக்களை நாம் கேட்பது அவர்களுக்குக் கொடுக்கும் சுதந்திரம்.

அன்பரசன், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

## அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்!

வலி.மேற்குப் பிரதேசத்திலுள்ள பனிப்புலம் செட்டிகுறிச்சி வீதி கடந்த பல வருடங்களாக கவனிப்பாரற்று மிகவும் சீர்கெட்ட நிலையில், மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத கோலத்தில் உள்ளது. இது பற்றிப் பலமுறை முறையிட்ட போதும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. பிரதேசசபை உறுப்பினர்கள் தமக்கு நிதி ஒதுக்கவில்லை என்று கூறிக் கையை விரித்தனர். இந்த விடயம் பலமுறை உதயன் வாசகர்திருமுகம் மூலம் வெளியானது.

தற்போது யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம், உரியவர்கள் நேரில் வந்து எமது வீதியைப் பார்த்து அதன் நிலைமையைப் புரிந்து கொண்டு பனிப்புலம் அம்பாள் வடக்கு வீதியி லிருந்து செட்டி குறிச்சியூடாகக் காலையடி செல்லும் வீதியைப் புனரமைத்துத் தருவதாக உறுதி கூறி உடனடி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். எமது முயற்சியின் பயனாக எமக்கு உறுதியளித்துச் செயற்படும் த.சித்தார்த்தனுக்கு எமது செட்டிக்குறிச்சி மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

செட்டிக் குறிச்சி மக்கள் சார்பில் ஆ.த.குணத்திலகம்,
அகில இலங்கை சமாதான நீதிவான், சில்லாலை

## கச்சாய் உப அலுவலகம் சொந்த இடத்தில் இயங்காதா?

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் உப அலுவலகம் 2000 ஆம் ஆண்டுக்கு முன்பு கச்சாய் வீதியில் கிராமக்கோட்டுக் கட்டடத்தில் தான் இயங்கி வந்தது. ஆனால் பின்பு சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமைப்பணிமனையோடு சேர்ந்து பல வருட காலமாக இயங்கி வருகிறது. இதனால் கச்சாய், கெற்பேலி, மிருசுவில் பகுதி மக்கள் தமது தேவையை நிறைவேற்ற நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது. எனவே மீண்டும் கச்சாய் உப அலுவலகத்தை கச்சாய் ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுப்பார்களா?

*சந்திரன், கச்சாய் மக்கள் சார்பாக*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்ஸின் தாக்குதலில் சிரியாவில் 154 பேர் சாவு

## 200 பேருக்கு மேல் படுகாயம்

டமஸ்கஸ், மே 25

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய கார்க் குண்டு, தற்கொலைப் படை தாக்குதல்களில் 154 பேர் உயிரிழந்தனர். 200 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

சிரியாவில் அதிபர் பார் அல்-ஆசாத் தலைமையிலான ஆட்சி நடைபெறுகிறது. அந்த நாட்டின் பெரும்பகுதி ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இரு தரப்பினருக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

ரஷ்ய ராணுவத்தின் உதவியால் அண்மைக்காலமாக அதிபர் ஆசாத் படைகளின் கை ஓங்கி வருகிறது. இதற்குப் பதிலடியாக அரச கட்டுப்பாட்டில் உள்ள லடாகியா பிராந்தியத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் தொடர்த் தாக்குதல்களை நடத்தினர். லடாகியா மாகாணம் ஜெப்லா, பார்போஸ் கடற்கரை நகரங்களில் உள்ள பஸ் நிலையங்கள், மருத்துவமனைகள், முக்கிய சந்தைகளில் கார்களில் வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்தன. சில இடங்களில் தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் வெடித்துச் சிதறினர்.

**நேற்றுமுன்தினம் நடத்திய கார்க் குண்டு, தற்கொலைப் படை தாக்குதல்களில் 154 பேர் உயிரிழந்தனர். 200 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.**

இந்தத் தாக்குதல்களில் ஒட்டுமொத்தமாக 154 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 200 க்கும் மேற்பட்டோர் படு காயம் அடைந்தனர். ஐ எஸ். தீவிரவாத அமைப்பு இந்தத் தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்றுள்ளது. அதிபர் ஆசாத்துக்கு ஆதரவாக சிரியாவின் லடாகியா நகரில் ரஷ்ய கடற்படை, விமானப்படை முகாமிட்டுள்ளன. அந்த கடற்படைத் தளங்களை ஒட்டிய நகரங்கள் மீது நேற்று தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. (தி)



# அகதி முகாமில் தஞ்சமடைந்த மக்களை வெளியேற்றும் கிரீஸ்

எதென்ஸ், மே 25

மசிடோனியாவுடனான தனது வடக்கு எல்லையில் அமைந்துள்ள தற்காலிக ஐடோமெனி முகாமில் தஞ்சம் அடைந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை கிரீஸ் ஆரம்பித்துள்ளது. அதிகாலைப் பொழுதில் ஆரம்பித்த இந்த நடவடிக்கையைக் கண்ட சாட்சிகள், முகாமில் குடியமர்ந்தவர்களை வேறு சிறந்த வசதியிடங்களுக்கு மாற்றிட பொலிஸ் வாகனங்கள் மற்றும் பேருந்துகள் அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவித்தனர். கலகத்தைக் கட்டுப்படுத்தும் பொலிஸார் பணியில் அமர்த்தப்பட்டாலும், பலம் பிரயோகிக்கப்படாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாசிடோனியாவுடனான கிரீஸின் எல்லைகள் மூடப்பட்ட பிறகு 8000 க்கும் மேற்பட்ட மக்கள் தவித்து கொண்டிருந்த நிலையில், கடந்த பெப்ரவரி மாதம் இந்த முகாம் உருவாக்கப்பட்டது.

சிரியா, ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற மோதல் நடக்கும் பகுதிகளில் இருந்து வரும், இந்த புலம்பெயர்ந்தோர் கூடாரங்களில் தூங்க வேண்டியிருந்த மிகவும் கடுமையான சூழலிலும், இந்த முகாமை விட்டு வெளியேற மறுத்துவிட்டனர். (தி)



# இஸ்லாம் மதத் தலைவரோடு பாப்பரசர் பிரான்சிஸ் பேச்சு

ரோம், மே 25

ரோமன் கத்தோலிக்க மதத் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் சன்னி இஸ்லாம் மத தலைமையோடு வத்திக்கானில் பேச்சு நடத்தியுள்ளார்.

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட இரு மதங்களுக்கு இடையில் உறவை உருவாக்குவதற்கென நடைபெற்ற கூட்டத்தில் இந்தப் பேச்சு நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டம் நடைபெறுவதே ஒரு வழியில் முக்கியத்துவம் வாய்ந்தது.



இந்தக் கூட்டம் தான் செய்தியும் கூட என்று கெய்ரோவின் அல்-அஸார் மசூதியின் பெரிய இமாம் பொறுப்பிலுள்ள சேக் அகமது எல்-தை யீப்புடன் நடைபெற்ற அரை மணிநேர கூட்டத்தின்போது பாப்பரசர் பிரான்சிஸ் கூறினார்.

பாப்பரசர் பிரான்சிசுக்கு முன்பு பாப்பரசராக இருந்த பெனடிக்டின் கருத்துக்கள் இஸ்லாமுக்கு எதிராக அமைந்தன என்று அல்-அஸார், வத்திக்கானுடன் பேச்சை நிறுத்திய ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இந்தப் பேச்சு நடைபெற்றுள்ளது. (தி)

# யேமன் இராணுவத்தில் சேருவோர் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் கடும் தாக்குதல்

சனா, மே 25

யேமன் இராணுவப் பணியில் சேருவதற்காக வரிசையில் நின்றவர்கள் மீது ஐ.எஸ் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் குறைந்தது நாற்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

யேமனின் தெற்கு நகரான ஏடெனில் இராணுவ அலுவலகத்தை குறிவைத்து ஐ.எஸ் தீவிரவாதிகள் இரண்டு தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவப் பணியில் சேர வரிசையில் நின்றவர்கள்.

ஒரு வாரத்துக்கு முன்பு தெற்குத் துறைமுகமான முக்கல்லா பகுதியில் பொலிஸ்துறைக்கான ஆள்சேர்ப்பில் இதேபோன்ற தாக்குதலை ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்தியிருந்தனர்.

கடந்த ஆண்டு யேமன் அதிபர் அப்த்ரபு மன்சூர் ஹடி தலைமையிலான படைகள் ஏடன் நகரை, ஹாத்தி கிளர்ச்சியாளர்களிடமிருந்து மீட்டன. தற்போது யேமன் அரசுக்கு தற்காலிகதளமாக இந்த நகரம் செயற்பட்டு வருகிறது.

சவூதி அரேபியாவின் ஆதரவில் இயங்கும் நிர்வாகம், தலைநகர் சனாவை ஹாத்தி கிளர்ச்சியாளர்களிடமிருந்து மீண்டும் கைப்பற்றப் போராடிவருகிறது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தொழிலாளர் சட்டத்துக்கு பிரான்சில் வலுக்கிறது எதிர்ப்பு




பாரிஸ், மே 25
பிரான்சில் மர்சேய்யில் நகரத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை முற்றுகையிட்ட தொழிலாளர்கள் மீது பிரெஞ்சுப் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி அவர்களைக் கலைத்தனர்.
போராட்டக்காரர்கள் தங்கள் மீது கற்களை வீசியும், எரியும் தடுப்பரண்களை அமைத்தும் வலுவான எதிர்ப்பைத் தெரிவித்தனர் என்று பொலிசார் கூறினர்.
இதில் பல அதிகாரிகள் காயமடைந்தனர். போஸ் -சூர்-மெர் என்ற இடத்தில் நடந்த இந்தப் போராட்டம் புதிய தொழிலாளர் சட்டத்துக்கு எதிராக நடக்கும் தொடர் வேலை நிறுத்தங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் ஒரு பகுதியாகும்.
இந்தச் சர்ச்சை மற்றும் லொறி ஓட்டுநர்களின் முற்றுகை காரணமாக, எண்ணெய்ச் சுத்திகரிப்புநிலையங்களில் குறைந்தபட்சம் 50 சதவீத உற்பத்தி தடைப்படும் என்று தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.
பல எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் தீரும் நிலை உள்ளது. (சு)

# வெளவால்கள் தொல்லையினால் ஆஸி. நகரொன்றில் அவசர நிலை



சிட்னி, மே 25
ஆஸ்திரேலிய மாநிலத்தின் நியூ சவுத் வேல்ஸின் அதிகாரிகள், பல்லாயிரக்கணக்கான வெளவால்களால் முற்றுகையிடப்பட்டுள்ள பேட்மன்ஸ்பே நகரத்துக்கு உதவ அவசர நிலையை அறிவித்துள்ளனர்.
வெளவால்கள் தொடர்ந்து எழுப்பும் சத்தம், அவைகளின் துர்நாற்றம் மற்றும் கழிவுகள் என அனைத்தும் தங்களின் வாழ்க்கையைத் துயரமாக்குவதாக பேட்மன்ஸ் பே நகரவாசிகள் தெரிவிக்கின்றனர்.
பறக்கும் நரிகள் என்று அழைக்கப்படும் இந்த வெளவால்களை இடமாற்றம் செய்வதற்கு 1.8 மில்லியன் டொலர்களைச் செலவு செய்யத் திட்டமிட்டு வருகின்றனர் அந்த மாநில அதிகாரிகள்.
இந்த வெளவால் கூட்டங்கள் பேட்மன்ஸ் பேயில் உள்ள மரங்களின் பூக்களால் கவர்ந்திழுக்கப் படுகின்றன. இந்தப் பறக்கும் வெளவால்கள் ஆஸ்திரேலியாவில் மிகவும் அழிவின் விளிம்பில் இருக்கக் கூடிய ஒரு இனமாகும். (சு)

# எதிர்க்கட்சித் தலைவராக தேர்வாகினார் ஸ்டாலின்



சென்னை, மே 25
தமிழக சட்டப்பேரவை தி.மு.க குழுத் தலைவராக அந்தக் கட்சியின் பொருளாளரும், கொளத்தூர் தொகுதி உறுப்பினருமான மு.க. ஸ்டாலின் தேர்வு செய்யப்பட்டுள்ளதால், அவர் தமிழக சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராகச் செயல்படுவார்.
நேற்று செவ்வாய்க்கிழமை காலை, தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடந்த தி.மு.க சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் தி.மு.க சார்பில் வெற்றி பெற்ற 89 உறுப்பினர் களும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டம் தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் முன் னிலையில் நடைபெற்றது.
இக்கூட்டத்தில், சட்டப்பேரவை தி.மு.க குழுத் தலைவராக மு.க. ஸ்டாலின் தேர்வு செய்யப் பட்டுள் ளார். அதன்படி, தமிழக சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவராக ஸ்டாலின் செயற்படுவார்.
அதேபோல், சட்டப்பேரவை தி.மு.க குழுத் துணைத் தலைவராக துரைமுருகனும், கொறடாவாக அர. சக்கரபாணியும், துணைக் கொறடாவாக கு. பிச்சாண்டியும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
இதில், தி.மு.க கூட்டணிக் கட்சியினருக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் உட்பட ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் 13 முறை போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்ற தி.மு.க தலைவர் கருணாநிதிக்குப் பாராட்டுத் தெரிவிக்கப் பட்டது.
சட்டப்பேரவை தேர்தலின்போது தேர்தல் ஆணையத்தின் செயற்பாடுகள் அ.தி.மு.கவுக்கு ஆதரவாகவும், பாரபட்சமாகவும் இருந்தன என்றும், தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிரான செயற்பாடுகள் என்றும் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
மருத்துவம் பயில விரும்பும் மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு என்பதே இனி இல்லை என்ற அறிவிப்பை உடனடியாக வெளியிட வேண்டுமென்று வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
ஆந்திராவில் சுட்டுக் கொல்லப்பட்ட 20 தமிழர்கள் விவகாரத்தில், தமிழக அரசே நேரடியாக வழக்குத் தொடுத்து, நீதி நிலைநாட்டப்படுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
கரூர் நகருக்கு அருகில், அ.தி.மு.க அமைச்சர்களுக்கு நெருக்கமான அன்புநாதன் என்பவரின் வீட்டில் வருமான வரித் துறையினர் அதிரடி சோதனை நடத்திக் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் திருப்பூர் அருகே மூன்று கனரக வாகனங்களில் கொண்டு செல்லப்பட்ட 570 கோடி ரூபா பணம் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் செயற்குழுவில் வலியுறுத்தப்பட்டது. (சு)

# மாலைதீவின் முன்னாள் அதிபர் இங்கிலாந்தில் அகதியாகத் தஞ்சம்



லண்டன், மே 25
மாலைதீவு நாட்டின் முன்னாள் அதிபர் முஹம்மது நஷீட், இங்கிலாந்து நாட்டில் அகதியாகத் தஞ்சம் அடைந்துள்ளார்.
மாலைதீவு முன்னாள் அதிபர் முகமது நஷீட், கடந்த 2008 ஆம் ஆண்டு அந்த நாட்டில் நடந்த பொதுத் தேர்தல் மூலம் ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அதிபராவார்.
2012 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தோல்வி அடைந்த நஷீட், ஆட்சியை அப்துல்லா யாமீன் என்பவரிடம் பறிகொடுத்தார்.
அப்துல்லா யாமீன் தலைமையிலான அரசு, முஹம்மது நஷீட் மீது பல்வேறு வழக்குகளைத் தொடுத்தது. தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதிபதியைக் கைது செய்ததாக தீவிரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் இவருக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. இதையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டுத் தண்டனை அனுபவித்துவந்தார். சிறைவாசத்தின்போது கடும் முதுகு வலியால் சிறையில் அவதிப்பட்ட அவருக்கு தண்டு வடத்தில் சத்திரசிகிச்சை நடத்த வேண்டி ஏற்பட்டது.
அதற்காக இங்கிலாந்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெறமுடிவுசெய்து அரசிடம் அனுமதி கேட்டார். அதற்கு மாலைதீவு அரசு அனுமதியளிக்க மறுத்து விட்டது.
வெளிநாடு செல்லும் நஷீட் மீண்டும் திரும்பி வருவார் என அவரது உறவினர்கள் எவராவது உத்தரவாதம் அளித்தால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என அரசு அறிவித்து விட்டது.
அவரது நிலைமை மேலும் மோசமடைந்ததையடுத்து சிகிச்சைக்காக நஷீட் வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு மாலைதீவு அரசுக்கு அமெரிக்கா, இந்தியா மற்றும் இலங்கையின் வெளிவிவகாரத்துறை அமைச்சர்கள் வலியுறுத்தி வந்தனர். இதனையடுத்து இங்கிலாந்து நாட்டுக்குச் செல்ல அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் சிகிச்சைக்காக இங்கிலாந்து செல்ல மாலைதீவில் இருந்து முகமது நஷீட் புறப்பட்டுச் சென்றார். அப்போது இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் தலைமையில் அங்கு அவருக்கும் சிவப்புக்கம்பள வரவேற்பு அளிக்கப் பட்டது. சத்திர சிகிச்சை முடிந்து உடல்நிலை தேறியதும், மாலைதீவுக்குத் திரும்பிவர முஹம்மது நஷீட் மறுத்து விட்டார். அவரது ஓய்வூதியம் மருத்துவச் சலுகை ஆகியவற்றை யாமீன் தலைமையிலான அரசு முடக்கி வைத்துள்ளது. இந்த நிலையில் இங்கிலாந்து அரசு நஷீட்டுக்கு அகதியாகத் தஞ்சம் அளித்துள்ளதாக அவரது அலுவலகம் நேற்றுத் தெரிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பு வெளியானதும் லண்டன் நகரில் இருந்து முஹம்மது நஷீட் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.
மாலைதீவின் தற்போதைய அதிபராக உள்ள அப்துல்லா யாமீன் எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரையும் சிறையில் அடைத்து வைத்துள்ளார். தன்னை எதிர்ப்பவர்கள் மற்றும் தன்னைப்பற்றி விமர்சிப்பவர்களை எல்லாம் அடக்கு முறை அதிகாரத்தைப் பயன்படுத்தித் தண்டித்து வருகிறார்.
கடந்த சில ஆண்டுகளாக மாலைதீவில் பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் அனைத்தும் பறிக்கப்பட்டுள்ளன.
தற்போது சர்வாதிகார ஆட்சிக்கு இணையான ஒரு அரசின்கீழ் மாலைதீவு சிக்கியுள்ள நிலையில் நானும் இதர எதிர்க்கட்சித் தலைவர்களும் நாடுகடந்து வாழ்வதைத் தவிர வேறு வழி யில்லை என்றே கருதுகிறோம் என அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வெள்ளி விழாக் கண்ட ஆஸ்திரேலிய சிட்னி தமிழ் அறிவகம்




ஆஸ்திரேலியாவில் பெருமளவிலான தமிழர்கள் வாழ்ந்து வரும் நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் தமிழர்களின் வாசிப்புத் தேடலைப் பூர்த்தி செய்து வரும் சிட்னி தமிழ் அறிவகத்தின் வருடாந்த கலாசார நிகழ்வான 'வசந்த மாலை – 2016' வெள்ளி விழா நிகழ்வாக நடைபெற்றுள்ளது.
இந்த நிகழ்வு Ryde இல் உள்ள Civic Centre மண்டபத்தில் கடந்த 8 ஆம் திகதி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.
நிகழ்வு ஹோம்புஷ் தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் தமிழ் மொழி வாழ்த்துடன் ஆரம்பமாகியது.
நிகழ்வில் பல்கலாசாரத்துக்கான பிரதியமைச்சரும் நியூசவுத்வேல்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். வருகை தந்திருந்த இரு பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேலை அணிந்து தமிழர்களின் பண்பாட்டுக்கு மதிப்பு கொடுத்திருந்தமை சபையோரின் பாராட்டைப் பெற்றது.
இவர்கள் தமது உரையில் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாகவும், அவர்களின் கடின உழைப்புத் தொடர்பிலும் குறிப்பிட்டு இருந்தனர். சிட்னி தமிழ் அறிவகத்தில் நீண்ட காலமாக தொண்டாற்றி வந்த சில மூத்த உறுப்பினர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.
நிகழ்வில் முத்தான மூன்று அம்சங்கள் இடம்பெற்றிருந்தன.
முதலாவதாக சிட்னியைச் சேர்ந்த இளையோர் வழங்கிய இசை நிகழ்வும் தொடர்ந்து Recover இசைக்குழு, Karaoke இசையுடன் வழங்கிய சில தமிழ்ச் சினிமாப் பாடல்களும், இறுதியாக 'பரதாலயா' நடனப் பள்ளி மாணவர்கள் வழங்கிய பரத நாட்டிய நிகழ்வும் இடம் பெற்றன.
இந்த நிகழ்வுகள் அனைத்தும் சிட்னியில் வாழ்ந்து வரும் சிறுவர்களும் இளையோர்களும் இணைந்து வழங்கிய நிகழ்வுகள் ஆகும். இதன் ஊடாக சிட்னி தமிழ் அறிவகத்தின் மிக முக்கிய நோக்கமான எதிர்காலச் சந்ததியினரை தமிழ் அறிவகத்துடன் இணைப்பது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு எனக் கூறலாம்.
முக்கியமாக நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கிய பல்கலைக்கழக மாணவி அனைவரினதும் பாராட்டுக்களையும் பெற்றிருந்தார். இவர் உயர்தரப் பரீட்சையில் தமிழை ஒரு பாடமாக எடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
இவ்வாறு இளையோரை ஊக்குவிப்பதில் சிட்னி தமிழ் அறிவகம் தனக்கெனத் தனியொரு இடத்தைத் தக்க வைத்திருப்பது நோக்கத்தக்கது.




















# பிறப்பு முதல் இறப்பு வரை
## பிறந்த எண்ணின் பலன்கள்
## 1

சகல எண்களுக்கும் இந்த முதலாம் எண்ணே தலைமை வகிக்கிறது. எமது சூரியக் குடும்பத்தின் தலைவனான சூரியன் தான், இதனை ஆட்சி செய்கிறார். இந்த எண்ணில் பிறந்தவர்கள் பழகுவதற்கும், பார்வைக்கும் கம்பீரமானவர்கள். தன்னம்பிக்கை இவர்களிடம் அதிகம் இருக்கும். இவர்கள் மற்றவர்களைக் கடுமையாக வேலை வாங்குவார்கள். ஆனால் அதே சமயம் மனித நேயத்துடன், அவர்களுடன் நடந்து கொள்வார்கள். மற்றவர்களிடம் எதையும் எதிர் பார்க்க மாட்டார்கள். தங்களின் பிரச்சினைகளை, அதிகம் தாங்களே சமாளித்துக் கொள்ளும் திறமையுடையவர்கள்.
அடுத்தவர்களுடன் விவாதித்தால் கௌரவம் போய்விடும் என்று நினைப்பவர்கள். அரசியல் அல்லது அரசு சார்ந்துள்ள தொழில்கள், உத்தியோகங்கள் இவர்களுக்கு நிச்சயம் ஏற்படும். ஒன்றின் எண் ஆதிக்கம் நன்கு அமைந்திருந்தால், (பெரும்பாலும்) இவர்கள் அரசியலில் பெரும்செல்வாக்குடன் விளங்குவார்கள். ஆனால் நாணயமான அரசியல்வாதிகள் என்று பெயர் எடுப்பார்கள். (இந்த எண்காரரர்கள் மட்டும் தான்). மற்றவர்கள் அரசியலில் ஈடுபட்டால் சுயநலம், பண வேட்கையும் அதிகமாகக் கொண்டு இருப்பார்கள். அதிகாரம் காண்பிப்பதில் இவர்கள் மிகவும் ஆசை கொண்டவர்கள். மற்றவர்களால் மதிக்கப்படுவார்கள். கடின உழைப்பும், கண்டிப்பான நடத்தையும் இவர்களைத் தலைமை ஸ்தானத்துக்குக் கொண்டு செல்லும்.
மனதில் ஊக்கமும், எதையும் தாங்கும் மனோபலமும் கொண்டவர்கள். தோல்வி ஏற்படுவதைத் தாங்கிக் கொண்டு மீண்டும் மீண்டும் மனத்துணிவுடனும், புதிய திட்டத்துடனும் சலிக்காமல் செயலாற்றுவார்கள். புதிய செய்தியை ஆராய்வதில் மகிழ்ச்சியடைவார்கள். நேர்மையான முறையிலேயே எதையும் அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். தாங்கள் உடுத்தும் உடைகள் மற்றும் அணியும் பொருள்கள் மிகவும் மதிப்பாகத் தெரிய வேண்டும் என்று அதற்காகச் செலவு செய்வர்கள். மன மகிழ்ச்சிக்காக தாராளமாகச் செலவு செய்யத் தயங்காதவர்கள்.
தாங்கள் உதவுவதைக் கூட வெளிப்படையாகச் சொல்லி விளம்பரம் அடைய ஆசைப்பட மாட்டார்கள். சூரிய புத்திரன், கர்ணன் இவரது ஆதிக்கம் நிறைந்தவர்கள். எதிரியுடன் நேரடியாகப் போரிட்டு வெற்றி பெற வேண்டும் என்று விரும்புவார்களே தவிர, குறுக்கு வழியைத் தேட மாட்டார்கள். இதனால் தான் சகுனியின் சதித் திட்டங்களை எல்லாம் கர்ணன் எதிர்த்துக் கொண்டே இருந்தான்.
தங்களின் இரக்க குணத்ததால் பல பிரச்சினைகளையும் சந்திப்பார்கள். ஆனால் நல்ல பெயரும் புகழும் நிச்சயம் அடைவார்கள். "இவர் தான் எனது நண்பன், இவர் தான் எனது எதிரி" என்று எதையும் மறைத்து வைக்காமல் கூறி விடுவார்கள். மிகுந்த ரோசமும், எதையும் எடை போடும் குணமும் உண்டு.
வாக்குறுதி கொடுத்து விட்டால் எப்பாடு பட்டாவது அதை நிறைவேற்றுவார்கள்.
பொதுவாகச் சோம்பேறித்தனமும், பொறாமையும் இவர்களுக்கு பிடிக்காது. அடுத்தவர் பொருள்களையும் சொத்துக்களையும் தீயென வெறுத்து ஒதுக்கி விடுபவர்கள் இவர்களே.
படிப்பறிவை விடப் பட்டறிவு (அனுபவம்) அதிகம் உண்டு. இந்த எண் சுறுசுறுப்பையும், படிப்பில் ஆர்வத்தையும் கொடுக்கும். மலை வாசஸ்தலங்களும், பெரும் பயணங்களும் இவர்களுக்கு மிகவும் பிடிக்கும். எந்தத் தொழிலிலும், நேர்மையையும், வாக்குறுதியையும் கடைப்பிடிப்பார்கள். இலாபத்துக்காகத் தங்களது மனச்சாட்சியை ஒதுக்க மாட்டார்கள். தேவையானால் பெருந்தன்மையுடன் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து விடுவார்கள். ஆனால் மற்றவர்கள் அலட்சியம் செய்தால் மட்டும் இவர்களால் தாங்க முடியாது. அவர்களை உண்டு அல்லது இல்லை எனச் செய்து விடுவார்கள். எப்படிப்பட்ட எதிரியும், நேராக வந்து மன்னிப்புக் கேட்டால், உடனே மன்னிக்கும் மாண்புடைத்தவர்கள். மீண்டும் அவர்களுக்கு உதவியும் செய்வார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா



# பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்

(குறித்த தலையங்கத்தில் நேற்றைய உதயனின் 17 ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது.)

இன்றைய காலகட்டத்தில் வேலைத் தளங்களில் பெண்களுக்கெதி ரான வன்முறைகள் குறைந்த பாடில்லை.
உடை, நடை, பாவனை, நாகரிகம், வசீ கரம் போன்றவற்றால் ஆட்கொள் ளப் பட்டு, பெண்களுடன் பொழுது போக் காக அளவுளாவுதல், கண்களால் அளைதல், தெரியாமல் கொள்ளாமல் படம் எடுத்துப் பயமுறுத்தல், பின் தொடருதல், அன்பளிப்புப் பொருள் வழங்குதல், வீடுவரை சென்று உதவு தல் , பதிலுக்குப் பாலியல் தஞ்சம் பெறு தல், குடும்ப திருப்தியீனம் பற்றி ஆறு தல் தேடல், இவை மூலம் வலுக்கட்டாய மாக நெருங்க வழிசமைத்தல், கட்டுக் கதைகளை உருவாக்கிப் பரப்புதல், ஆறுதல் தருவதுபோல அரவணைத்து அந்தரங்கள்ளப் பசியாறுதல், சிரிப்பில் தொடங்கி, கதையில் வளர்ந்து, வாழ்க்கை முறிவில் முடிவாகவல்ல அடாவடிகளாலேயே பெண்களின் பால் வன் முறைக் கலாசாரம் ஒரு சில திருமணமான வர் களாலேயே பெரு மளவு முன்னெடுக்கப்பட்டு வரு கிறது. எல்லோரு மல்ல, போதைப் பாவனையா ளர்களால் இரண்டாம் தாரமாக இன் னுமொரு பெண்ணை பாரமரித்துக் கொள்ள விரும்பப்படு கிறது. இதன் காரணமாக நாடு ஸ்தம்பி தமாகி, முரண்பாடுகளை உரு வாக்கி வன்முறைப் பரம் பலைப் பரவலாக்கி அடி தடி, கொலை வரைக் கும் மெல்லமெல்லக் கொண்டு செல்லப்படுகிறது.

**வெளியிடத்தாங்கல்**

தனியிடங்களாகவும், புரி யாதவையாகவும், புரியாதவர்களாக வும், இருப்பதனால் பாலியல் தொந் தரவுகளினாலும், பாலியல் சுரண்டல் களினா லும் , பாலியல் கண்காணிப்புக் கமராக் களினாலும் பெண்கள் கொஞ்ச நஞ்சமென்றல்லாது ஏறக்குறைய அறுபது வீதமானவர்கள் பாதிக்கப்படு கிறார்கள். பொதுவாக, போதைப் பொருள் பாவனை அதிகப்படியாக ஒரு சில தனியார் வீடுகளில் சுதந்திரமாக இடமளிப்பதனால் அதன் விளைவாக, காம வயப்பட்டு சந்தர்ப்பங்களை உதவி களாக வழங்கி, பெண்களிடம் தங்களது சின்னச்சின்ன ஆசைகளையும், அவ ளது உரிமைகளையும் பகிர்ந்து கொள் கிறார்கள். பெண்களது சுதந்திரமான உடை, நடை, பாவனையில் ஆண் களது இளமை ஊஞ்சல் ஆடுவத னாலே, வயதென்றும் பாராமல் அற்ப சொற்ப சுகங்களை அனுபவிப்பதற்காக நேரக் கணக்கில் சிலர் தவம் கிடக்கின் றார்கள். ஏதோ பெற்று விடுகிறார்கள். ஊடகங்களில் வரும் செய்திகளை ஊட றுத்து வருபவை அத்தனையும் பெண் களுக்கு எதிராக வன்முறை களாகவே காணப்படுகின்றன. இவற்றுக்கான பரிகாரம் பெண்களுக்கானவை. தனி மைப்படுத்தப்பட வேண்டும். மற்றும் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட வேண்டும்.
6. விசேட வைபவங்களின்போது, அது வும் புது இடங்களாகவும், புதியவர் களாகவும், அறிமுகம் அற்ற நண்பர் களாகவும், பழகவேண்டிய நிர்ப்பந்த மாகவும், சரி செய்து போகவேண்டியவர் களாகவும் தலைவிதி அமைவதால், தன்னை இழந்த நிலையில், சுய நினைவற்ற நிலையில் அடிப்படையில், என்னென்ன செய்யமுடியுமோ அத் தனையும் வலுக்கசீதமான முறையில், வலுக்கட்டாயம் செய்து வன்முறை லீசய் யப்பட்ட பெண்களை நாம் இணங்கண் டுள்ளோம். இவை போரின் பின் கூடுத லாக இடம் பெற்று வந்துள்ளன.
மூன்றாவது தரப்பிடம் பெண்கள் அகப் பட்டுவருவது தற்போது அதிகரித்து வருகின்றது. இதில் பெண்மையைப் பாதுகாப்பதென்பது இயலாத காரிய மாகி விட்டது. கிரகதோசம், பேயோட்டல் என்ற போர் வையிலும், பில்லி, சூனி யம் என்ற மூட நம்பிக்கையி லும் பெண்கள் சேதாரமாக்கப்படுகின்றார் கள். இந்தியாவிலும், இலங்கையிலும் இது போன்ற வன்முறைகள் பல்கிப் பெருகி வருகின்றன. அறிவு என்ற ஆயுதத்தாலே இத்தகு மூடநம்பிக்கைகளை வென் றெடுக்க முடியும்.
வெளிநாட்டுப் பயணங்கள் ஒரு நில வேலை வாய்ப்புத் தளங்கள், நடமாட்டம் இல் லாத சமயோசித இடங்களே பெண்களைக் கடத்துவதற் கும், பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், குற்ற வாளிகள் தப்பித்துக் கொள் வதற்கும் வாய்ப்பாக அமை கின்றன. இந்த வகை செயற் பாடுகளில் பாதுகாவலர்கள் சிலர் பாலியல் இம்சைகளில் ஈடுபடுகிறார்கள்.
வேலியே பயிர்களை மேய் கின்றன. அந்த வேலிகளே கொலையாளிகளாக மாறு கின்றபோது, பெண்கள் ஏமாற் றப்பட்டு, ஊடகங்களில் முதற் பக்கத் தலைப்புச் செய்தியாக வருமளவுக்கு சாவை எதிர் நோக்குகின்றார்கள்.
எனவே மேற்கூறியவை தொடர்பாக, விழிப்புணர்வுச் செயற்பாடுகளைச் சகல மட்டங்களிலும் உயிரோட்டமாக வைத்திருக்க, பெரியதோர் செயற்றிட் டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். முறையாகவும், கண்ணியமாகவும், நம்பிக்கையாகவும், ஒரு பலமான அலகு பெண்களுக்காக ஒவ்வோர் பிரதேச மட்டங்களிலும் இயங்குமா யின் பெண்களோடு அனைவருமே வன்முறைகளில் இருந்து காப்பாற்றப் படுவார்கள். எல்லாம் வல்ல இறைவ னோடு, அரசும், நாடாளுமன்ற உறுப்பி னர்களும், மாகாண சபைகளும், மத குருமார்களும், சனசமூக நிலை யங்களும், ஊருக்குப் பெரியவர்களும் இணைந்து பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பார்களாக இருந்தால் எமது நாடு சிவபூமியாகும். அதைவிடுத்து, எமக்கென்ன அவரவர் பட்டபாடு, நான் உயர்ந்தால் போதும் என்றிருந்தால், கண்ணீரிலே பெண் கள் வாடிவதங்க வேண்டியே வரும்.
THE FORUM AGAINST GENDER BASED VIOLENCE (GBV) பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான மன்றம் உலகளாவிய ரீதியில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதி யத்தால் (UNITED NATIONS POPULATION FUND & UNFPA) 2005 ஓகஸ்ட் 24 ஆம் திகதி முதல் தலைமை தாங்கப்பட்டு வருகிறது. இதனுடைய அழுத்தம் போதாமை என்று கருத இடமுண்டு.

(முற்றும்)

## *சவால்கள்*

1. பெண்கள், (ஒரு சிலரைத் தவிர) ஆண்கள் எவரையுமே நம்ப முடியாதவர்களாக இவ்வு லக வாழ்வை ஒப்பேற்ற வேண்டியவர்களாகி வாழ்ந்த முடிகின்றார்கள்.
2. குடும்ப உறவுகளால் ஏற்படுத்தப்படும் பகிரங்கப்படுத்த முடியாத பாலியல் சுரண்டல் களும் அதற்கான பயமுறுத்தல்களும்.
3. வறுமை நிலைக்குப் பலியாகும் இளமையும், இரையாகும் பெண்மையும் உதவிகளும் அடிமையாகும் பாலியல் கோரல்களும் விடுபடமுடியாத எழுதப்படாத வாழ்க்கை முறை,
4. தனித்து விடப்பட்டவர்களுக்கு. அரசுகளின் பாராமுகம், வீட்டு வசதியின்மை, கழிப்பறை வசதியின்மை, பொருளாதார வாய்ப்பின்மையால் மூன்றாமவர் புகுந்திடும் வசதியும் வாய்ப்பும்,
5. உடன்பணம் என்ற தோரணையில், உலகத்தோடு ஒத்துப் போகவேண்டிய நாகரிகமான பிள்ளைகளின் தேவைகளைச் சமாளிக்க வேண்டியதால் வணிக ரீதியாகவும், வரு மான ரீதியாகவும் ஏனையவருக்கு வரமாக வேண்டிய அந்தரித்த நிலை,
6. வேலைத்தளங்களில் சமத்துவப் பாகுபாடும், அடிமைத்தனமும்,
7. வேலை வாய்ப்புக்களில் கோரப்படும் பாலியல் லஞ்சங்கள்,
8. கதிரைகளின்,பேராசைக்காகத் தேவையாக்கப்படும் பாலியல் கொடுப்பனவுகள்,
9. நல்லதோர்தலைவன் இல்லாத சமூகத்தில் வாழும் துர்ப்பாக்கிய நிலை.
10. மற்றும் பெண்களுக்கெதிரான பாரபட்சம், உரிமை மறுப்பு, பால் சமத்துவமின்மை, சுதந்திரமாகவும் பகிரங்கமாகவும் கருத்துக்களை வழங்க முடியாத அச்சுறுத்தும் நிலை, முன்னேற்றங்களுக்கு ஆன பொறிமுறை காணப்படாமை, சீதனத்தின் மீதான அடக்கு முறை, போதையாகவும், போகமாகவும், உடற்பசிக்கு இரையாகும் காமப்பொருளாக மட்டும் ஏற்றுக்கொள்ளும் அறியாமை, அடுக்களைப் பொருளாக்கி அக்கினிக் குஞ்சுகளாக சூடாக்கி அனுபவிக்கும் அடாவடிகளை எதிர்க்க முடியாமை போன்ற சவால்களினால் பெண்களுக்கெதிரான வன்முறைகள் உலக அளவிலும் எமது நாட்டிலும் சட்டங்களையும் மீறி நடைபெறுகின்றன. கடுமையான சட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அவசர உதவிகள், தொலைபேசிகள் துரிதமாக இயங்க வழிசமைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உள்ளவரை அழியாது

# ரி.எம்.எஸ்ஸின் புகழ்



## இன்று ரி.எம்.சௌந்தராஜனின் மூன்றாவது நினைவுதினம்

■ மு.ஈழத்தமிழ்மணி

தமிழ்த் திரை உலகைச் சுமார் அறுபது ஆண்டுகளாகத் தனது கம்பீரக் குரலால் கட்டிவைத்து ஒவ்வொருவருடைய உள்ளங்களையும் இசையால் உருக வைத்த தென்னிந்தியத் திரைப்படப் பாடகரான ரி.எம்.சௌந்தரராஜனின் மூன்றாம்ஆண்டுநினைவு நாள் இன்றாகும்.

இசையால் வசமாகா இதயமெது? ஆம்! எத்தகையவர்களையும் ஆகர்சிக்கும் வல்லமை கொண்டது இசை. ஆனால், இந்த இசையைப் படைக்கும் வல்லமை என்பது இறைவன் கொடுத்த வரமாகும். அத்தகைய வரம் எல்லோருக்கும் எளிதில் கிடைப்பதில்லை. பெறுதற்கரிய இந்த வரத்தைப் பெற்ற பல இசை விற்பன்னர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராகத் திகழ்ந்தவர்தான் ரி.எம்.எஸ். என்று எல்லோராலும் அன்புடன் அழைக் கப்பட்ட தொகுளுவா மீனாட்சி ஐயங்கார் சௌந்தரராஜன் ஆவார்.

திரை இசைத் துறையில் பின்னணிப் பாடகராவதற்கு ரி.எம்.எஸ். பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. 1946ஆம்ஆண்டுதமது 23ஆவது வயதில் கிருஸ்ண விஜயம் என்ற படத்தில் ராதே நீ என்னை விட்டுப் போகாதேடி... என்ற பாடலைப் பாடினார். தன்னுடைய ஏழு வயதிலிருந்தே, தனது குரல் வளத்தின் மீது அக்கறை காட்டத் தொடங்கிய அவர் 1941 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை தமிழ்த் திரையுலகில் ஆறு தசாப்தங்களுக்கு மேலாக தென்னிந்திய திரையுலகின் முன்னணிக் கதாநாயகர்களுக்குப் பின்னணி கொடுத்தவர்.

ரி.எம்.சௌந்தரராஜன் ஒவ்வொரு நடிகர்களுக்காகவும் பாடும்போது அவர்களின் குரலுக்கேற்றவாறு தனது சாரீரத்தை மாற்றிப் பாடக்கூடிய வல்லமை பெற்றிருந்தார். அதன் காரணமாகவே அவரது பாடல்கள் நடிகர்களுக்கு கனகச்சிதமாகப் பொருந்தி அவர்களே பாடுவதுபோல் அமைந்துவிடும்.

1946 இல் இருந்து 2010 ஆம் ஆண்டு வரை பத்தாயிரம் திரைப்படப் பாடல்களையும், பக்திப் பாடல்களையும் தனிப் பாடல்களையும் பாடியுள்ளார்.. சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர், ஜெமினி, ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், எஸ்.எஸ்.இராஜேந்திரன், சிவகுமார், ரஜனிகாந்த், கமலஹாசன் உட்பட மற்றும் பல இளையதலைமுறை நடிகர்களுக்காகவும் ரி.எம்.எஸ்.பாடியிருக்கின்றார்.

ரி.எம்.எஸ்.தானே இசையமைத்துப் பாடிய பாடல் கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்.. என்ற பக்திப் பாடலாகும். இதில் ஒவ்வொரு சரணத்திலும் ஒவ்வொரு இராகத்தின் பெயர் வரும். அந்தந்த சரணங்களை அந்தந்த இராகத்திலேயே இசையமைத்துப் பாடியமை அவரது மிகச் சிறந்த சாதனையாகும்.

சிவாஜி கணேசனின் திரைக் குரலாக ரி.எம்.எஸ்.மாறினார். ரி.எம்.எஸ் குரலும் உச்சரிப்பும், கம்பீரப் பாணியும், தமிழகமெங்கும் பேசப்பட்டன. மலைக்கள்ளன் படத்தில் எம்.ஜி.ஆரின் குரலாகவும், ரி.எம்.எஸ் மாறினார். எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் என்ற பாடலையே எம்.ஜி.ஆருக்காகப் பாடினார். ரி.எம். சௌந்தரராஜனின் வருகையுடன் தமிழ்ப் பின்னணிப் பாடல்கள் நிரந்தர மாற்றத்தை அடைந்தன.

கர்நாடகப் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், மேல் நாட்டு இசைப் பாடல்கள், தத்துவப் பாடல்கள் என எந்தப் பாடல்களிலும் அவர் உணர்ச்சிகளை வெளிப்படையாக உருவாக்கினார். எல்லாப் பாடல்களையும் உணர்ந்து பாடியதோடு, காதல் கீதங்கள், எழுச்சிப் பாடல்கள், சோகப் பாடல்கள் என்று பல்வேறு வகைப் பாடல்களையும் பாடினார். அவரது பாடும் பணியே ஒரு நடிகனைப் பார்க்கும் உணர்ச்சியை மக்களுக்குக் கொண்டு வந்ததால் மக்கள் அவரின் குரலுக்குக் கட்டுண்டனர். இசையமைப்பாளர்களின் கற்பனையின் நெளிவு சுளிவுகளையும், கற்பனைகளையும் தமது குரலில் கொண்டு வருபவர்கள் பாடகர்கள். அந்த வரிசையில் முதலிடம் பெறுபவர் ரி.எம்.எஸ்.ரி.எம்.எஸ்ஸின் குரலுக்குப் பல அவதாரங்கள் காணப்பட்டன. கவிஞர் வாலியைத் திரையுலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் ரி.எம்.எஸ்தான். நான் இப்போது சாப்பிடுகின்ற சோறு ரி.எம்.எஸ். போட்டது என்று கவிஞர் வாலி தயங்காது கூறி நெகிழ்வார்.

> ரி.எம்.சௌந்தரராஜன் ஒவ்வொரு நடிகர்களுக்காகவும் பாடும்போது அவர்களின் குரலுக்கேற்றவாறு தனது சாரீரத்தை மாற்றிப் பாடக்கூடிய வல்லமை பெற்றிருந்தார். அதன் காரணமாகவே அவரது பாடல்கள் நடிகர்களுக்கு கன கச்சிதமாகப் பொருந்தி அவர்களே பாடுவது போல் அமைந்து விடும்.

நீராடும் கடலுடுத்த என்ற தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலையும் ஜனகணமண என்ற இந்தியாவின் தேசிய கீதத்தையும் எவரும் பாடமுன் வராத நிலையில் சுசிலாவுடன் இணைந்து ரி.எம்.எஸ் பாடியமை அந்த நாளில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டதொன்றாகும்.

சொன்னதை மட்டும் பாடிவிட்டு செல்லாமல் தன் கற்பனையையும் கலந்து மெருகூட்டிப் பாடும் ஆற்றல் ரி.எம்.எஸ்ஸிடம் இருந்தது. சிவாஜிக்காக அடிவயிற்றிலிருந்து குரலை எழுப்பிப் பாடுவார். எம்.ஜி.ஆருக்காக மூக்கிலிருந்து குரல் வருவது போல் பாடுவார்.

எத்தகைய பாடல்களையும் இயல்பாகப் பாடக்கூடிய ரி.எம்.எஸ் பல பாடகர்கள், பாடகிகளுடன் இணைந்தும் பல பாடல்களைப் பாடியுள்ளார். சீர்காழி கோவிந்தராஜன், பி.பி.ஸ்ரீநிவாஸ், ஏ.எம்.ராஜா, பின்னர் வந்த கே.ஜே. ஜேசுதாஸ், எம்.பி.பாலசுப்பிரமணியம், மலேசியா வாசுதேவன், ஏ.எல். ராகவன் ஆகியோருடன் இணைந்து பாடியுள்ளார். பி.சுசீலா, எஸ்.ஜானகி, வாணி ஜெயராம், எல்.ஆர். ஈஸ்வரி, எஸ்.பி. சைலஜா, கே.கலா, சூலமங்கலம் ராஜ லக்சுமி, வசந்தா உட்படப் பல பாடகிகளுடன் இணைந்து பாடி மக்களின் பெரும் வரவேற்பையும் பெற்றுக் கொண்டவராவார்.

முருக பக்தரான இவர், முருகன் மீது அதிகமான பாடல்களைப்பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்களில் 'மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்' 'முருகா உன் பாட்டெல்லாம் இனிக்கின்றது' 'முருகா என்றழைக்கவா' ஆகிய பாடல்கள் இன்றும் நெஞ்சில் நிறைந்த பாடல்களாகும்.

அன்னையின் பெருமை பேசும் பல பாடல்களையும் பாடியிருந்தார். 'தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை', 'அம்மா நீ சுமந்த பிள்ளை', தாயில்லாமல் நானில்லை,

(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரிசனங்கள்-8

**அப்புச்சி**

தேவைப்படும் ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கு மனதில் துணிவென்பது இருக்க வேண்டும். அச்சம் தவிர்த்து, ஆண்மை மிடுக்கோடு இது என்னால் முடியும்... எனக் கொள்கின், சுமையாகத் தெரிந்தவையெல்லாம் சுலபமாகத் தோன்ற ஆரம்பிக்கும்.

அதேவேளை மனதானது சற்றுக் கிலேசப்பட்டு, "இது என்னால் முடியுமோ...?" எனச் சற்றுப்பின் வாங்கி நிற்பின், எமக்குத் தேவையான காரியங்களைத் தொடர்ந்தும் ஆற்றுவதென்பது சற்றுக் கடினமானதாகவே தோற்றமளிக்கத் தொடங்கும்.

90 களின் ஆரம்பத்தில் பத்திரிகைத் தொழிலுக்கு நான் புதியவனாக உள்வாங்கப்பட்டபோது, பத்திரிகை ஊடகத்தைப்பற்றி எனக்கெதுவும் தெரிந்திருக்கவில்லை. சடுதியாக ஒப்புநோக்குநர், பயிலுநர், பணிக்கு அமர்த்தப் பட்டபோது, எழுத்துப் பிழைகள் திருத்துவதற்கான குறியீடுகளில் நான்கே நான்கு குறியீடுகள் மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தன.

**அவையாவன**

எழுத்துக்களை நீக்குவது (dc), எழுத்துக்களை இணைப்பது(=), எழுத்துக்களைப் பிரிப்பது(#), எழுத்துக்கள் மாறி இருப்பின் அதைச் சுட்டிக்காட்டும் குறியீடு (ᔕ) என்பவை மட்டுமே தெரிந்திருந்தன.

ஒப்புநோக்குநர் பகுதியில் இருந்த ஒருவர், "உங்களுக்கு பிரதியில் எழுதுப்பிழைகள் திருத்துவதற்கான குறியீடுகள் குறித்து எல்லாம் தெரியுமா?'' என்று கேட்டார். அதற்கு நானும் "ஓம் ...! ஓரளவு தெரியும்..." என்று ஒரு பொய்யைச் சொல்லி வைத்தேன்.

**காரணம்**

கவிஞர் கண்ணதாசன் தனது சுய சரிதையொன்றில் எழுதியிருந்த விடயம் அந்தக்கணம் எனது ஞாபகத்துக்கு வந்தது.

கண்ணதாசன் முதன்முதலாக பத்திரிகைத்துறைக்குள் வேலைக்குச் சென்றபோது, அவருக்கு அந்தத் துறைபற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. அங்குள்ளவர்கள் உமக்குப் 'புறூவ்' பார்க்கத் தெரியுமா...? என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குக் கவிஞர் ஆம்...! எனக்குத் தெரியும்...? என்றே பதிலளித்து விட்டார்.

சம்பந்தப்பட்டவர்கள் அவரை ஒப்புநோக்குநர் பகுதிக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள முதன்மைப் பணிப்பாளரிடம் அவரைப்பற்றிக் கூறிவிட்டு நகர்ந்து விட்டனர்.

கண்ணதாசனும் புறூவ் (எழுத்துப் பிழை) பார்க்கும் பணியை ஆரம்பிக்கமுன்பு, அவர் செய்த ஒரு வேலை என்னவென்றால், அங்கு மேசையில் ஏனையவர்களால் புறூவ் பார்த்து வைக்கப்பட்டிருந்த, செய்திப்பிரதிகள் சிலவற்றை எடுத்து, அதில் திருத்தங்கள் என்ன வடிவமைப்பில் போடப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்களால் மனதினுள் பதிந்துகொண்டு அதற்கான குறியீடுகளையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு தனது பணியை ஆரம்பித்தார்.

நாளடைவில் (சுமார் இரண்டு வாரத்துக்குள்) அவரால் அந்தத் தொழிலில் ஓரளவு தேறமுடிந்திருந்தது. அந்தத் தேறலையும், பெற்றுக்கொண்ட அனுபவத்தையும் வலுவாகப் பற்றிப்பிடித்துக் கொண்டு அவர் அடுத்த கட்ட முயற்சிக்குத் தயாரானார்.

இங்கே கண்ணதாசனுக்குக் கைகொடுத்து உதவியிருப்பது துணிவு! அந்தத் தற்துணிவு ஒன்றே அவருக்குப் போதுமானதாக இருந்திருக்கிறது. ஆரம்பத்தில் "உமக்குப் புறூவ் பார்க்கத் தெரியுமா...?" என்று கேட்ட கேள்விக்கு கவிஞர் "இல்லை.. எனக்குத் தெரியாது...?" எனக் கூறியிருப்பாராகில், அங்குள்ள வர்களால் அவர் இரண்டாம் பட்சமாகவே நடத்தப்படுவது மட்டுமன்றி, பல ஏளனங்களுக்கும், எள்ளல்களுக்கும் ஆளாகவேண்டிய நிலை வந்திருக்கும். என்னால் இதைச் செய்ய முடியும்...! என்று மனதுக்குள் ஏதோவொரு சக்தி உந்துமாக இருந்தால், துணிந்து அந்தக் காரியத்தில் இறங்கிவிட வேண்டும். பயம் தேவையில்லை. தயக்கம் காட்டிக் கொண்டு நிற்கும் ஒவ்வொரு கணங்களும், அந்தக் காரியத்தை வேறொருவர் ஆற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிவிடும்.

இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட எழுத்துப்பிழை திருத்துவதற்கான நான்கு குறியீடுகளையும் எனக்குத் தெரியப்படுத்தி, பயப்படவேண்டாம்! உள்ளுக்கை போய் விட்டால் எல்லாம் பழகிவிடலாம்.. என்று என்னைத் தைரியப்படுத்தி, உற்சாகமூட்டியவர், என்னைப் போன்றே ஆரம்ப எழுத்தாளரும், கவிஞருமான கோண்டாவில் செ.பொ.சிவனேசு. பலகாலமாக இவரைப்பற்றிய தகவல்களை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. காணாமற் போய் விட்டதாகவும் ஒரு தகவல் உண்டு.

ஊடகத்துறைக்குள் ஒப்புநோக்குநர் பகுதி என்பது உடம்புக்குத் தலை போன்ற பிரதான ஒரு பகுதியாகும். இந்தப் பகுதிக்குள் பணியாற்றுபவர்களுக்கு பத்திரிகைத் துறை சார்ந்த தேடலும், விசுவாசத்தோடு கூடிய கடமை உணர்வும், மனமுவந்த அர்ப்பணிப்பும் இவை எல்லாவற்றையும் விட பொறுமை, சகிப்புத் தன்மை நிரம்பப்பெற்ற உணர்வு மற்றும் ஒருவர் பலவீனத்தை இன்னொருவர் தாங்கி வழி நடத்தும் பண்பு போன்ற தகைமைகளை நிரம்பப்பெற்றிருத்தல் வேண்டும்.

ஏனெனில், ஒரு பத்திரிகையின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் இந்த ஒப்புநோக்குநர்களின் கைக்ளில்தான் தங்கியிருக்கின்றன. எழுத்துப் பிழைகள், கருத்துப்பிழைகள், வசனப்பிழைகள் போன்றவற்றை ஒப்புநோக்குநர் கவனிக்கத் தவறின், அதில் உள்ள ஒரு சிறு பிழையே பெரிய பாரதூரமான வில்லங்கத்தில் கொண்டுவந்து விட்டுவிடக் கூடும். அதுமட்டுமன்றி, அந்தப் பத்திரிகை நிறுவனத்தையும் சட்டத்துறை "சீல்" வைத்துப் பூட்டி விடக் கூடிய நிலையும் ஏற்பட்டு விடும்.

உதாரணத்துக்கு இங்கே ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டலாம் பத்திரிகையில் வரவேண்டிய ஓர் அரசியல் சார்ந்த செய்தியில் "நாளை மறுதினம் எமது கிராமத்துக்கு மாவட்ட மந்திரி வருகிறார் ..." எனும் வாக்கியத்தில் அமைந்த, 'மாவட்ட' எனும் சொல்லில் வ–னாக்குப் பக்கத்தில் ஓர் அரவு (ா) தவறுதலாகச் சேர்க்கப்பட்டு அந்தச் சொல் ஒப்புநோக்குநர்களால் கவனிக்கத் தவறப்படுமானால், மறு நாள் அந்தப்பத்திரிகையில் அந்த வாக்கியம் "நாளை மறுதினம் எமது மாவட்டத்துக்கு 'மாவாட்ட' மந்திரி வருகிறார்..." எனப் பிரசுரமாகி விட்டிருக்கும். வாசகர்களின் பகிடிக்கும் ஆளாகிவிடும்

பத்திரிகைத்துறையில் ஒப்புநோக்குநர்களுக்கு தவறுகள் என்பவை தவிர்க்கமுடியாதவை. அதனால் தவறுகள் விடுதலே தொழிலாக இருக்கக் கூடாது... என்பது எனது கடந்த கால பத்திரிகை ஊடகத்தில் பணியாற்றிய அனுபவத்தின் வெளிப்பாடாகும்.

(தொடரும்)

கவிஞர் கண்ணதாசன் தனது சுய சரிதையொன்றில் எழுதியிருந்த விடயம் அந்தக்கணம் எனது ஞாபகத்துக்கு வந்தது. கண்ணதாசன் முதன்முதலாக பத்திரிகைத்துறைக்குள் வேலைக்குச் சென்றபோது, அவருக்கு அந்தத் துறை பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. அங்குள்ளவர்கள் உமக்குப் 'புறூவ்' பார்க்கத் தெரியுமா...? என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குக் கவிஞர் ஆம்...! எனக்குத் தெரியும்...? என்றே பதிலளித்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











**கலைப் போட்டிகள்**

வன்னிக்குறோஸ் கலாசாரப் பேரவையினால் தொடர்ந்து நடத்தப்பட்ட கலைப்போட்டிகளின் மற்றுமோரு நிகழ்வு யோகபுரம் மாகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் பண்டார வன்னியன் வரலாற்று நாடகம், அரிச்சந்திர மயான காண்டம் மற்றும் சமூக நாடகப் போட்டிகள் நடைபெற்றன. மேற்படி நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடமாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# சமூகப் பொறுப்புகளை உணர்த்தும் தளவாசல்

செ.மகேஷ்

தளவாசல் என்னும் நாமத்தோடு கலை, இலக்கிய, சமூக, பண்பாட்டுக் காலாண்டிதழ் எழுகலை இலக்கியப் பேரவையினரால் வெளியிடப்பட்டுள்ளது. படைப்புகளுக்கும் படைப்பாளிகளுக்கும் இருக்கவேண்டிய சமூகப் பொறுப்புகள் குறித்த ஆழமான சிந்தித்தலின் விளைவே இந்தத் தளவாசலின் தோற்றம் என்பதை இதழின் உள்ளடக்கம் எடுத்துரைக்கின்றது. இதன்வழி இலக்கியம், மொழியின் மரபு, நவீனம், பின்னவீனத்துவம் என்பவற்றைக் கடந்து சமூக இயக்கத்துக்கான ஒரு பொதுத் தளமாகத் தளவாசல் சஞ்சிகை முன்னடக்க வேண்டும் என்று அவாவுவது புலனாகின்றது.

போருக்குப் பின்னரான சமூகத்தின் மீளெழுச்சி குறித்துப் பேசும் ம.செல்வின் அவர்களது கட்டுரை எமது சமூகத்தால் வாசிக்கப்படுவதும் அந்தக் கட்டுரையின் மூலம் எழுப்பப்படும் கேள்விகளுக்கு விடைகாண்பதும் அவசியமாகின்றது. வாசிப்பின் அவசியமும் அதன்மூலம் பெற்ற கல்வி அறிவின்பால் விரியும் சிந்தனைகளுக்குச் செயலுருவம் கொடுக்கப்படுவதும் தளவாசலைத் தொடுபவர்களின் விருப்பாதல் வேண்டும்.

ஒரு சஞ்சிகையின் வழமையான வடிவமைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் அப்பால் சமூகத்தின் தேவைக்கும் தேடலுக்கும் தீனி தந்து வாசிப்புக்கான இலக்கியப் பதாகைகளைச் சஞ்சிகையினுள் தொங்கவிட்டுள்ளனர்.

ஈரமேயில்லை நிலத்திலும் வீரமாய் நிமிர்ந்தார் என்று தொடங்கும் கவிதை வரிகள் வானுயர மிடுக்குடன் நிமிர்வேன் என இறுதிவரை அழுத்துகின்றது. சமூகம் கூனுதல் கடந்த நிமிர்தலால் நிலைத்துயரவேண்டும் என்கிறார் கவிஞர் கைசன்.

'அட' எனும் சிறுகதை இத்தனை துயரங்களுக்கும் அலைச்சல்களுக்கும் மத்தியில் வாழப்பழகிக் கொண்ட பலருள்ளே மனோகரனும் ஒருவன் என்பதாய்க் காட்டினாலும் அந்த வாழ்க்கையும் வசதிகளும் 'அட' இது மனோகரன் தம்பி என வாய்விட்டுச் சொன்ன சிவராசாவின் வார்த்தைகளுக்குள் தோல்வியும் வெற்றியும் கலந்த ஆயிரம் அர்த்தங்கள் தொக்கி நிற்கின்றன.

சி.கதிர்காமநாதன் எழுதியுள்ள 'இரவு நாடகம்' எனும் சிறுகதையில் இசை நாடகம் பார்க்கப்போன தம்பதிகள் வீட்டுக்குத் திரும்பிய நிலையில் ஒரு நாடகம் முடிஞ்சுதம்மா மற்ற நாடகத்தை வீட்டை வந்தவுடன் சொல்லுறன்... என்ற வார்த்தைகளுக்குள் பின்னோக்கிச் சிந்திக்க வைத்துள்ளார்.

வைத்தியநிபுணர் த.சத்தியமூர்த்தி சவால்களுக்கு மத்தியில் உன்னதமான மானுடநேய மருத்துவசேவை முழங்காவிலில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை எனத் தலைப்பிட்ட கட்டுரையில் அவர் தாம் அனுபவித்துக் கண்ட காட்சிகளையும் கருத்துக்களையும் சிறப்பாக வடிவமைத்துள்ளார். வைத்திய சேவையின் மகத்துவம் இக்கட்டுரையில் உணர்த்தப்படுகிறது.

மூத்த பத்திரிகையாளர் பி.எஸ்.பெருமாள் அவர்களுடனான நேர்காணல், அனுபவமிக்க ஓர் ஊடகவியலாளன் என்ற நோக்கிற்கு அமைவாக நிறைவான பல தகவல்களை வாசகனுக்குத் தருகின்றது. ஊடக சுதந்திரம் என்பதும் ஊடக தர்மம் என்பதும் ஊடகங்கள் தலையீடு இன்றிச் செயற்படுவதையும் அவ்வாறு செயற்படுகையில் ஊடகங்கள் தமக்கென வகுத்துக்கொள்ளும் நெறிமுறைகளைக் கடைப்பிடித்துச் செயற்படுவதையும் குறிப்பிடலாம். தலையீடு இன்றி எனும்போது தாங்கள் நினைத்தபடி சமூகத்து நெறிமுறைகளுக்கு மாறாகச் செயற்படுவதை ஊடக சுதந்திரம் என்று




கொள்ள முடியாது அது பத்திரிகைச் சுதந்திரமும் ஆகாது என்கின்ற கருத்தில் அவரது தகவல்களின் கனதி புலனாகின்றது.

த.அஜந்தகுமார் வடித்துள்ள மூடாத மனம், படிப்பவனின் சிந்தனைக்குச் சிறகுகளைக் கட்டிவிடுகின்றது. நாக பத்மநாதன் வெளியிட்ட உருவகக் கதை நூலுக்கு கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய சிறப்புரைப் பகுதியிலிருந்து தரப்பட்டுள்ள பொழிப்புகளுடன் உறுதி எனும் உருவகக் கதை இந்த இதழில் அச்சேறியுள்ளது. அதில் உயிர் காத்த பனைமரத்தின் உறுதி எங்கள் உயிர் வாழும் மனவுறுதிக்கு வலுச் சேர்க்கிறது.

கலாநிதி கந்தையா சிறிகணேசன் இந்த இதழில் மக்களின் கலைஞன் அரசியல் போராளி எனக் குறித்த எஸ்.ரி.அரசு அவர்களைப்பற்றித் தரப்பட்டுள்ள தகவல்கள் தேடலோடு பயணிக்கும் இளங் கலைஞர்களுக்குப் பயன் தருவனவாகும்.

மேலும் முதலாவது தளவாசல் இதழை அலங்கரித்துள்ள ஆக்கங்க ளான ந.மயூரரூபனின் கைலாசபதி மேற்கட்டுமான மார்க்சியம், தெணியானின் ஈழத்துச் சமகால இலக்கியப்போக்கு, ல.குமணனின் பொருண்மியத்தின் சிதைவு பனையை முன்வைத்து, இ.இராஜேஸ்கண்ணனின் பண்பாட்டு அடையாளங்களின் உலகமயமாக்கல், தி.செல்வமனோகரனின் தமிழர் மெய்யியல், சி.சிவபாலனின் 4ஜி என்றால் என்ன?, செ.விக்னேஸ்வரனின் உயிர் அச்சுறுத்தலாகிவிடும் கம இரசாயனப் பாவனை என்றாகிய கட்டுரைகளும் கை.சரவணன், யாத்திரிகன், டானியல் சௌந்திரன், யதார்த்தன், குருதத், சிந்துதாசன், கிருசாந். சித்தாந் தன், வேலணையூர் சுரேஷ் ஆகியோரின் கவிதைகள் என்பவையும் யாவுமே தள வாசல் கொண்ட இலக்கினை நோக்கும் பார்வையோடு முன்னேறுவதைப் பார்க்கின்றோம்.


இறுதியாக என்.கேசவன் எழுதியுள்ள அவலக் குறிப்புகள் எனும் ஆக்கத்திலிருந்து தெரிவான இந்தப் பகுதியைப் பார்ப்போம்.

"வெளியீட்டுவிழா! இருந்த பெயர்கள் எல்லாவற்றுக்கும் வேலைகள் குறித்தொதுக்கப்பட்டிருந்தன. படித்து முடிக்கையில் கண்கள் சோருமளவில் சிறிய எழுத்துக்களால் (அனேகமாக பத்து அல்லது பதினொரு புள்ளியாக இருக்கலாம்) பக்கங்கள் நெரிவுபட்டன" எனும் கூற்று தளவாசல் இதழில் அச்சாகியுள்ள எழுத்தளவினை அதிகரிப்பதன் அவசியத்தைச் சுட்டி நிற்பதை நினைவூட்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவிச்சக்கர வண்டியிலூர்ந்த கவிச்சக்கரவர்த்தி

## பார்வதிநாதசிவம்



கே.எஸ்.சிவஞானராஜா

கற்போர் களித்த கலாபமயில், கற்போர்க்கு அளித்த நிலாக் குயில், சொற்போர் வளர்த்த சுந்தரப்புயல், சுற்றத்தவர் குளித்த இலக்கிய வயல்!

ஆமாம்! கலாப மயிலாக, நிலாக் குயிலாக, சுந்தரப் புயலாக, இலக்கிய வயலாக மிளிர்ந்தவரே துவிச்சக்கர வண்டியிலூர்ந்த கவிச்சக்கரவர்த்தி புலவர் ம.பார்வதிநாத சிவம் ஆவார்.

**குடும்பம்**

மாருதப்புரவீக வல்லியின் அற்புதம் நிகழ்ந்த மாவிட்டபுரத்தில், குருகவி மகாலிங்கம் அருமைமுத்து தம்பதியினருக்கு நான்காவது புதல்வராக 1936 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி பிறந்தவரே பார்வதிநாத சிவம் ஆவார். இவரது தந்தையார் பன்னிரண்டாவது வயதில், பழனிப்பதிகம் பாடியதால், குருகவி எனப் போற்றப்பட்டார். குருகவியின் நகைச்சுவை, பேச்சாற்றல், கவித்துவம், எழுத்தாற்றல் யாவும் ஒருங்கே சேர்ந்து, அவரது பேரப்பிள்ளைகளிடத்தே தொக்கு நிற்பதற்கு, பார்வதிநாதசிவம் பரமேஸ்வரி இருவரினது இல்லறமே மூலகாரணமாயிற்று. மகாலிங்கசிவம் அருமைமுத்து இருவரினது தமிழ்ப் பாரம்பரிய பண்பாட்டு வாழ்க்கை முறை, மிகவும் பக்குவமாக பார்வதிநாதசிவம் பரமேஸ்வரியிடம் ஒப்படைக்கப்பட்டு, எந்த வித தொய்வுமின்றி, பதம் கெடாமல், தமிழ் மணம் குன்றாது, அதே பக்கு வத்துடன், அவரது பிள்ளைகளான, பாரதி, மகாலிங்கசிவம், இளங்கோ, பாலமுரளி ஆகிய நால்வரிடமும் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. இவர்களில் மகாலிங்க சிவமும், பாரதியும் தமிழை நறுமணங்கமழ இன்றுவரை பெரும் பேறாக்கி, தமிழன்னையை அலங்கரித்து வருவதை இந்த மண் பதிவு செய்து கொள்கிறது. இளங்கோவும் பாலமுரளியும் செந்தமிழைத் தானம் செய்யும் பணியை மேற்கொண்டு, அரச பதவிகளில் உயர் நிலைக்குச் சொந்தக்காரராகியுள்ளனர்.

மொத்தத்தில், பார்வதிநாதசிவம் குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாகப் பெயர் கொண்டதெனலாம். இவரது பெரியப்பாவான பண்டிதர் ம.வே.திருஞானசம்பந்த பிள்ளை என்பவர், ஈழத்தில் ஆரம்பகால நாவலாசிரியராகவும், சிறுகதை எழுத்தாளராகவும், இந்து சாசனம் பத்திரிகையாசிரியராகவும், நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்த பதிப்பாசிரியராகவும், நாடக நடிகராகவும் விளங்கியவர்.

**கல்வி**

பார்வதிநாதசிவம் தனது ஆரம்பக்கல்வியை வீமன்காமம் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மகாஜனக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை இந்தியாவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் கற்று, ஆய்ந்து, புலவரானார். 1957 இல், புலவர் பட்டத்தின் தகைமையோடு, இலங்கை திரும்பி, 1961 இல், இராமநாதன் கல்லூரியில் இயங்கிய இராமநாதன் அக்கடமியிலும் பின்னர், கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார். சாதனை புரிந்தார்.

**குரு**

இவருக்குக் குருவாக அமைந்தவர்கள் குடும்பத்தவர்களான மகாலிங்கசிவம் எனும் தந்தையாருடன் இவருடைய தமையரான ம.வே.திருஞானசம்பந்த பிள்ளை மற்றும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை, இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர், பாரதிதாசன், பொன்னம்பலப்பிள்ளை ஆகியோரும் அடங்குவர். கவிஞர் கதிரேசர் பிள்ளையின் வாலாயமே தமிழுக்கு வலுச் சேர்த்தது.

**சிறப்பு**

இவரது படைப்புக்களில் பெரும் பாலானவை, உதயன்- சஞ்சீவி, வீரகேசரி, சுதந்திரன், சுடர், முரசொலி, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் இலக்கிய நயம் சொட்டும் கட்டுரைகளாகவும், கலக்கிய நகைச்சுவைக் கவிதைகளாகவும் மிளிர்ந்தன. எடுத்துக்காட்டாக ஒரு கவிதையைச் சுவைப்போம்.

நாடியைப் பார்த்தாரில்லை
நயனத்தைப் பார்த்தாரில்லை,
மாடியைப்பார்த்தவாறே
மருந்தை எழுதித்
தந்தார்,
நாடியைப் பார்த்துத்
தந்தால்

நன்றென்றேன்!
அருகில் நின்ற
லேடியைப் பார்க்க
வேண்டும்
லேட் இன்னே செல்
செல் என்றார்

சமூகச் சீர்கேட்டை நாசூக்காக நெஞ்சில் பதியுமாறும், ஜனரஞ்சமாக விளங்குமாறும் கவிதைகளிலே வடிக்கும் திறமை கொண்டவராக மிளிர்ந்த இவருக்கு, இலக்கிய மேதை, உரையாசிரியச் செம்மல், கலைச்சுடர் என்ற பட்டங்களும் நீடித்த ஆயுள் பெற்றன. 1992 ஆம் ஆண்டி லிருந்து, 2002 வரை சுமார் பத்து வருடங்கள் உதயன் பத்திரிகை ஆசிரி யர் பீடத்தில் கடமையாற்றிய மூத்த, சிரேஷ்ட பத்திரிகையாளராவார். ஏனையவர்களுக்கு வழிகாட்டியாய் அமைந்த ஊடகவியலாளர். நோகாத பேச்சு, நுண்ணிய பார்வை, எண்ணிய போக்கு, புண்ணிய பாவனை, கண் ணியமான வாழ்வு, திண்ணியமான நெஞ்சு, நண்ணிய சகவாசம், நாலு மறிந்த உபயோகம், சொன்னபடி கேட் கும் துவிச்சக்கரவண்டி, எதுகை மோனையாக ஓடும் மிதிவண்டி வேகம், வேட்டி சால்வையோடு தலைப் பாகையின் வேட்கை, பெண்ணின் மென்மையை ஒத்த பாதங்கள், புல்லுக்கும் நொந்திடாத திருவடிகள், எவரையுமே புண்படுத்தாத நடையுடை பாவனை எல்லாமே அமரர் பார்வதிநாதசிவத்தினுடைய பக்குவங்களாகும். ஆணவமோ, அகம்பாவமோ, அதிகாரமோ, புறம் கூறுதலோ எதுவுமற்ற மரபுக் கவிஞன். மானுடநேயம் மிக்க ஞானபானு, கருணையின் வடிவம், கால மறிந்த வாழ்வு. எமது எதிர்கால எதிர்பார்ப்பு என்று மகாகவி உருத்திரமூர்த்தியால் தவமாக்கப்பட்ட ஒப்பற்ற புலவர். இவரைத் தக்கமுறையில் இந்த மண் பயன்படுத்தவில்லையே என்பது காலத்தின் குற்றச்சாட்டாகும். நினையாப் பிரகாரமாக இறைவனே பூவுலகுக்கு வந்தால்கூட, அவர் பட்டதாரி இல்லை என்பதற்காக உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வருத்தங்களை வாழ்க்கையாக்கி இருக்கிறோமேயொழிய, வாழ்க்கையைப் பொருத்தமாக்க முடியவில்லை. அமரர் பார்வதிநாத சிவம் எழுத்துப்பிழை வருவதற்கு கனவிலும்- நனவிலும்- நினைவிலும் ஒருபோதும் இடமளிக்கமாட்டார். இத்தகு புலவர்களைக் காலம் கையெடுத்துக் கும்பிட்டேயாக வேண்டும். ஓர் எழுத்துப் பிழை விட்டாலும் பட்டம் பறிமுதல் என்று இருந்தால் இவ்வாறான பிழைகள் தோன்றாதல்லவா? பார்வதிநாதசிவத்தாரின் சாந்தமான செளகரியமான பண்புகளைப் பகிர்ந்து ஜீரணித்திருந்தால், அவரைப் பற்றி எழுதுவதற்கு இற்றைவரை எவரும் முயலவில்லையோ அல்லது இயலவில்லையோ என்பது சிந்தனைக் குரியது.

**படைப்புக்கள்**

1972 காதலும் கருணையும்,1980 இரு வேறு உலகம், 1988 இன்னும்ஒரு திங்கள், 1985 இரண்டு வரம் வேண்டும், 2001 பசிப்பிணி மருத்துவன், 2001 மானங்காத்த மறக்குடி வேந்தன், 2009 தமிழ்ச் செல்வம், 2011 பவளவிழா மலர். எழுபத்தேழு வருடங்கள் தமிழாகவே வாழ்ந்து தமிழன்னையைச் சுமங்கலியாய் வாழவைத்த புலவர் பார்வதிநாதசிவம் மாவிட்டபுரப் பதியில் வளர் முருகனோடு கலந்து திருப்புகழால் போற்றப்படுகின்றார்.







## நூல் வெளியீடும் அறிமுக விழாவும்

புதிய பாடத்திட்டத்திட்டத்துக்கு அமைவாக வி.குகநாத வி.பாலமுரளி ஆகியோரால் எழுதப்பட்ட தரம் 10 கண நூல் வெளியீடும், உரைகல் நூல் அறிமுக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவா சுவாமி கள் சிறு இல்லத்தில் கிளிநொச்சி மாவட்ட ஓய்வு நிலை அரச பர் தி.இராசநாயகம் தலைமையில் இடம்பெற்றது. பேராசிரியர் கு.மிகுந்தன் பிரதம விருந்தினராக கல கொண்டார். இந்த நிகழ்வில் மகாதேவா சுவாமி சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 10,11,06 வகுப்பு மாணவர்களுக்கு கணித பாட பய நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டது. கணித பாடத் அவசியம் கருதி ஆசிரியர்களால் இவ்வாறு இல்ல ம வர்களுக்கு இந்நூல்களை வழங்கப்பட்டமையா முன்னுதாரணமாக உள்ளது. இந் நிகழ்வில் ச.க திரன் எழுதிய உரைகல் நூல் அறிமுக விழாவும் இ பெற்றது. யாழ்ப்பாண மக்களின் கட்டுக்கோப்ப ஒழுக்க விழுமியங்களை இந்நூல் பறை சாற்றி நிற் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு கலைஞனுக்கு அறச்சீற்றம் இருக்க வேண்டும்

## என்கிறார் திரைப்பட நெறியாளர் கேசவராஜன்



சி.ப.வேந்தன்

நான் எவ்வாறு சினிமாத்துறைக்கு வந்தேன் என்று சொல்லத் தெரியவில்லை, ஆரம்ப காலத்திலை எனக்கு நாடகங்களிலை நிறைய ஆர்வம் இருந்தது. அரியாலை தான் என்னுடைய ஊர். பிரித்தானிய ஆதிக்கத்துக் கெதிராக இலங்கையின் சகல கிராமங்களிலையும் சுதேசிய விளையாட்டுவிழா, அந்த நாளையிலை நடக்கும். அங்கு சுதேசிய உணர்வூட்டுறதான நிகழ்வுகள் நடக்கும். இந்த நிகழ்வை இன்றைக்கு வரைக்கும் கொண்டாடிக்கொண்டுவாறது அரியாலைக் கிராமம்தான்.

அப்ப அந்த விழாக்களிலை நான் நிறைய நாடகங்களைப் பார்த்திருக்கிறன். அதைப்பார்த்து எனக்கும் நடிக்க வேணும் என்ற ஆசை வந்தது. ஆரம்பத்திலை எனக்கு நாடகம் தொடர்பிலும், சினிமா தொடர்பிலும் எந்தவித மான அறிவும் இல்லை. நடிச்சா அது நாடகம். அதைப் படமெடுத்தா அது சினிமா. இப்பிடித்தான் நினைச் சிருந்தனான்.

ஒருமுறை சுதேசிய கலை விழாவிலை எனக்கு நாடகத்திலை நடிக்க சந்தர்ப்பம் கிடைச்சது. முதன்முதலா பெண் வேடத்திலைதான் நடிச்சனான். அப்பதான் எனக்கு நாடகம் என்பது தனி நடிப்பு மாத்திரமல்ல, அதுக்குப் பின்னாலை நெறியாள்கை என்பதும் இசை காட்சி அரங்கமைப்பு என்ற நிறைய விடயங்கள் இருக்கிறதென்று தெரிய வந் ததற்குப் பிறகு அதிலை என்ர கவனம் கூடுதலாகத் திரும் பியது. பிறகு சினிமா மேல ஒரு ஈர்ப்பு வந்திட்டுது.

எங்கட மட்டத்தில இருக்கிற கொஞ்சப்பேர் சேர்ந்து வீடியோவிலை படம் எடுப்பம் என்று வெளிக்கிட்டம், அப்ப படம் நடிக்கிறது என்றுதான் சொல்லுறது, படம் எடுக்கிறம் என்று சொல்லுறேல்ல. அப்பிடியான ஒரு ஆரம்ப அறிவுகூட இல்லாம படம் எடுக்க ஆரம்பிச்சம். நடிப்பை கமராவிலை எடுத்தா அது சினிமா என்றுதான் எங்கடை நினைப்பு; இப்போதும் சில பேர் அப்படி நினைச்சுக் கொண்டுதான் சினிமா எடுக்கினம்.

நாங்கள் இந்தியச் சினிமாவிலை வாறமாதிரி பாட்டு, சண்டை, நடிப்பு என்று எல்லாம் செய்து பார்த்தம் ஒன்றும் சரிவரேல்ல; நிறைய முயற்சி செய்தும் எல்லாமே குழப்பம்தான். அதுக்குப் பிறகு தான் சினிமா வைப்பற்றித் தேட ஆரம்பிச்சன். அப்பதான் சினிமா என்பது வேறை உலகம், அது வெறும் நடிப்பை மாத்திரம் கொண்டு இயங்குறதில்லை. அதுக்குப் பின்னாலை நிறைய உழைப்பு இருக்கு என்பது தெரிய வந்தது. சினிமாவிலை இப்பவும் ஒருபத்து வீதம் தான் தெரிந்திசிருக்கிறன். இன்னும் தெரிய நிறையக் கிடக்குது.

> 94ஆம் ஆண்டு திரும்பவும் ஊருக்கு வந்து திரைப்படம் சார்ந்து ஈடுபடத் தொடங்கினன். அப்பதான் நிதர்சனமும் கலை, பண்பாட்டுக் கழகமும் இணைஞ்சு தயாரிச்ச "பிஞ்சுமனம்" என்ற சினிமாவை எடுத்தனான்.

அதுக்குப்பிறகு சில நல்லசினிமாக் களைத் தேடி பார்க் கத் தொடங்கினன்; அந்த நேரம் வந்த சினிமாவிலை எனக்கு மகேந்திரனின் முள்ளும்மலரும் என்ற சினிமா பெரிய தாக்கத்தைச் செலுத்தியது. அவரிலை எனக்கு பெரிய மரியாதை வந்தது. சமாதான காலத்திலை மூன்றுமாத காலம் அவரோட என்னுடைய காலத்தைக் கழிச்சதை மறக்கமுடியாது.

பிறகு சினிமா பற்றி ஓரளவு தெரிஞ்சதுக்குப் பிறகும் கற்பனை சார்ந்த யதார்த்தம் மீறிய கதைகளைத்தான் தெரிவுசெய்து கொண்டிருந்தேன். அப்பதான் எங்கட ஊரில ஒரு செத்தவீட்டிலை வைச்சு ராஜன் ஸ்ரூடியோ வைச்சிருந்த ராஜண்ணை எண்டவர் "ஏண்டா இங்க தானே ஏகப்பட்ட கதைகள் இருக்கு, இங்க சொல்ல வேண்டிய நிறைய விசயங்கள் இருக்கு, அதைச் செய்யலாமே என்று ஈழ சினிமா பற்றிய ஒரு தெளிவை எனக்குத் தந்தவர். எதுவுமே தெரியாமல் சரியான சினிமா பற்றிய அறிவில்லாமல் இருக்கேக்க சரியான பாதையைக் காட்டிவிட்டது அவர்தான்.

அதுக்குப்பிறகு செங்கை ஆழியானின் காட்டாறு, வாடைக் காற்று என்ற புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினன். அதில இருக்கிற இயல்புத்தன்மை எங்கட மக்களின் வாழ்க்கை முறை கலாசாரம் பேச்சுவழக்கு அதெல்லாம் எனக்கு பிடிச்சுக் கொண்டது. அதோட வங்காள சினிமா, சத்தியஜித்ரே பற்றியெல்லாம் தேடி அறியத் தொடங்கினன். கொஞ்ச நாளுக்குப் பிறகு திரும்பவும் படம் எடுப்பம் என்று நாங்கள் தொடங்கினம். அப்ப தயாரிப்பு எண்டது பெரிய சிக்கலா வர நான் சொந்தமா தயாரிக்கிறன் என்று சொல்லி ஆரம்பிச்சன். அது பெரிய போராட்டத்தின் மத்தியிலதான் தொடங்கினது. நிறையப்பொய்கள், ஏமாற்றங்கள் கஷ்டங்கள் எல்லாம் வந்தது. மோதிரத்தை வித்துப்போட்டு இதுக்குசெலவு செய்யிறது வீட்ட அது தொலைஞ்சிட்டுதென்று பொய் சொல்லுறது. இப்பிடி பலத்த கஷ்டத்தின் மத்தியிலை என்ரை முதல்சினிமா "தாயகமே தாகம்" உருவானது.

அப்ப இப்ப மாதிரி வெளியீடெண்டா பெரிசா செய்ய வேணும் என்டெல்லாம் எனக்குத்தெரியாது. எங்கட ஊர் வாசகசாலையில ரீ.வியில வைச்சுப் போட்டனான். நல்ல வரவேற்புக் கிடைச்சது. நான் திருப்தி தரும் என்றுதான் நினைச்சனான். ஆனா அது பெரிய வெற்றியையே தந்தது. அதுக்கு எனக்கு பதினெட்டாயிரம் ரூபா செலவானது 37ஆயிரம் ரூபா வரைக்கும் வருமானம் கிடைச்சது. அது எனக்குப் பெரிய நம்பிக்கையைத் தர அந்தக்காசை வைச்சு அடுத்ததா "மரணம் வாழ்வின் முடிவல்ல" என்ற படத்தை செய்ய ஆரம்பிச்சன். அந்த நேரம் விடுதலைப்புலிகள் எல்லா இடமும் உள்ளூர் உற்பத்திப்பொருள்களை முன்னேற்ற வேணும் என்று பரப்புரை செய்துகொண்டிருந்தவை. இந்தப்படத்தின் கதையும் அதையொட்டி வந்ததாலை எனக்கு திரைப் படம் தயாரிக்கிறதிலை அமைப்புசார்ந்து எந்தப் பிரச்சனையும் வரேல்லை. அடுத்ததா தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும், போதைப் பொருள் பாவனை அப்ப ஆரம்பமாக வெளிக்கிட்டது. அதற்கு எதிராயும் இந்தப் படத்தில பேசினன். அந்தப்படம் பிரச்சினை காரணமா சரியா ஓட முடியாமப் போனது. அதோடை அந்தப்படங்களின்ர பிரதிகளும் அழிஞ்சுபோட்டுது.

பிறகு பிரச்சினை காரணமா வெளிநாடு போகவேண்டி வந்திட்டுது. 94ஆம் ஆண்டு திரும்பவும் ஊருக்கு வந்து திரைப்படம் சார்ந்து ஈடுபடத்தொடங்கினன். அப்பதான் நிதர்சனமும் கலை, பண்பாட்டுக் கழகமும் இணைஞ்சு தயாரிச்ச "பிஞ்சுமனம்" என்ற சினிமாவை எடுத்தனான். வழக்கமான போராட்ட சினிமாக்களிலை பேசப்படுகிற போர், தியாகம், வீரம் என்பவைகளைத் தவிர்த்து போரினால் ஏற்பட்ட விளைவு, சாதாரண மனிதர்களின் வாழ்க்கை அவர்களின் உணர்வுகளை அந்தப்படத்தில பேசினன். அதுக்குப்பிறகு "திசைகள் வெளிக்கும்" என்ற படத்தை எடுத்தன். அதில காதலித்து கைவிட்டாலே அது குற்றம். இருவர் காதிலிக்கும்போது மூன்றாவது நபர் இவர்கள் காதலிக்கிறார்கள் என்பதை புரியும் அளவுக்கு அவர்கள் நடந்து கொண்டதன் பின்னர் அவர்களில் ஒருவர் ஏமாற்றப்பட்டால் அது குற்றம் என்பதாய் அக் கதை இருந்தது. இது புதிதாக இருந்தது. அதுவும் மிகப் பெரிய வெற்றியைப்பெற்றது.

அதுக்குப்பிறகு "அப்பா வருவார்", "சின்னச்சின்ன வீடு கட்டி" என்ற குறும்படம். "கடலோரக்காற்று","அம்மா நலமா" போன்ற பல படங்களையும் செய்தன். அவையெல்லாம் மிகப்பெரிய வெற்றியையும் திருப்தியையும் தந்தன.

பிறகு நாட்டுச்சூழல் ஒரு முடிவுக்கு வந்ததற்குப் பிறகு நான் எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல் இருக்கேக்க என்னுடைய நண்பர் சிங்கள இயக்குநர் பிரசன்ன விதானகே. அவர் சொன்னார். போராட்டம்தான் முடிஞ்சது; மக்களுடைய பிரச்சினை முடியேல்லைதானே இப்பதான் நீங்கள் இயங்கவேணும் என்று ஊக்கப்படுத்தினார். அதே நேரம் வாய்ப்பும் கிடைக்க "பனைமரக்காடு" என்ற திரைப்பட வேலைகளை ஆரம்பிச்சன். இதிலயும் நிறையப் பிரச்சினைகள் , நம்பிக்கையீனங்கள், ஏமாற்றங்கள் என்று பிரச்சினைகளோடு தொடர்ந்து அதுக்காக உழைச் சுக் கொண்டுவாறன். எல்லா வேலையும் முடிஞ்சு விட்டுது. கூடிய விரைவில் வெளிவர இருக்குது. இதில எங்கட மண்சார்ந்த கலாசார, வாழ்வியல், மொழி வழக்கோட செய்திருக்கிறம். இது எங்கட சினிமா என்ற அடையாளத்தோட வெளிவரும்.

அந்தக்காலத்திலை வந்த படங்களிலை "பொன்மணி", "வாடைக்காற்று" போன்ற ஒன்றிரண்டு படங்களைத்தவிர மற்றவையெல்லாம் தென்னிந்திய தமிழ் சினிமாவின் மாதிரிகளாகத்தான் இருந்தன. எம்.ஜி.ஆர், சிவாஜி போன்றவர்களைப்போல உருவாக்கமுனைந்தனரே தவிர எங்களுக்கான சினிமாவை உருவாக்கவேணும் என்று அவர்கள் முயற்சிக்கவில்லை. மக்களுக்கான சினிமாவாகவும் அவை இருக்கவில்லை. ஆனால்பின்னாளில்வந்த சினிமாக்கள் மக்களுக்கான சினிமாவாக இருந்தன.

ஒரு கலைஞனுக்கு அறச்சீற்றம் இருக்கவேணும். அவன் தன்னுடைய சமூகத்தையும் காலத்தையும் பிரதிபலிக்க வேணும். அச்சமின்றிய பொறுப்புணர்வு இருக்க வேணும். இதைவிடவும் குறித்த துறைபற்றிய தேடல் இருக்க, இதொன்றும் இல்லாமல் திரைப்படம் எடுக்க முடியாது. தென்னிந்திய ஹீரோயிச சினிமாவை மீள் பிரதி செய்யிறதிலை முனைப்பா இருக்கின்றனர். அதிலையும் சரியா செயற்படுகின்றார்களா என்றால், அதுவும் இல்லை. தென்னிந்திய மொழி வழக்கையும் எங்கடை மொழி வழக்கையும் கலந்து மோசமான ஒரு மொழியை உருவாக்கியிருக்கினம். அதோட சமூக விரோதச் செயல்களை ஊக்குவிப்பதான செயலும் அதற்குள் புகுத்தப் படுகிறது. உண்மையிலே போராட்ட காலத்திலை வெறும் பரப்புரைப் படங்களின்றி சமூகக் கதைகள் பேசிய மிக ஆரோக்கியமான சினிமாக்களும் உருவாகின. ஆனால் இப்போது அதற்கு எதிர்மாறா கத்தான் சினிமாக்கள் வெளிவருது. ஆனால் இவர்களுக்கு மத்தியிலும் சில படைப் பாளிகளிடம் நல்ல சினிமாவை உருவாக்கவேணும் என்ற அவாவும் எண்ணமும் அதோட தேடலும் இருக்கு. இது ஒரு நம்பிக்கையையும் தருகுது.

இப்போது குப்பைச் சினிமாக்கள் கூடுதலாகவும் நல்ல சினிமாக்கள் குறைந்தளவிலும் வெளிவருகிறபடியால் தரமற்ற சினிமாக்கள் பலரை சென்றடையுது. அதுவே ஈழ சினிமாவை அடையாளப்படுகிறபோது எமக்கான சினிமா மற்றவர்களிடம் நம்பிக்கையற்ற சினிமா வாகத்தான் காட்சியளிக்கிறது. படைப்புக்கு பாராட்டுத் தெரிவிக்கிறதை விட்டிட்டு படைப்பாளிக்காகப் பாராட்டுற தன்மைதான் இங்க இருக்கு. ஒரு படைப்பாளியா இது எனக்குச் சரியான வேதனையைத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துரு உண்மை உருவங்களின் கருத்துரு...!



செ.உமாசுதன்

நான் யமன்.. மண்டையோடுகளின் மன்னவன்.. உயிரெடுத்தலே என் குலத் தொழில்.. என்று தொடங்கிய யம தர்மனின் அறிமுக வார்த்தைகள் சாக்குரல் தான் என் தலைப்பெயர்.. எலும்பு மச்சையும் குருதி மொச்சையும்.. என் ராச்சியமெங்கும் கொட்டிக் கிடக்கிறது.. வன்முறை வாசனையை மட்டுமே நுகரத் துடிக்கிறது என் நாசி.. என்று முடித்திட வார்த்தைகளின் கர்ச்சனையாக கதகதக்கிறது. உறவுகளைத் தொலைத்த பெண்மைகள் தம் உறவுகளின் உயிர் பறிக்காது விட்டு விடுமாறும், உரு மறைத்தவர்களை மீள ஒப்படைத்திடுமாறும் மன்றாடுகிறார்கள். அழுது புலம்பி வேண்டுகிறார்கள்.இந்த சத்தமிடல் எங்கே, யாருக்குக் கேட்கிறது.?

நல்லூர் கந்தனவன் அருளாட்சி தந்து தமிழ் மக்களைக் காத்தருள்கிறான். அவன் எங்களின் காவல் தெய்வம். மக்கள் தினம் தினம் அவன் வாசல் நடந்து தம் குறைகளை. தம் மீதுள்ள தீராத அடிமைத்தனம் எனும் கறையைப் போக்கிட வேண்டுகின்றனர். சந்தனத்தைப் பூசி. அவன் பாதங் களை அலங்கரித்த பூக்களைச் சூடி மகிழ்கின்றனர்.

ஆக, இந்த சித்தர்கள் வாழ்ந்த பூமியிலே,பக்தர்கள் கூடி வழிபாடாற்றுகின்ற வீதியிலே எங்கிருந்து இந்தச் சத்தங்கள் அலை மோதுகின்றன..? எங்கும் அலை பாய்கின்றன...? மக்கள் அங்கலாய்க்கின்றனர். எல்லாம் தெரிந்தவனாய் கந்தனவன் சொல்கிறான். என் வீதியின் தென் கிழக்கு திசை வழியே நடவுங்கள். அங்கே என் தாய் பார்வதி உறைகின்ற பாணன் குளம் முத்துமாரி அம்மன் ஆலய(இல்லம்) என்றொன்று உண்டு. அதன் அருகே பஞ்சபூத. அரங்கு. அதன் மேலே உண்மையான உரு வங்கள் நாடக மாந்தராய் சேர்ந்தசை கின்றனர். உண்மையான விம்பங்களின் திரை விலகுகிறது. ஆங்கே இந்த ஆன்மங்களின் பரிதவிப்பும்,ஓலமிடலும் வானை முட்டுகிறது, போய்ப் பாருங்கள் என்கிறான். உண்மையில் அவன் சொன்னது போலசெயற்றிறன் அரங்க இயக்கத்தின் முயற்சிகள் தந்த காத்திரத்தால் வலிகள், வார்த்தைகள் வடிவிலே உ(எழுத்து)ருப்பெற்று உருவங்களின் விம்பம் ஊடே நாடகங்களாய் கருத்துரைக்கிறது. இல்லை இல்லை தமிழ் சமூகமாய் எதிர் கொண்டு விடுதலை வேண்டியலையும் பிரச்சினைகள் பல வேட உடை கொண்டு ஒப்பனையோடு ஒளி ஒலி தந்து இருளிடை நாடகங்களின் திரு விழாவாய் காட்சி தந்தது. இப்போதும் நினைவின் கணங்களிடை மிளிர்கிறது.வார்த்தைகள் கேட்டோம், காட்சிகள் பார்த்தோம்.கண்ணீர் சிந்தி உணர்வால் இணைந்திருந்தோம். ஒன்றுபட்டிருந்தோம். எங்கும் ஓங்கி ஒலித்த குரல்களினூடே எங்கள் வலிகளின் தகிப்பை தீர்வின்றிய போதும் சற்றே அச் சூழமைவில் சுமை தாங்கியாய் இறக்கி வைத்து ஆசுவாசம் கொண்டோம். மன அமைதி கண்டோம்.

> இந்தச் சித்தர்கள் வாழ்ந்த பூமியிலே, பக்தர்கள் கூடி வழிபாடாற்றுகின்ற வீதியிலே எங்கிருந்து இந்தச் சத்தங்கள் அலை மோதுகின்றன..? எங்கும் அலைபாய்கின்றன...? மக்கள் அங்கலாய்க்கின்றனர். எல்லாம் தெரிந்தவனாய் கந்தனவன் சொல்கிறான். என் வீதியின் தென் கிழக்கு திசை வழியே நடவுங்கள். அங்கே என் தாய் பார்வதி உறைகின்ற பாணன் குளம் முத்துமாரி அம்மன் ஆலய(இல்லம்) என்றொன்று உண்டு.

அந்த வகையிலே கடந்த வருடம் நல்லூர் பெருந் திருவிழாவை முன்னிட்டு செயற்றிறன் அரங்க இயக்கத்தினர் நல்லூர் நாடகத் திருவிழாவை நடத்தியிருந்தனர். ஈழத் தமிழ் நாடக வரலாற்றிலே நாடகப் பண்பாட்டின் ஓர் விழாவாக, தனித்துவ அடையாளமாக இவை அமைந்திருந்தன. தொடர்ச்சியாக பன்னிரண்டு நாள்கள் இடம்பெற்றிருந்த நாடகத் திருவிழாவிலே 20 நாடகங்கள் மேடையேறின. செயல் வடிவம் கொண்டு சந்ததமும் வந்தே உன்னதம் புரிந்தன. செயலூக்கம் பெற்றிருந்தன.

சிறுவர் அரங்கு,ஓராள் அரங்கு,மோடிமை அரங்கு, வேடமுக அரங்கு,விழிப்புணர்வு நாடகம்,பாரம்பரிய அரங்குகள் என நாடக வடிவங்கள் கருத்தின் அறிவூட்டமாக,அறிவுறுத்தலாக காலத்தின் அனுபவமாக அமைந்திருந்தன.நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம் என்ற தொனியைக் கருவாக்கி நிஜ உருவம் தந்திருந்தன.கருத்துச் சுதந்திரத்தின் வெளிப்பாடாக புத்துயிர் பெற்றிருந்தன.உணர்வெழுச்சிகள் உடல் மொழியூடு உயிர்ப்பைத் தந்திருந்தன.குரலற்றவர்களின் குரலாக ஓங்கியொலித்து உயிர்பெற்று கருத்துக்களை பேணி நாடகக் கலையெனும் படைப்பாக மிடுக்கோடு தந்திருந்தன.

இந்த உயிர்ப்பின் தொடர் நிலையாக, நிலைத்திருப்பாக தேவநாயகம் தேவானந்தின் கட்டுரைகள் நாடக எழுத்தருக்கள் உள்ளடங்கியதான நூல் வடிவமொன்று நல்லூர் நாடக திருவிழா 2015 என்பதான தலைப்பிடலோடு நலியாக் கலையின் பொக்கிசமாக. ஆதாரமாக வெளி வந்திருப்பது சிறப்பிற்குரியதே. நாடகக் கலை மிளிர்வின் பிரகாசமான ஒளிர்தலே.

தனித்துவமான இனமாக,சொந்த மண் என்ற பூர்வீகம் கொண்டவர்களாக, தமிழ் மொழி எனும் மொழிச் சிறப்பின் அடையாளச் சுட்டிகளாக தமிழர்களின் கருத்து வெளியிடும் சுயாதீனம் என்பதற்கு இருந்து வருகின்ற மட்டுப்பாடுகளை தடைகள் பல தாண்டி உடைத்தெறிந்து வெளிப்பட்ட நாடகம் என்ற காண்பியக் கலையின்,கலைஞர்கள் ஒன்று கூடி கருத்துக்களை மக்கள் ஊடாட்டமாக பறைசாற்றுகின்ற நிகழ்த்து கலையின் மறு வடிவமாக இந்த நூல் வெளிக் கிளம்பியிருப்பது காத்திரமானது, கலை சார்ந்த ஓர் படைப்பாக்கம் என்பது விட்டுவீதியான, ஒரு விட்டாத்தியான சூழலிலே படைக்க முடியும் என்பதான சூட்சுமங்களை நிகழ் கலையாக இவரது நாடக வடிவங்கள் சொல்லி விட்டிருந்தன.அசாத்தியங்களை சாத்தியமாக்கியிருந்தன. அந்தச் சாத்தியங்களின் நிஜ உருவமாக இந்த நூல் அமையப் பெற்றுள்ளமை, தறுக்கணிப்பிலிருந்து விடுபடலாக நிகழ் கலையின் தோற்றம் கொள்ளலும் அதனிலிருந்தான எழுத்துருவ வடிவம் பெறலில் கிடைத்திருக்கின்ற புத்துயிர்ப்பை இந்த நூல் சொல்லி விட்டிருக்கிறது.வெகுஜன ஊடகமாக எழுத்துக்களூடு ஊடாடி செயல் வடிவம் பெற்றிருக்கிறது. உள்ளடக்கங்கள் அத்தனையும் சமூகத்தின் பார்வையாக,வலிகள் மறந்த மகிழ்தலின் வெளிப்பாடாக,மிண்டும் தொடங்கிய மிடுக்காக,வரலாற்றின் சாதனையாக,நாடகம் சார் புதிய பண்பாட்டின் மறுமலர்ச்சியாக,தொடுகோடாக கருப்பெற்று, உருவம் கொண்டு, சமூக மேன்மையை எழுத்து(ரு)க்களினூடு சொல்லியிருக்கின்றது.சொல்லித் தந்திருக்கிறது.

இதற்கு மேலதிகமாக சமூக உணர் திறனைக் கட்டியெழுப்புதல்,மனித உரிமை தொடர்பில் அறிவூட்டல், தனிநபர் ஆளுமைகளை விருத்தி செய்தல்,நாடக படைப்பாக்கப் பயிற்சி என்பவை தொடர்பில் பேசியிருக்கின்றது.வலிகளின் சுமைகளினுள், நெருக்கடிகளினுள் வாழ்கின்ற மக்கள் கூட்டம் அந்த சுபாவங்களில் இருந்து மீண்டெழுதலில் கலைகளுக்கும் அதன் ஆத்மமாக செயலாற்றுகின்ற கலைஞர்களுக்கும் இருக்க வேண்டிய ஊடாட்டம்,பங்குபற்றுதல் தொடர்பிலே உயிர் தருகிறது.ஊடகங்களின் ஊடாட்டம் ஊடு தந்திருக்கின்ற கருத்துக்களையும் செவிமடுத்திருக்கின்றது. மொத்தத்தில் சமூக விளைவுகளை வினை திறனாக்கி வாசகர்களின்,நாடகமும் அரங்கியலும் துறை சார்ந்து கற்கும் மாணவர்களின் ஆழ் மனதோடு எழுத்துக்கள் காலூன்றி உறவாடி சிந்திக்கத் தூண்டுகின்ற ஊடகமாக,நூலாக அமைந்துள்ளது.

முருகன் மயிலேறியே...
உலகை வலம் வந்தானே..
சிறுவன் நானும் குருவி போல...
சிறகு விரித்து வந்தேனே...
சின்னஞ் சிறிய மனசிது...
சிறக கட்டி பறக்குது...
வண்ணச் சிட்டுக் குருவி போல...
வானில் பறந்து திரியுது...

என்பதாக பாடல் இசை ஒலிக்கிறது.சிறுவனாகிட கனவுகள் மிதந்து எண்ணங்கள் வானத்தில் பறக்கின்றன. கனவுகள் கலைகின்றன, பன்னகை தேடும் விழிகளின் ஆர்ப்பரிப்பு சிரிப்பு மூடைகளை கட்டிவர, மீண்டும் அழைக்கிறது.அந்தத் திருவிழாக்கோலம் மீண்டும் எமை நோக்கி இருகரம் கூப்புகிறது.காலங்கள் கரைவதால் அந்தக் கோலங்கள் மீண்டும் எம் முன் வருகின்றன. எழுத்துருக்கள் நிஜ உருவங்களின் கருத்துருவாக தன்னிடம் அழைத்துக் கொண்டேயிருக்கின்றன..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகளில் உறைந்திருக்கும் "உமர்கயாம்" பாடல்கள்

பரம்சிகா

பாடுகின்ற எல்லோரும் கவிஞரல்ல... எனும் வரிக்கமைய பாடல்களைப் பாடிய எல்லோரும் கவிஞர்களாக இருந்ததுமில்லை. இருந்தவர்கள் எல்லோரும் கவிஞர்களாக இறந்ததுமில்லை

ஆயினும், பாடியும் இறந்தும் கவிஞர்களாக வாழ்பவர்கள் ஒரு சிலரே வரலாற்றில் பதிவாகின்றார்கள். அப்படி வரலாற்றில் பதிவானவர்களில் சிலர், இன்றும் மக்களின் மனங்களில் தமது பாடல்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அப்படி வாழ்ந்துகொண்டிருப்பவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் உமர்கயாம் எனும் கவிஞர்.

ஈரான் நாட்டில் உள்ள நிசாபூர் என்ற ஊரில் பிறந்த இவர், தனது ஓய்வான நேரங்களை எழுதுவதற்காகவே பயன்படுத்தியுள்ளார். தனதுமனதில் தோன்றும் எண்ணங்களை, வாழ்க்கையின் நிதர்சனத்தைப் பாடல்களாக வடிவமைத்துள்ளார். இவரது சிந்தனைகளில் கடவுள், உலகம், விதி, மது, மாது, இளமை, பிறப்பு, மரணம் என்பவற்றுக்கான கருக்களே பாடல்களாக வடிவம் பெற்றுள்ளன. இவ்வாறு வடிவம் கொண்ட பாடல்களே 'உமர் கயாம்' எனும் பொருள் பொதிந்த பாடல்களாக இன்றும் கொள் ளப்படு கின்றன.

உமர்கயாம் எனும் இந்தக் கவிஞர் ஈரான் நாட்டின் மாலிக்ஷா என்ற சுல்தானின் அரசவையில் மிகப்பெரிய வானியல் அறிஞராயும், சோதிடராகவும், கணித மேதையாகவும் இருந்தவர் என்றும், கோள்கள் பற்றிய ஆராய்ச்சி நிலையக் கோபுரம் ஒன்றை நிறுவி, விண்ணை ஆராய்ந்தவர் எனவும் இவரைப் பற்றி வரலாற்றுக் குறிப்புகள் எடுத்தியம்புகின்றன.

**இன்றைய நவீனயுக வளர்ச்சியில், இலக்கியங்கள் பலவகையிலும் அதன் மொழி நடை, உருவமைப்பு, சொற்றொடர், ஓசை நயம் போன்றவற்றில் மாற்றமடைந்து வரும் நிலையில், நவீனத்துவ வாதிகளால் பழையவை பலதும் நிராகரிக்கப்பட கூடும். வேறு சிலரால் இவை ஏற்றுக்கொள்ளப்படவும் கூடும்.**

அது மட்டுமன்றி, முகம்மதிய பஞ்சாங்கத்தில் சந்திரனையே மையமாக்கிக் கணிக்கப்பட்டிருந்த முறையை மாற்றிச் சூரியனை மையமாக்கி, மாற்றிக் கணக்கிட்டார் எனவும், ஆண்டுக்கு 365 நாள்கள் என்று அறிந்த முதல் விஞ்ஞானி இவரே என்றும் மேலதிக தகவல்களாக இவரது வாழ்க்கை பற்றிய குறிப்பேட்டில் இருந்து தெரியவருகிறது.

இவர் இயற்றிய பாடல்கள் மிகவும் எளிமையானவை. சகலரும் படித்து விளங்கவும் இன்புறவும் ஏற்றவை. பாடல்களின் ஒவ்வொரு வரிகளும் இலகு மொழி நடையில் அமைந்துள்ளதோடு, இன்றுவரை மக்களின் மனங்களிலும் உறைந்து கொண்டு நிற்பவை.

இவர் வாழ்ந்த காலத்தில் மதவாதிகளின் செயற்பாடுகள் இவரது மனதை உறுத்தியிருக்கின்றன. மதம் என்பது மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய ஓர் ஆன்மிக வழியாக இருக்க வேண்டியது அவசியம். அறநெறிகளைப் போதிக்க வேண்டியது முக்கியம். ஆனால், அந்த வழியில் பயணிக்கும் மதவாதிகள் தவறான பாதையில் பிறழ்வுற்று நடக்கும் போது, அவர்களது சுயரூபத்தை,



*வேடந்தாங்கலை*
*எண்ணில் சமய வாதிகள்*
*இருளில் அலைந்து திரிகின்றார்*
*கண்ணில் காண்பது ஒன்றுமில்லை*
*கையில் தீபம் ஏதுமில்லை*
*விண்ணும் அதிர முழங்கிடுவார்*
*வீணாய்சண்டை மூட்டிடுவார்*

-என்று தனது பாடல் ஒன்றின் மூலம் அம்பலப் படுத்துகின்றார் இந்தக் கவிஞர்.

அது மட்டுமன்றி, பூமியில் ஜனனம் பெற்ற ஜீவன் உள்ள அனைத்துக்கும் கிடைக்கப்பெற்ற வாழ்வானது நிலையற்றது என்பதையும், இந்த நிலையற்ற வாழ்வு மனிதனுக்கு எவ்வளவு தூரம் பொருத்தமாகிறது என்பதை, காலையிலே மலர்ந்து மாலையிலே உதிர்ந்து போகும் ஒரு பூவுக்கு ஒப்பாகவும் உவமானமாகவும் மிகச்சுருக்கமாக எல்லோரும் சிந்திக்கக் கூடிய வகையில் ஒரு பாடலாக யாத்துள்ளார். அப் பாடல் பின்வருமாறு அமைகின்றது.

*புலர்ந்து விடியும் பொழுதினிலே*
*பொய்கைக் கரையஞ் சோலையிலே*
*மலர்ந்து நல்ல மணம் வீசி*
*மகிழும் மலர்கள் ஆயிரமாம்*
*உலர்ந்து வாடி சேற்றினிலே*
*உதிருமவையும் ஆயிரமாம்*
*கலந்த உலக வாழ்வை இதில்*
*கண்ணாற் கண்டு தெளிவாயே!*

இவை தவிர, நிலையற்ற இந்த வாழ்வில் மனிதனுக்கு இங்கு ஏது நிரந்தர இருப்பிடம்? எனும்பொருள் படத்தக்க வகையிலும் ஒருவர் போனால், அந்த இடத்தில் இன்னொருவர் வந்து அமர்வதாகவும், இவ்வாறு காலச்சுழற்சியில் மனித வாழ்வு இயங்கும் போது, ஒருவருக்கான கடமையை இன்னொருவர் செய்து முடிப்பர்... என்று எப்படி நம்ப முடியும்? அது யாருக்குத் தெரியும்? என்ற வகையிலும் கவிஞர் தன்பாடல் மூலம் வினாவுகிறார்.

*இருந்து சென்ற முன்னோரின்*
*இடத்திலெல்லாம் யாம் இன்று*
*விருந்து செய்து வாழ்கின்றோம்*
*விகடம் சொல்லி மகிழ்கின்றோம்*
*இருந்த இடம்விட்டு யாமும் இனி*
*எழுந்து சென்றால் இங்கிருந்து*
*விருந்து செய்பவர் யார்யாரோ?*
*விகடம் சொல்வார் யார்யாரோ?*

இந்த மகா கவிஞனின் ஆளுமையில் இருந்து அனேகம் பாடல்கள் வெளிப்பட்டிருக்கின்ற போதிலும், உதாரணத்துக்கு இங்கே மூன்று பாடல்கள் வாசகர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன.

பாலிஷா என்ற சுல்தானின் சாம்ராச்சியம் மண்ணில் இருந்து சரியும்வரை, அவரது அரசவையில் இந்த உமர் கயாம் எனும் கவிஞனின் முக்கியத்துவம் நிலைத்திருந்தது. சுல்தானின் சாவுக்குப் பின்னரான காலங் களில் அங்கு சாம்ராஜ்ஜியத்துக்கு வந்தவர்களால் உமர் கயாம் எனும் கவிஞனும், அவரது கவி ஆளுமைகளும் கண்டுகொள்ளப்படாமல் போய்விட்டது.

இவர் வாழ்ந்த காலங்கள் ஆக 74 ஆண்டுகளே ஆகும். நிஷாபூரில் உள்ள இமாம்மொராக் எனும் இடுகாடு ஒன்றினுள் இன்றும் கூட இவரது சமாதி இருப்பதாகவும், அந்தச் சமாதிமேல் நினைவுச் சின்னம் ஒன்று எழுப்பப்பட்டு, அதில் உமர்கயாம் பற்றிய வாழ்க்கை விவரங்கள் மற்றும் குறிப்புக்கள் பலவும் பெர்ஷிய மொழியில் பொறிக்கப்பட்டிருப்பதாகவும், அந்தக் குறிப்பில் 516 ஹிஜிரா ஆண்டு, மொகரம் மாதம், 12 ஆம் திகதி இவரது சாவு பற்றிய குறிப்பொன்று பதிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் இவரது வாழ்க்கைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய நவீன யுக வளர்ச்சியில் இலக்கியங்கள் பலவகையிலும் அதன் மொழிநடை, உருவமைப்பு, சொற்றொடர், ஓசை நயம் போன்றவற்றில் மாற்றமடைந்து வரும் நிலையில், நவீனத்துவ வாதிகளால் பழையவை பலதும் நிராகரிக்கப்படக் கூடும். வேறு சிலரால் இவை ஏற்றுக்கொள்ளப்படவும் கூடும்.

எது எப்படியிருப்பினும், மக்களுக்காகவும் மக்கள் நலன்சார்ந்தும் எழுதப்படும் பாடல்கள் மற்றும் படைப்புக்கள் மக்கள் இலக்கியங்களாகவே கணிக்கப்பட்டு, காலத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவை என்றும் உயிர்வாழும்.

அதற்கு உமர்கயாம் எனும் மாபெரும்கவிஞனின் பாடல்களை இப்போதும் உதாரணமாகக் கொள்ள முடியும்!

# தமிழ் உள்ளவரை அழியாது...



(18ஆம் பக்கம் தொடர்ச்சி)

அன்னையைப்போல் ஒரு தெய்வம் இல்லை ஆகிய பாடல் கள் ஒவ்வொரு வருடைய உள் ளங்களைக் கரைய வைக்கும். 2010 ஆம் ஆண்டு கலைஞர் மு.கருணாநிதி இயற்றிய செம் மொழியான தமிழ் மொழியாம் என்ற பாடலே இவர் இறுதியாகப் பாடிய பாடலாகும்.

கலைமாமணி, ஏழிசைமன் னர், பத்மஸ்ரீ, ஞானகலாபாரதி, டாக்டர், செம்மல் ஆகிய பட்டங்களும், விருதுகளும் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.

இசைப் பிரியர்களின் உள்ளங்களில் குடிகொண்டிருந்த ரி.எம்.எஸ். தேனருவி போல் செவிகளுக்கு விருந்தளித்து இசையுலகை ஆட்சி செய்த ஏழிசை வேந்தர், திரை உலகில் பாடிய எந்தப் பாடலும் இனிவரும் காலங்களில் தொலைந்து விடமுடியாது. உலகத் தமிழர்கள் ஒவ்வொருவர் இல்லங்களிலும் இணையத்திலும், கணினியிலும், கைத்தொலைபேசிக்குள்ளும் ரி.எம்.எஸ்ஸின் பாடல்கள் இன்றும்வாழ்ந்துகொண்டிருக்கின்றது. ரி.எம்.எஸ்ஸின் குரல் காற்றில் கலந்த குரல், காற்றில் கரையாத குரல், காற் றில் நிறைந்த குரல் என்று கூறுவதை விட காற்றாகவே வாழ்கின்ற குரல் என்று கூறினால் அதற்கு என்றுமே அழிவில்லை. ரி.எம்.எஸ் மறைந்து மூன்று ஆண்டுகளாகி விட்டன.

ரி.எம்.எஸ்ஸின் உடல் அழிந்தாலும் அவரது குரல் தமிழர்கள் மத்தியில் அவரது பாடல்கள் மூலம் வாழ்ந்து கொண்டிருக்கும். என்றைக்கும் மறையாத சிரஞ்சீவித் தன்மையோடு அவரது சாரீரம் காற்றில் பரவிக் கொண்டுதானிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலோகக் கைபிடியுடன் கைப்பை



உலோகக் கைபிடி உடைய கைப்பை அறிமுகமாகியுள்ளது. பேஸ் போன்றும் கைப் பை போன்றும் இதனைப் பயன்படுத்த முடியும். கற்கள் பதித்த வேலைப் பாடுகளுடன் இவை அலங்கரிக்கப்பட்டுள்ளன. தோலினாலும், பட்டுத் துணியினாலும் உருவாக்கப்பட்ட இந்த கைப்பைகள் 3000 ரூபா தொடக்கம் 4000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

# பசுமைக் குடில்



திறந்தவெளித் தோட்டங்களிலும் மாடித் தோட்டங்களிலும் பச்சை நிறத்தில் வலை போன்று கட்டியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அதன் அழகை ரசித்தபடி, அது என்னவென்றே தெரியாமல் கடந்து போயிருப்பீர்கள். அந்தப் பச்சை நிற வலைதான் பசுமைக் குடில். பசுமைக் குடில் அமைக்க வேண்டியதன் அவசியம் என்ன? அதை எங்கெல்லாம் போடலாம்?

வெப்பம் அதிகமுள்ள இடங்களில் பசுமைக் குடில் அமைக்க வேண்டும்.

நாற்றுகள் உற்பத்தி செய்கிற இடங்களிலும் இது தேவை. வெயில் அதிகம் விழுகிற மொட்டை மாடி மாதிரியான இடங்களிலும் இதை அமைக்கலாம்.

அடுக்குமாடிக் கட்டடங்களின் மேல் தளத்தில் இருக்கிறீர்கள் என வைத்துக் கொள்வோம். மேலே மொட்டை மாடி என்கிற பட்சத்தில் உங்கள் வீட்டுக்குள் அதிகமான சூடு இறங்கும். பசுமைக் குடில் அமைப்பதன் மூலம் அந்த சூடு தணிந்து குளிர்ச்சியாக இருப்பதை உணரலாம்.

பசுமைக் குடில் அமைப்பதென முடிவு செய்துவிட்டால், அந்த வேலையில் நிபுணத்துவம் பெற்றவர்களை வைத்தே அதனைச் செய்ய வேண்டும். இரும்பின் தினசரி விலை, உபயோகிக்கப் போகிற வலையின் தரம் ஆகியவற்றை முதலில் பார்க்க வேண்டும்.

பசுமைக் குடில் விடயத்தில் யோசிக்காமல் நீங்களாகவே அதை அமைக்கிற முயற்சியில் இறங்க வேண்டாம். இரும்புக்கம்பிகளின் கனம், அவற்றின் வலைகளைத் தாங்கிப் பிடிக்கின்ற தன்மை போன்றவற்றுடன் காற்றில் சரியாமலிருக்குமா, உயரம் கொஞ்சம் கூடினால்கூட பிரச்னையை ஏற் படுத்துமா என எல்லாவற்றையும் கவனித்துத் தான் இந்த பசுமைக் குடில்களை அமைக்க வேண்டும்.



# சீனி வடை

## தேவையானவை

அரிசி அரைச்சுண்டு
முட்டை - 3
சீனி - 300 கிராம்
நெய் - 100 கிராம்
பெருஞ்சீரகத் தூள் - 2 கரண்டி
உப்பு - ஒரு சிட்டிகை
ஏலக்காய் தூள் - அரைக்கரண்டி

## செய்முறை

அரிசியை 1 மணி நேரம் ஊற வைத்து உலர்த்தவும். உலர்ந்ததும் முக்கால் பதமாக கொரகொரப்பாக திரிக்கவும். அரிசி மாவில், பெருஞ்சீரகத் தூளைச் சேர்த்து நெய்யை சூடுபடுத்தி ஊற்றவும். முட்டையை நன்கு நுரை பொங்க அடித்து, அதில் சீனி, உப்பு, ஏலக்காய் தூள் சேர்த்து மாவில் கலந்து நன்கு பிசைந்து உளுந்து வடை போல் தட்டிப் பொரித்து எடுக்கவும்.

## நாளை

வைகாசி-13
வியாழக்கிழமை - 26.05.2016
திதி: பஞ்சமி பி.இ.05.24 வரை
நட்சத்திரம்: உத்தராடம் பி.இ.01.48 வரை
ராகுகாலம்: 01.22-02.52 வரை
சுபநேரம்: 07.22-08.52 வரை



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 800 | 1000 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 300 | 300 | – |
| கணவாய் | 600 | 700 | 500 | 500 | 700 | – | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 500 | – | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 450 | 500 | 420 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 500 | 300 | 450 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 400 | 350 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | 250 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 300 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 200 | 300 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 120 | 100 | – | 40 | 70 |
| கத்தரி | 200 | 140 | 200 | 240 | 180 | 200 | 70 | 80 |
| கரட் | 120 | 100 | 160 | 120 | 160 | 200 | 70 | 140 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 50 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 220 | 200 | 100 | 140 | 180 | 120 | 90 | 100 |
| பாகல் | 140 | 120 | 200 | 180 | 180 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 120 | 120 | 80 | 160 | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 80 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 120 | 100 | 140 | 120 | 200 | 100 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 40 | 60 | 15 | 35 |
| தக்காளி | 300 | 200 | 200 | 140 | 180 | 200 | 140 | 180 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 | 40 | 40 | 60 | 35 | 30 |
| கீரை | 40 | 30 | 40 | 30 | 40 | 40 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 180 | 140 | 160 | 100 | 60 | 200 |
| புடோல் | 160 | 80 | 100 | 100 | 100 | 120 | 30 | 80 |
| கோவா | 160 | 140 | 140 | 160 | 160 | – | 90 | 100 |
| வெண்டி | 140 | 80 | 100 | 120 | 100 | 40 | 50 | 80 |
| போஞ்சி | 220 | 200 | 200 | 180 | 200 | – | – | 180 |
| லீக்ஸ் | 200 | 160 | 160 | 160 | 140 | 300 | 100 | 140 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 30 | 40 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 80 | 120 | 75 | 120 |
| தேசிக்காய் | 500 | 350 | 300 | 350 | 300 | 200 | 350 | 350 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 150 | 140 | 120 | 140 | 140 | 120 | – | 150 |
| இராசவள்ளி | 160 | 160 | 180 | 160 | 160 | 160 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 120 | 200 | 160 | 150 | 15 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட

களின் செயலாளர்கள் பங்கு பற்றினர். கூட்டத்தில் கலந்துகொள்ளாத பெரும் பான்மையான மாகாண சபை உறுப்பினர் கள், தமது தனிப்பட்ட காரணங்களினா லேயே பங்கேற்கவில்லை என்று தெரிவித் தனர்.

வடக்கு மாகாண ஆளுநரினால், யாழ்.நகர அபிவிருத்தி தொடர்பிலான கலந்துரை யாடலுக்குக் கடந்த 16 ஆம் திகதி, யாழ். மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இதனுடன் தொடர்புடைய திணைக்களத் தலைவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக் கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி யுள்ளார்.

அதில், இவ்வாறான கலந்துரையாடல் வடக்கு மாகாண சபையினருடன் ஏற்கனவே ஆராயப்பட்டுள்ளது. இன்றைய கூட்டத்தை நடத்தவேண்டாம். எங்களுடன் இணைந்து கூட்டத்தை நடத்துங்கள் என்று தெரிவித் துள்ளார்.

இந்தக் கடிதம், வடக்கு மாகாண முதல மைச்சர் அலுவலகத்தினால் நேற்று முன் தினம் இரவு சகல மாகாண சபை உறுப் பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட் டிருந்தது.

ஆளுநர் தலைமையிலான கூட்டத்தை மாகாணசபை உறுப்பினர்கள் புறக்கணிப் பதாக நேற்றுக் காலை செய்திகள் வெளி யாகியிருந்தன. இருப்பினும் திட்டமிட்ட வாறு ஆளுநர் அலுவலகத்தில் சகல அதி காரிகளின் பங்களிப்புடன் கூட்டம் நடத் தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஆளும் கட்சி உறுப்பினர்களான சயந்தன், அஸ் மின், ஆர்னோல்ட், சுகிர்தன், சிவயோகன், பரஞ்சோதி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பின ரான அகிலதாஸ் ஆகியோர் பங்கெடுத் தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகி யோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில் கருத்துத் தெரி வித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ஆளுநர் கூரே இவ்வாறான கூட்டத்தை தான் இனிக் கூட்டப்போவ தில்லை என்று தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

எனினும் மாந்தை கிழக்குப் பிரதேச செயல கத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கருத் துத் தெரிவித்திருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்,

ஆளுநர் எம்முடன் கலந்தாலோசிக்காது, யாழ். நகர அபிவிருத்தித் திட்டம் பற்றிக் கூட்டம் நடத்துகின்றார். இது பற்றி வடக்கு மாகாண சபையானது, அதனோடு சம்பந் தப்பட்ட அனைவருடனும் சென்ற வருடத் தில் இருந்தே பேசி வருகின்றது. அவற் றின் பெறுபேறுகளை எங்களிடம் கேட்டு அறியாது, ஆளுநர் கூட்டம் கூட்டியுள்ளார். இவ்வாறான கூட்டத்தை நடத்தாது எம் முடன் முதலில் பேசுவதே சிறந்தது என்று ஆளுநருக்குக் கடிதம் அனுப்பியிருந் தேன். அது பற்றி நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) அவர் என்னுடன் பேசினார். சுமந்திரன், மாவை சேனாதிராசா, சரவண பவன் ஆகியோர் இதற்காக கொழும்பில் இருந்து வந்துள்ளதாகத் தெரிவித்தார். அப்படியானால் அவர்களுடன் கூட்டம் நடத்தி அவர்களின் கருத்துக்களை எமக் குத் தெரிவியுங்கள் என்று கூறிவிட்டு வந் துள்ளேன். என்றாலும் அந்தக் கூட்டம் கூட்ட முன்னர், அவர் எங்களுடன் கலந் தாலோசித்திருக்க வேண்டும்.

அதற்கு அவர் எமக்கு அனுசரணை நல் கவே தாம் அவ்வாறு செய்ததாகக் கூறு கின்றார். அனுசரணை செய்வதாகக் கூறி, எமக்கு உபத்திரவம் தராமல் இருந்தால் போதும். அதே நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்முடன் நேரடியாகப் பேச முன்வர வேண்டும். ஆளுநர் ஊடாக எம்முடன் பேச வேண்டிய அவசியம் ஏது மில்லை. அவர்களை நாங்கள் எம்மவர் களாகவே இப்பொழுதும் கருதுகின்றோம், என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றைய கலந்துரையாட லில் பங்கேற்காத வடக்கு மாகாண சபை யின் உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, தாங்கள் தங்களுடைய தனிப்பட்ட காரணங்களின் நிமித்தமே கலந்து கொள்ளவில்லை என்று தெரிவித் தனர். அத்துடன் மூன்று உறுப்பினர்கள் மாத்திரம், ஆளுநர் வரம்பு மீறிச் செயற் படுகின்றார் என்றும், அதன் காரணமா கவே கலந்துகொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டனர்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னுடன் நேரடியாகப் பேச முன்வர வேண் டும் என்று முதலமைச்சர் தெரிவித்த கருத் துத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்ட போது, முதல மைச்சருடன் பேசுவதில் எந்தப் பிரச்சினை யுமில்லை என்று தெரிவித்தார்.

(து-வ-5-106)

## பாலச்சந்திரன்

பெறப்பட்டுள்ளன. இந்த நிலையில், ஆணைக்குழுவைக் கலைப்பதற்குரிய நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. எனவே, விசாரணையை இறுதிப்படுத்த முடியுமா எனத் தெரியவில்லை என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரான மக்ஸ் வல் பரணகம 'உதயனி'டம் தெரிவித்தார்.

அத்துடன், காணாமற்போனோர் தொடர் பில் மக்களிடம் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளையும் தமது குழு நிறைவுக்கு கொண்டு வந்துள்ளது, என் றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பரணகம மேலும் தெரி வித்ததாவது:-

ஆணைக்குழுவுக்கு 25 ஆயிரம் முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் இரட்டை முறைப்பாடுகளும் இருக்கின் றன. இதனால் எண்ணிக்கையை சரி யாகக் கணிப்பிட்டுக் கூற முடியாது.

இசைப்பிரியா, பாலச்சந்திரன் போன்றோர் குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. இசைப் பிரியா காணாமற் போயுள்ளார். இவ்வாறு அவர்களது உறவினர்க ளால் எங்களுக்கு முறைப் பாடும் செய்யப்பட்டிருக் கின்றது. இந்தச் சம்பவங் கள் பற்றி விசாரிக்க வேண்டியுள்ளது. இது தொடர்பில் இரண்டு சாட்சி யங்கள் மாத்திரமே பெறப் பட்டுள்ளன. விசார ணையை இறுதிப் படுத்த முடியுமா என்று தெரிய வில்லை. குழு கலைக்கப் பட்டால், அது சம்பந்த மான கோவைகள் சம்பந் தப்பட்ட தரப்பினரிடம் ஒப் படைக்கப்படும் – என்றார்.

இதேவேளை இந்த மாதம் மட்டக்களப்பில் நடத்தப் படவிருந்த ஆணைக்குழு வின் அமர்வும் நிறுத்தப் பட்டுள்ளது. (து-வ-5)

## லலித்

தொகையிலிருந்து 20 கோடி ரூபாவை வழங்கி யதாகக் கூறப்படும் சம்ப வம் தொடர்பில் விசார ணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்த விசாரணைகளில் வாக்கு மூலம் வழங்கவே லலித் வீரதுங்க பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட் டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆதரவாளரும் நடிகரு மான ஜெக்சன் அந்தனி யிடம் வாக்குமூலமொன் றைப் பெறும் பொருட்டு, பெரியளவிலான நிதி மோச டிகள் தொடர்பில் விசா ரணை செய்யும் ஜனாதி பதி ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

ஆணைக்குழுவில் முன் னிலையில் ஜெக்சன் அந் தனியிடம், அம்பாந் தோட்டை துறைமுக திறப்பு விழாவில் ஒழுங்கு செய் யப்பட்டிருந்த கலாசார நிகழ்வுக்கு ஒதுக்கப்பட்ட பணம் தொடர்பில், மோசடி இடம்பெற்ற தாகக் கூறப் படும் சம்பவம் குறித்து வாக்கு மூலமொன்றை பெற்றுக் கொள்ளப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகின் றது. (து-வ-5)

## கவுணாவத்தை

நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கவுணாவத்தை வைரவர் ஆலய பொங் கல் அண்மித்து வரும் நிலையில், குறித்த கோயிலில் மிருக வேள்வி நடத்துவதற்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட் சன் முன்னிலையில் சட்டத்தரணிகள் நேற்று அனுமதி கோரினர். நீதிமன்றின் அனுமதி யுடனேயே கடந்த தவணை குறித்த ஆல யத்தில் மிருக வேள்வி நடத்தப்பட்டதாகவும் மன்றில் தெரிவித்த சட்டத்தரணிகள், அத னடிப்படையிலும் அனுமதி கோரினர்.

அதற்குப் பதிலளித்த நீதிவான் குறித்த விடயத்துக்கு யாழ்.மேல் நீதிமன்று எற் கனவே இடைக்காலத் தடை விதித்துள் ளது. அது பற்றிய மேலதிக சமர்ப்பணங் கள் செய்ய விரும்பினால் யாழ்.மேல்நீதி மன்றில் அதனைச் செய்ய முடியும் என்று நீதிவான் அறிவித்தார். (து-வ-4)

## கருத்தறியும்

தமிழ் – சிங்கள அறிக்கைகள் தயாராகிய பின்னர் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஆங் கில அறிக்கையையும் இணைத்து, மூன்று அறிக்கைகளும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காகப் பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு குழு நியமிக்கப்பட்டது. இந் தக் குழு பொதுமக்களின் கருத்துக்களைத் திரட்டியது. பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் தமது பரிந் துரைகளை உள்ளடக் கியதாக, இந்தக் குழு வின் இறுதி ஆவணம் ஆங்கில மொழியில் தயார் செய்யப்பட்டது.

ஆங்கில மொழியில் தயார் செய்யப்பட்ட ஆவணத்தைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற இருந்தது. எனினும் பிரத மர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் – சிங்கள மொழிகளில் தயார்செய்த பின்னர் பரிந்துரை அறிக்கையை கையளிக்குமாறு இந்தக் குழுவுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதற்கமைய ஆங்கில மொழியிலான மூல அறிக்கையை மொழி பெயர்க்கும் நடவ டிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ் – சிங்கள அறிக்கைகள் இந்த வார இறுதிக்குள் தயார் செய்யப் படும் என்றும், அதன் பின்னர் பிரதமரிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்ப டுகின்றது. (து-வ-5)

## பசிலின்

சர் பசில் ராஜபக்ச நிர்மாணித்துள்ள பிர மாண்ட மாளிகைக்கான நிதி மோசடி தொடர் பாகவே குறித்த செயலாளர் கைது செய் யப்பட்டுள்ளார்.கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர், பசில் ராஜபக்சவின் அமைச் சில் ஒருங்கிணைப்புச் செயலாளராகக் கட மையாற்றிய உபுல் சென்விரத்ன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒருதோட்ட மாளிகை நிர்மாணத்துக்காக அரச நிதியை துஷ்பிரயோகம் செய்ய உடந்தையாக இருந்தார் என்று இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (து-வ-5)

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | | | | 9 | |
| | 1 | 2 | | 4 | | 6 | | |
| 3 | | | 2 | | | | 5 | 4 |
| | 3 | | | 5 | 6 | | | |
| | 5 | | 3 | | 2 | | 4 | |
| | | | 4 | 8 | | | 3 | |
| 1 | 9 | | | | 4 | | | 8 |
| | | 3 | | 6 | | 4 | 7 | |
| | 4 | | | | | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 4 | 8 | 1 | 5 | 6 | 7 | 2 |
| 5 | 2 | 6 | 3 | 9 | 7 | 1 | 8 | 4 |
| 7 | 8 | 1 | 4 | 2 | 6 | 5 | 9 | 3 |
| 8 | 6 | 2 | 9 | 5 | 4 | 7 | 3 | 1 |
| 1 | 5 | 9 | 7 | 3 | 2 | 8 | 4 | 6 |
| 3 | 4 | 7 | 6 | 8 | 1 | 2 | 5 | 9 |
| 4 | 1 | 8 | 2 | 7 | 3 | 9 | 6 | 5 |
| 6 | 7 | 5 | 1 | 4 | 9 | 3 | 2 | 8 |
| 2 | 9 | 3 | 5 | 6 | 8 | 4 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005 இல் இது உலகளாவிய ரீதியில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பணிச்சுமையால், சிரமப்பட நேரிடலாம். தொழில், வியாபார வளர்ச்சிக்கு, நண்பரின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். வெளியூர் பயணத் திட் டத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**இடபம்:** சிலர் உங்களிடம் வாக்குறுதியை மீறி நடப்பர். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்:** புதிய முயற்சியில் வெற்றி காண்பீர் கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தேவை தாராள செலவில் நிறை வேறும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**கடகம்:** பொதுநலனில் அக்கறை உண்டா கும். தொழில், வியாபாரத்தில், உருவான போட்டி குறையும். ஆதாயம் படிப்படியாக உயரும். பிள்ளைகளின் தேவையை தாராள மனதுடன் பூர்த்தி செய்வீர்கள்.

**சிங்கம்:** பணிச்சுமையால் ஞாபக மறதிக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில், மித மான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகை யால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். உணவு உண்பதில் கட்டுப்பாடு அவசியம்.

**கன்னி:** நண்பரின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், கடந்த கால உழைப்புக்கான ஆதாயம் கிடைக்கும். பெண் கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் நல்லது.

**துலாம்:** எதிரியின் தொந்தரவு பெருமளவில் குறையும். தொழிலில், தாராள உற்பத்தியால் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பரின் ஆலோசனை நன்மை யளிக்கும். தொழில், வியாபாரத்தில், மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். பெண்கள் ஆடம்பர எண் ணத்தைக் கைவிடுவது நல்லது.

**தனுசு:** தனித்தன்மையுடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், அமோக இலாபம் கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

**மகரம்:** பொது இடத்தில் வாக்குவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், தடை குறுக்கிடலாம். இலாபம் சுமார். எதிர்பார்த்த சுபச் செய்தி கிடைப்பதில் தாமதம் உண் டாகும்.

**கும்பம்:** லட்சிய மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், அமோக இலாபம் கிடைக்கும். நண்பர்களுடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மீனம்:** பகைவரும் நெருங்கி வந்து, அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், எதிர் பார்த்த வருமானம் கிடைக்கும். அரசியல்வாதி கள் பதவிபெற அனுகூலம் உண்டு. பிள்ளை களால் நன்மை காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்

கடந்த ஜனவரி மாதம் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.மாநகர சபைக்கான கட்டடம் அமைக்கப்படாமல் யாழ்.நகர அபிவிருத்தி மேற் கொள்வதில் பயனில்லை. எனவே யாழ்.மாநகர சபைக்கான கட்டடம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். அதனையும் இந்தத் திட்டத்தில் உள்வாங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைய, யாழ்.நகர அபிவிருத்தித் திட்டத்தில், யாழ்.மாநகர சபைக்கான கட்டடம் அமைக்கும் திட்டம் உள்வாங்கப்பட்டுள்ளது. இதனை எவ்வாறு வடிவமைப்பது என்பது தொடர்பிலான கலந்துரையாடல், யாழ்.பொது நூலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ்.மாநகர சபைக் கட்டடம் தமிழர் கலாசார முறைமையில் அமைய வேண்டும் என்பதைச் சகலரும் வலியுறுத்தினர். அதற்கமைய புதிய வரைபடம் வரையப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதன்பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வது என்று இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (து-வ-5)

## கடன்

உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தது. இதன்போதே மேற்கண்டவாறு உறுதி வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியின் கீழ், இலங்கையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு கருத்திட்டங்களின் முன்னேற்றங்களைக் கண்டறிவதற்கும், நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படும் கடன் வசதிகளில் மூலோபாய மாற்றங்களைச் செய்வதற்கும், உலக வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள் 34 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கைக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள உலக வங்கி உதவிகள் தொடர்பில் நாட்டின் சில மாவட்டங்களுக்குப் பயணம் மேற்கொண்டு பெற்றுக் கொண்ட விடயங்கள் இதன்போது மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன.

இலங்கையுடனான உறவை மேலும் பலப்படுத்தி, அபிவிருத்திப் பயணத்தில் கைகோர்த்துக் கொள்ளுமாறு, இதன்போது உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, மத்திய தர வருமானம் பெறும் நாடுகளின் கீழ் இலங்கையை உள்ளடக்கும் போது, கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் தாக்கம் செலுத்தும் நிபந்தனைகள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

30 வருட காலப் போர் நிறைவு பெற்றதன் பின்னர், அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும், பூகோள காலநிலைத் தாக்கங்களால் ஏற்பட்டிருக்கும் வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் போன்ற இடர்கள் நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்குத் தடைகளாக உள்ள சவால்களாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் உலக வங்கியின் கடன் உதவியைச் சரியான முறையில் பயன்படுத்தியுள்ளமை தொடர்பிலும், வெளிப்படைத்தன்மை தொடர்பிலும், தாம் திருப்தியடைவதாகத் தெரிவித்த உலக வங்கிப் பிரதிநிதிகள், மத்தியதர வருமானம் பெறும் நாடுகளுக்கு வழங்கப்படும் கடன் உதவிகள் தொடர்பிலான நிபந்தனைகளை மீள்பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைக்குச் சாதகமான பதிலளிக்கப்படும் என்றும் தெரிவித்தனர். (து-வ-5)

---

# நீங்கா நினைவுகளுடன்

**30ஆம் ஆண்டு** — **முதலாம் ஆண்டு**





**வேலுப்பிள்ளை கிருஷ்ணர்**
மண்ணில் 14.06.1917 — விண்ணில் 16.08.1986
திதி : துவாதசி

**வள்ளியம்மை கிருஷ்ணர்**
மண்ணில் 10.10.1921 — விண்ணில் 06.06.2015
திதி : சங்கடஹர சதுர்த்தி (25.05.2016)

இறந்தும் இறவாமல் எம் இதயங்களில் தெய்வச் சுடரொளியாய் வீற்றிருக்கும் எங்கள் அப்பாவே! அம்மாவே! அன்பின் உறைவிடமாய், பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் தெய்வங்களே! உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம்.


சிந்து பவனம்
சிவன்கோயில் வீதி, சித்தன்கேணி.

குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சுப்பிரமணியம் ( மணியம்)



மந்துவிலைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் நேற்று (24.05.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் சுமதி, சுயாதா, சுரேஷ்( உரிமையாளர் வானவில் - உணவகம்), சுரேந்திரா(சுமன்- கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களம்), சுமிதா (பிரதேச செயலர்- காரைநகர்) சுபதீஸ் (பிம்புத் பினான்ஸ்), சுபநீதன் (யாழ் / பல்கலைக்கழகம்- கலைப்பிரிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமரகுருநாதன் சுசீலா, கலிஸ்ரா, ரூபரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின இறுதிக்கிரியை இன்று (25.05.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 956 5209(சுரேஸ்), 077 940 7337 (சுமன்)

---

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா சோமசேகரம்



தோற்றம் 03 . 03 . 1931

மறைவு 24 . 05 . 2016

கதிரைவேற்பிள்ளை வீதி, புலோலி மேற்கு, தம்பசிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சோமசுந்தரம் 24.05.2016 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசேகரத்தின் ( இலங்கை காவல்துறை அதிகாரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகப்பர் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பெரியதம்பி தம்பதிகளின் அன்பு மருமகளும், பொன்னம்மா, சின்னம்மா, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராஜசுந்தரி (சுந்தரி), ஸ்ரீகணேசன் (கண்ணன் - சுவிஸ்), ஜெயராஜன் (கனடா), சுந்தர்ராஜன் (சுந்துரு - ஜேர்மனி), தேவசுந்தரி (சுவிஸ்), வரதராஜன் (வரதன் - கனடா), யோகசுந்தரி (யோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை, அருணாச்சலம், செல்லம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முருகேசு (சிவநடராசா ஸ்ரோர்ஸ் - மட்டக்களப்பு) மற்றும் சுசீலா, சித்திரா, நளினி, குகதாசன், கலாறஞ்சினி, பிரபாகர் (குட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும், வனிதா, காண்டீபன், குணரூபன், ஜனகன், ஹரிகரன், நிஷானி, ஐதுர்ஷிகா, மிதுரா, அபிஷன், தனுஷன், திவ்யன், இரட்சிகா, இராகுல், மிதுஷன், கிரிஜன், பிரகாஸ், பிரியந், பிருந்தா, பிரீத்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சதுஷ்ஷா, அக்ஷயன், அபிஷா, சுபிக்ஷா, ஹர்சிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2016) புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.

கதிரைவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

பிரபா - 077 628 8790,
கரன் - 077 716 1011
பிரியந் - 077 127 5897

(j/1564)
(11,17,18)

021 226 1394

---

# மரண அறிவித்தல்

## திருமதி பகவதிதேவி கந்தப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி)



யாழ். உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் , பிரித்தானிய Edgware ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதிதேவி கந்தப்பிள்ளை 22.05.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தாமோதரம்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா (தாவடி) தம்பதிகளின் அன்பு மருமகளும் கந்தப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்- கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு மனைவியும் அனபாயன்(ஜீவா- கனடா), காலஞ்சென்ற வாசுகி மற்றும் பார்த்திபன் (லண்டன்), சுமதி(லண்டன்), பதுமினி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இலங்கையை வசிப்பிடமாகக் கொண்ட இராமச்சந்திரன், சிவலோகநாயகி, புஸ்பதேவி, பாலச்சந்திரன், சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறிரஞ்சன்(லண்டன்), நிலானி (கனடா), அன்பழகன் (லண்டன்), சங்கர்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஸ்மன், ரூபன், மயூரி, அபிராமி, வைதேகி, கௌதம், பீஸ்மர், வைசாலி, ராகுல்,வைஸ்ணவி, மாதுளன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.05.2016 வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் 73, The Ridgeway, Kenton, Harrow, HA3 OLW, - United Kingdom இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அனபாயன் (ஜீவா - கனடா): +1 416 208 9173
பார்த்திபன்: 004 4797 148 6921
சிறிரஞ்சன்: + 00447841 522514,
சுமதி அன்பழகன் : 004 479 5100 3583,
பதுமினி சங்கர்: 004 479 408 41664, 077 608 6217

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழக உறுப்பினர்களான **றொட்டேறியன் எஸ்.நிமல்சன், றொட்டேறியன் சிந்து நிமல்சன்** தம்பதியினரின் செல்வப் புதல்வனும் றொட்டேறியன் **ஸ்ரீபதியின்** அன்புப் பேரனுமாகிய **நிமல்சன் ஸ்ரீராம்** அவர்களின் திடீர் மறைவுச் செய்தியினால் அதிர்ச்சி அடை கிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றோம்.

**யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**பொன்னையா ஜெயச்சந்திரன்**

திதி: அபரபக்க சங்கட சதுர்த்தி
(25.05.2016) புதன்கிழமை



தோற்றம் 18.04.1942
மறைவு 06.06.2015

**அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பாசத்துடன் எமை வளர்த்து வாழ வழிப்படுத்தி
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
ஈசன் கழல் சேர்ந்தனையோ! என்றென்றும்
நாம் மறவோம் உம் நினைவில் வாழ்ந்திருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

எமது குடும்பத் தலைவனின் ஆண்டுத் திதிப் பிரார்த்தனை இன்று (25.05.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். ஆண்டுத் திதிப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

இராச வீதி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# பூதப்பிள்ளை தர்மலிங்கம்

(சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்க முன்னாள் வாகன மேற்பார்வையாளர் / போமன்)



தோற்றம் 05 . 10 . 1940
மறைவு 20 . 05 . 2016

யாழ்.சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை தர்மலிங்கம் 20.05.2016 வெள்ளிக்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா - சின்னம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், பகீரதன் (பாபு - லண்டன்), தர்மிலா (கனடா), காலஞ்சென்ற வஜீரதன் (ராஜன்) மற்றும் தர்ஷலா (லண்டன்), ஜெயரதன் (சுவிஸ்), தாமரா (லண்டன்), பாமிலா (கொழும்பு) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், ஸ்ரீலீலாதரன் (கனடா), தயாளன் (லண்டன்), நிஷாந்தன் (லண்டன்), கட்சன் (கொழும்பு), சசிகலா (லண்டன்), கலா (சுவிஸ்) ஆகியோரின் பிரியமான மாமனாரும், கிதுர்ஷனா, கிஷா, ஜீவிக்கா, அபிஷ்ணவி, காயத்ரி, கபிஷன், பிரஜித், யனுஷன், சதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், அன்னதேவன், மகாலிங்கம், சிவலிங்கம், சிவகாம்பிகை மற்றும் சற்குணலிங்கம், ஐயுகம், மகாதேவன், ராஜதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கமலாவதி, பரமேஸ்வரி, பசுபதி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் ராஜேஸ்வரி, செல்வலக்ஷ்மி, காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் கிறேகரி (யோகராஜசிங்கம்), பாலசுப்ரமணியம், பராசக்தி, நாகரூபன் வாசுகி, கனகசுகிர்ஜா, சரவணபவநாதன், சத்தியசீலன், விக்னேஸ்வரி, வாகேஸ்வரி, மதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2016) வியாழக்கிழமை உடுவில் கிழக்கு சோமரான் தோட்டத்தில் அமைந்துள்ள இல்லத்தில் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**அம்பலவாணர் வீதி,**
**உடுவில்.**

(j/1566)
(11,17,18)

**077 976 9270, 077 470 7578, 077 886 5349**

# 31ஆம் நாள் நினைவில்



அமரர்
**பொன்னன் சிவஞானம்**

தோற்றம்
**30.04.1950**

மறைவு
**25.04.2016**

அன்புத் தந்தையே! உமைப்பிரிந்து அழுகின்றோம்
நாமிங்கு தினம் தினமும் மங்காத புன்னகையில்
மறைந்திருந்த நோயெதுவோ! மாறாத சோகத்தில் காலமெல்லாம் நாம் கலங்க
உமை மறந்து திரிந்திட்ட காரணம் தான் நாமறியோம்
எமை மறந்து சென்றுவிட காலம்தான் காரணமோ?
இரண்டடிகள் சென்றுவிட்டால் ஓடிவந்து கூட்டிடுவோம்
இன்று இறைவனடி சென்றுவிட்டீர் ஓடிவர முடியவில்லை
உம் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.05.2016) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தேவரன்,
புலோலி தெற்கு, புலோலி.

நீங்கா நினைவுகளுடன்
**பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

திருமதி **பரமேஸ்வரி வேலாயுதம்**



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் தம்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி வேலாயுதம் கடந்த (23.05.2016 ) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதத்தின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, பாலசரஸ்வதி, சுதரேஸ்வரி, நாகேஸ்வரி, கமலேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநாதன், புவனேஸ்வரி மற்றும் பஞ்சலிங்கம் (ஜேர்மனி), இராஜேஸ்வரி (கனடா), சிவசுப்பிர மணியம் (கனடா),ஞானேஸ்வரி (கனடா),லோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோத ரியும் காலஞ்சென்ற ஆனந்தநடராசா மற்றும் சாவித்திரி, பவளக்கொடி, தவமலர் (ஜேர் மனி), சிவலிங்கம் (ஜேர்மனி), ஸ்ரீரஞ்சனாதேவி, ஸ்ரீவசந்தமல்லிகாதேவி, சிவமலர், தவலிங்கம் (ஜேர்மனி), அகிலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னலட் சுமி, தருமராசா காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சிவபாதம் (ஜேர்மனி), கிரகராணி (ஜேர்மனி), சண்முகராசா, தங்கவேலு, காலஞ்சென்ற இராஜலிங்கம் மற்றும் சுதர்ஷினி (ஜேர்மனி), தவக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் பகிஸ்வரன், மஞ்சுளா, அனுஷா, கேதீஸ்வரன், சியமளா, கேதீஸ்வரன், றதீஸ்வரன், ரதீஸ்வரன், மதன்யா, காலஞ்சென்ற ரேவதி (ஜேர்மனி) மற்றும் சசிகுமார் (லண்டன்), றொபின்சன் (ஜேர்மனி), கல்யாணி (ஜேர்மனி), நிங்கரன் (ஜேர்மனி), கனி (ஜேர்மனி), ஜயானி, றொஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற பவானி (ஜேர்மனி) மற்றும் கிஷானி (ஜேர்மனி), தனேஸ்வரன் (லண் டன்),ரஜனி (லண்டன்), காண்டீபன்,றிஷானி, மோகன், சிவதர்ஷினி, சுதர்ஷன், சுரேஸ்குமார், கவிதா (ஜேர்மனி), கஜேன்குமார், யாழினி, தமிழ்ச்செல்வி தீபன் (பிரான்ஸ்), பிருந்தா, லோகேஸ்வரன், சுரேக்கா, சஜீபன், யசிக்கா (சுவிஸ்), லலித்குமார் (சுவிஸ்), சரண் ஜீவன், தர்சன், விந்தியா, திரிசான்,திரிசிகன், றெபெக்கா, ரநேசி, டேவிட் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அரவிந்தன், கரிகரன், சாணுஜா, மானுஷா (லண்டன்),அபினேஸ் (லண்டன்), அபிஷா, அபிஷேக், கிரிதரன், கஜேந்திரன், ஆரியன் (ஜேர்மனி), அக்ஷன் (ஜேர்மனி), லதுஷா, பானுஷன்,கனிஷ், கவின் (பிரான்ஸ்),பிரித்தி (பிரான்ஸ்), ஸஷ்ரியன் (லண்டன்), கிருஷன் (லண்டன்), நிலா (ஜேர்மனி), கவின் (ஜேர்மனி), அக்ஷயன் ஆகியோரின்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(25.05.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை நாற்சதுர சுவிசேஷ சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தம்பாலை,**
**அச்சுவேலி.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 383 6594**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைக்குண்டுடன்

றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடை ய வர்கள் என்ற சந்தேகத்தில் கடந்த 7ஆம் திகதி யாழ். நகரப் பகுதிகளில் வைத்து ஏழு இளைஞர்கள் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர். அவர்களிடமிருந்து கைப்பற்றப் பட்டதாகத் தெரிவித்து 3 வாள்களும் 2 கைக்குண்டுகளும் பொலிஸாரால் நீதிமன் றில் சமர்ப்பிக்கப்பட்டன. எனினும் இளைஞர் கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணிகள், கைக்குண்டுகள் தொடர்பில் தமது கடும் ஆட் சேபனை யைத் தெரிவித்து, அந்தக் கைக் குண்டுகள் இளைஞர்களின் உடைமையிலி ருந்து பொலிஸாரால் கைப்பற்றப்படவில் லையெனக் குறிப்பிட்டனர்.

அத்துடன், குறித்த கைக்குண்டுகள் யாரு டைய உடைமையிலிருந்து, எங்கிருந்து கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெளி வான அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென நீதிமன்றை உத்தரவிடுமாறும் சட்டத்தரணி கள் கோரியிருந்தனர். அதனடிப்படையில் நீதிமன்று பொலிஸாருக்குக் கட்டளையிட் டிருந்தது. எனினும் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதும், பொலி ஸார் இது தொடர்பான விளக்க அறிக் கையைச் சமர்ப்பிக்கவில்லை. யாழ்ப்பாணம், நாவலர் வீதிப் பகுதியிலுள்ள பாழடைந்த வீடு ஒன்றிலிருந்து குண்டுகள் கைப்பற்றப் பட்டதாகத் தெரிவித்தனர். இதனையடுத்து பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் பொலி ஸாரை அடுத்த தவணை தெளிவான அறிக் கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கட்டளை யிட்டுச் சந்தேகநபர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-வ-103)

## வடக்கு

தார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்டம் தொடர்பான தீர்மா னத்தை, வடக்கு மாகாண ஆளுநர் கூரே கொழும்பில் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பில் விமர்சித்திருந்தாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதனை யடுத்து ஆளுநர், ஊடகவியலாளர் சந் திப்பின் ஒலிப்பதிவு என்று தெரிவித்து ஒரு குறுந்தகட்டினை பேரவைச் செயலகத்துக்கு அனுப்பி வைத்திருந்தார்.

ஆளுநர் அனுப்பிய குறுந்த கட்டின் ஒலிப் பதிவை கேட்டீர்களா என்று வடக்கு அவைத் தலைவரிடம் ஊடகவியலாளர்கள் நேற்று வினவினர். இதற்குப் பதிலளிக்கையிலேயே அவைத் தலைவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். வடக்கு மாகாணத்தின் தீர்மானத்தை விமர்சனம் செய்யும் வகையில் ஆளுநர் எது வும் தெரிவிக்கவில்லை. அவரது குறுந்தகட் டில் உள்ள ஒலிப் பதிவைக் கேட்டதன் அடிப்படையில் சொல் வதாகத் தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரி வித்த ஆளும் கட்சி உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங் கம், குறுந்தகட்டினை மாத் திரம் வைத்து முடிவுக்கு வர முடியாது. ஏனெனில் குறுந் தகட்டில் செம்மைப்படுத்தப் பட்ட (எடிட்) ஒலிப்பதிவை எமக்கு அனுப்பியிருக்கக் கூடும். ஆளுநர் அந்த ஊடக சந்திப் பில் அவ்வாறு தெரிவிக்க வில்லை எனின், ஏன் ஊடகங் களில் அந்தச் செய்தி வெளி வந்த போது அமைதிகாத்தார் என்றும் எம்.கே.சிவாஜி லிங்கம் கேள்வி எழுப்பினார். (வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி காந்திமதி சண்முகசுந்தரம்



மண்ணில்
25 . 07 . 1932

விண்ணில்
24 . 05 . 2016

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காந்திமதி சண்முகசுந்தரம் (பாப்பா) கடந்த(24.05.2016) திங்கட் கிழமை பின்னிரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை சண்முகசுந்தரத்தின்(ஓய்வு நிலை A.O) பாசமிகு மனைவியும் சண்முகப்பிரியா (கனடா), பராபரி (ஆசிரியை, யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி), யமுனா (சுகாதார அமைச்சு-கொழும்பு), கங்கா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ப.நிமலன் (நிம்மி-கனடா), செ.நிமலன் (கொழும்பு), சி.அகிந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் யதுமிதா, ஹரிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், சிவகாமசுந்தரி, பரமானந்தன், இரத்தினசிகாமணி (மணி), புவனேஸ்வரன் (கிச்சி) மற்றும் சரவணபவன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இருளன் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"றாமா பகாங்"**
**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 656 9118**

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் நிமல்ஷன் ஸ்ரீராம்

**பிறப்பு** **04.07.2015**

**இறப்பு** **24.05.2016**

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வன் நிமல்ஷன் ஸ்ரீராம் நேற்று (24.05.2016) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுவர்ணராஜா நிமல்ஷன்-சிந்து நிமல்ஷன் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற நடராஜா சுவர்ணராஜா மற்றும் ரேணுகா சுவர் ணராஜா, கந்தையா ஸ்ரீபதி, மகேஸ்வரி ஸ்ரீபதி ஆகியோரின் அன்புப் பேரனும் நிஷந்தன், உமாநந்தினி (கனடா), நிலக்ஷன், சஞ்சிதா (ஆஸ்திரேலியா), கவிதா, சசீபன் (கனடா), திரு வேணி, உமேஸ், சுஜனி, பரணீதன் ஆகியோ ரின் பெறாமகனும் சுவர்ணன், சுவர்ணமுகி ராஜன்பாலகுகன் ரஸ்மிஆருத்தா, சாகித்தியன், கேசனா, ஹம்சத்வன், ஹம்சரன், ஆருசன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25. 05.2016) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூத வுடல் காரைக்கால் இந்து மயானத்தில் நல்லடக் கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

தகவல்: **குடும்பத்தினர்.**

**077 847 5072, 071 822 4457, 077 690 9779**

## மரண அறிவித்தல்கள்

### குட்டித்தம்பி லோகேஸ்வரன்



சண்டிலிப்பாய், 7 ஆம் கட்டையைப் பிறப்பிடமாக வும் ஜேர்மனியை வசிப்பிட மாகவும் கொண்ட குட்டித் தம்பி லோகேஸ்வரன் 12.05.2016 வியாழக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.05. 2016) புதன்கிழமை ஜேர் மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண் பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**7 ஆம்கட்டை,**
**சண்டிலிப்பாய்.**

தகவல்:
**மருமக்கள்**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### உருக்குமணிதேவி பாலசுந்தரம்

(ஓய்வு நிலை ஆசிரியை-நயினாதீவு)



நயினாதீவு 2ஆம் வட் டாரத்தைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உருக்கு மணிதேவி பாலசுந்தரம் (ஓய்வு நிலை ஆசிரியை) நேற்று (24.05. 2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நயினாதீவு -02**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### சோமசுந்தரம் கனகரட்ணம்



தோற்றம் 1945.01.04

மறைவு 2016.05.23

தையிட்டி குருந்து வீதியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் றொட் டியாலடியை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கனகரட் ணம் கடந்த (23.05.2016) திங் கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சோமசுந்தரம்-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கண வரும் சுகிர்தா.தயாளன், பிரிந்தா, ஜெயகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிகுமாரன், சிறீரஞ்சன், ஈஸ்வரி ஆகியோ ரின் அன்பு மாமனாரும் அபர்நாத், கோபிநாத், டிலக்சன், கபி னஜா, ரிசானா, ஹரணி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.05.2016) புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**க.ஜெயகரன் (மகன்-மோட்டார் சைக்கிள் மெக்கானிக்)**
**077 138 7710**

### திருமதி செல்வநாயகி பத்மநாதன்



நவக்கிரியைப் பிறப்பிடமாக வும் கோண்டாவில் கிழக்கு, நாக பூசணி அம்மன் வீதியை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகி பத்மநாதன் நேற்று (24.05.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் பத்மநாதனின் அன்பு மனைவியும் உருத்திர குமார், செல்வநாதன் (கனடா), செல்வரூபி, விக்னேஸ்வரன், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயமலர், கலாமதி, சாந்தகுமாரி, தர்சினி,சந்திரதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாகபூசணி அம்மன் வீதி,**
**கோண்டாவில்.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**ப.உருத்திரகுமார்**
**(பெரியதம்பி)**
**077 8129648**

### திருமதி நாகேஸ்வரி தங்கராசா



வடலியடைப்பைப் பிறப்பிட மாகவும் ஆனைப்பந்தியை வசிப் பிடமாகவும் தற்போது கல்வி யங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தங்கராசா 23.05.2016 திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான நட ராசா - பொன்னம்மா தம்பதிக ளின் அன்பு மகளும், சந்திரராசா, கெங்கராசா, சிறீஸ்கந்தராசா தவராசா, காலஞ்சென்ற குணராசா மற்றும் விக்கினராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**32, சந்தைலேன்,**
**கல்வியங்காடு**

(j/1573)

தகவல்:
**தவராசா (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார், மடு பிரதேசங்கள் இறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், மே 25
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மன்னார் பிரதேச செயலக அணியும், மடு பிரதேச செயலக அணியும் இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளன.

முசலி பிரதேச செயலக முத்தரிப்பு கடற்கரையில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை மேற்கு பிரதேச செயலக அணி மோதியது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் மடு பிரதேச செயலக அணியை எதிர்த்து முசலி பிரதேச செயலக அணி மோதியது. இதில் மடு பிரதேச செயலக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. காலநிலை சீரற்ற தன்மையின் காரணத்தால் இறுதியாட்டம் பிற்போடப்பட்டுள்ளது. (ம-23)

## நானாட்டான், மன்னார் இறுதியில்

யாழ்ப்பாணம், மே 25
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் நானாட்டான் பிரதேச செயலக அணி, மன்னார் பிரதேச செயலக அணி என்பன இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

முசலி பிரதேச செயலக முத்தரிப்பு கடற்கரையில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை மேற்கு பிரதேச செயலக அணி மோதியது. இதில் நானாட்டான் பிரதேச செயலக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மடு பிரதேச செயலக அணியை எதிர்த்து மன்னார் பிரதேச செயலக அணி மோதியது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## சென். யூட் முன்னேற்றம்

யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது சென். யூட் அணி. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். யூட் அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதலேயே சென் யூட்டின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. 2ஆவது நிமிடத்திலேயே சென்யூட்டின் சார்பாக முதலாவது கோல் பதிவானது. 44ஆவது நிமிடத்தில் பகீரதன் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய 2:0 என்ற சென். யூட்டின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் சென். அன்ரனிஸ் அணி வீரர் களான கனிஷ்டன் 58 ஆவது நிமிடத்திலும், டனிக்சன் 67ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்து, கோல்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தினர். ஆனால், 69ஆவது நிமிடத்தில் சென். யூட்டின் தீபன் பிறிதொரு கோலைப் பதிவு செய்ய முடிவில் சென். யூட் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-422-23)



# இறுதியில் பெங்களூர் வில்லனானார் வில்லியர்ஸ்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது தகுதிகாண் ஆட்டத்தில் கடும் நெருக்கடியிலிருந்து மீண்டு குஜராத்தை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது பெங்களூர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆட்டம் பெங்களூரில் நடைபெற்றதால் ரசிகர்களின் ஆதரவு அந்த அணிக்கு மிகையாகவே இருந்தது. அச்சுறுத்தும் விதமாக முதல் பந்துப்பரிமாற்றத்தை வீசி முடித்தார் அரவிந். இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில் மக்கலம், பின்ஞ் இருவரையும் வீழ்த்தி குஜராத்தை ஆட்டம் காணவைத்தார் இக்பால் அப்துல்லா. ஒரே ஓட்டத்துடன் ரெய்னாவை இருக்கைக்குத் திருப்பினார் வற்சன். தற்போது குஜராத் 9-3. சிமித், டினேஸ் கார்த்திக் இணைய பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களை எட்டியது குஜராத். சிமித் ஒரு முனையில் அடித்தாட மறுமுனையில் இலக்குச் சரிவு ஏற்பாது காத்து நின்றார் கார்த்திக். அணியின் ஓட்டம் 94ஆக இருந்த பொழுது 26 ஓட்டங்களுடன் டினேஸ் கார்த்திக்கை வீழ்த்தினார் ஜோர்டான். மத்திய வரிசை வீரர்களான ஜடேயா மூன்று ஓட்டங்களுடனும், பிராவோ 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 73 ஓட்டங்களுடன் சிமித்தின் இன்னிங்ஸும் முடிவுக்குவர குஜராத் 130 ஓட்டங்களில் சுருண்டு விடும் நிலையில் இருந்தது. அடுத்தடுத்து இரு சிக்சர்களைப் பதிவுசெய்தார் திவேதி. திடீர் எழுச்சி கண்டது சராசரி. குல்கர்னியும் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்த முடிவில் குஜராத் 158.

பந்துவீச்சில் பெங்களூரின் சார்பாக வற்சன் 4 இலக்குகளையும் இக்பால் அப்துல்லா, ஜோர்டான் இருவரும் தலா இரு இலக்குகளையும், சாஹல் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூருக்கு ஆரம்பம் படு மோசமாக அமைந்தது. இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தில் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் கோலியை வீழ்த்தி பெங்களூருக்கு பெரும் அழுத்தத்தைக் கொடுத்தார் குல்கர்னி. நான்காவது பந்துப் பரிமாற்றத்தில் கெயிலும், ராகுலும் குல்கர்னியால் பவிலியனுக்கு அனுப்பப்பட்டனர். குஜராத்துக்கு குழப்பத்தை ஏற்படுத்த அதிரடி வீரரான சச்சின் பேபியை ஐந்தாவது வீரராக களமிறக்கினார் கோகிலி. ஆனால் நடந்தது என்னமோ வேறு மாதிரியே. ஓட்டமெதனையும் பெறாத நிலையில் குல்கர்னியின் வேகத்தில் சச்சின் பேபியும் சிக்கினார். வற்சனை வீழ்த்தினார் ஜடேயா. தற்பொழுது நிலமை 29-5. இறுதியாட்டத்துக்கான பெங்களூரின் வாய்ப்பு மங்கத் தொடங்கியது. தற்பொழுது அந்த அணியின் ஒரே நம்பிக்கை களத்தில் வில்லியர்ஸ் நின்றமையே. வில்லனானார் வில்லியர்ஸ். எந்தவொரு பதற்றத்தையும் உணராதவராக சர்வசாதாரணமாக விளையாடினார். சிக்சர்களும் பவுண்டரிகளும் இடம்பிடிக்கத் தொடங்கின. வில்லியர்ஸை எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. பின்னர் ஆட்டமிழந்தாலும் 33 பந்துகளில் அவரின் அரைச்சதம் பதிவானது. இக்பால் அப்துல்லாவும் எதிர்பாரா ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இறுதி 6 பந்துப் பரிமாற்றங்களில் 70 ஓட்டங்கள் தேவை என்ற நிலமை. ஜகடியின் பந்துப்பரிமாற்றத்தை நன்றாகக் கவனித்தார் வில்லியர்ஸ். தவிர ஒவ்வொரு பந்துப்பரிமாற்றத்திலும் குறைந்தது ஓர் பவுண்டரியாவது பதிவாகியது. இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டபாடில்லை. முடிவில் பத்துப் பந்துகள் மீதமிருக்க குஜராத்தை வீழ்த்தியது பெங்களூர். 79 ஓட்டங்களுடன் வில்லியர்ஸும், 33 ஓட்டங்களுடன் இக்பால் அப்துல்லாவும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் குஜராத்தின் சார்பாக குல்கர்னி 4 இலக்குகளையும் ஜடேயா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம)

## மத்தியூஸின் கனவு அணியில் இலங்கையர் ஐவருக்கு இடம்

இலங்கை அணியின் தலைவரான மத்தியூஸ் தனது காலத்தில் விளையாடியவர்களிலும், தனக்கு சில வருடங்களுக்கு முன்னர் விளையாடியவர்களிலும் சிறந்தவர்கள் என தான் கருதும் வீரர்களைத் தெரிவுசெய்து உலக லெவன் அணியை வெளியிட்டுள்ளார். அரவிந்த டி சில்வா இந்த அணிக்குத் தலைவராக உள்ளார்.

மத்தியூஸ் வெளியிட்டுள்ள அணி விவரம்:- சச்சின், சங்கக்கார, லாரா, அரவிந்த டி சில்வா (தலைவர்), மகேல, கலிஸ், வோர்ண், முரளிதரன், அக்ரம், வாஸ், மெக்ராத்.

மத்தியூஸின் அணியில், ஒரு இந்தியர், ஒரு தென்னாபிரிக்கர், ஒரு பாகிஸ்தானியர், ஒரு கரீபியன், இரு ஆஸ்திரேலியர்கள் இடம்பிடித்த அதே நேரம், ஐந்து இலங்கை வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். இங்கிலாந்திலிருந்து எவரும் இடம்பெறவில்லை. (ம)



## காயம் காரணமாக ஸ்ரோக்ஸ் விலகல்

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் ஸ்ரோக்ஸ் விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட்டின் இரண்டாவது நாளில் ஸ்டோக்ஸின் காலில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் தொடர்ந்து விளையாட முடியாமல் ஓய்வறைக்குச் சென்றார். இதனால் அவர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாக வுள்ள இரண்டாவது டெஸ்ட்டிலிருந்து விலகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் இன்னும் ஸ்கான் பரிசோதனை செய்யப்படாததால் உத்தியோக பூர்வமான முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. (ம)



## நிர்வாகத் தெரிவு

வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் யாழ். மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் தலைவராக ரி.கருணாகரன், உபதலைவராக சி.அப்புத்துரை, செயலாளராக எஸ்.முருகதாஸ் காந்தன், உப செயலாளராக ப.நிதர்சன், பொருளாளராக க.நாகேந்திரன், நிர்வாகசபை உறுப்பினர்களாக ந.சுரேஸ் குமார், அ.குமாரசிவம், சி.சிவச் செல்வன், சிவானந்தன், ப.கோபிநாத், எஸ்.ரஞ்சித்குமார் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)

## விண்மீன், கொலின்ஸ் அணிகள் முன்னேறியுள்ளன

யாழ்ப்பாணம், மே 25
இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத்தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் விண்மீன், கொலின்ஸ் அணிகள் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடர் இமையாணன் மத்தியின் மைதானத்திலேயே இடம்பெற்று வருகிறது. இதன்படி நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியும் கலட்டி ஐக்கிய அணியும் மோதின. ஆட்டம் ஆரம்பித்து முதல் பத்து நிமிடங்கள் நிறைவடைவதுக்குள் விண்மீனின் உதயகாந் முதல் கோலைப் பதிவுசெய்தார். 24 ஆவது நிமிடத்தில் அவராலேயே இரண்டாவது கோல் பதிவாக 2:1 என்ற விண்மீனின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்து ஹற்றிக் சாதனை படைத்தார் உதயகாந். முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது விண்மீன்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியும் கரணவாய் கொலின்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணியின் விஜய் முதல் கோலைப் பதிவு செய்தார். அதுவே முதல் பாதியின் ஒரே கோலாகவும் அமைந்தது. இரண்டாம் பாதியில் சரஸ்வதி அணியின் வீரர் ஒருவர் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட மேலும் பின்னடைவைச் சந்தித்தது அந்த அணி. கொலின்ஸின் வீரரான விஸ்ணு மேலும் ஒரு கோலைப்பதிவு செய்ய முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண மட்ட கபடித் தொடர்

பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 19 வயது இருபால் பிரிவினருக்கான மாகாண மட்ட கபடித் தொடர் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.
வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தத் தொடர் நாளை முதல் மூன்று தினங்கள் வரை நடைபெறும். (ம-108)

# யாழ். மத்தி சம்பியன்

கரணவாய், மே 25
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மேசைப்பந்தாட்டத் தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி சம்பியனாகியுள்ளது.
மன்னார் பொது உள்ளரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையும் பலப்பரீட்சை நடத்தின. இதில் யாழ். மத்திய கல்லூரி 3:0 என்ற நேர்செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலயம் பெற்றது. (ம-108-433-422)




## ஆனைக்கோட்டை றோ.க.த.க. சம்பியன்

கரணவாய், மே 25
மாகாண மட்ட மேசைப்பந்தாட்டத் தொடரில் 19வயது ஆண்கள் பிரிவில் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை அணி சம்பியனானது.
மன்னார் பொதுவிளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. இதில் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும் கொக்குவில் இந்துக்கல்லூரியும் மோதின. இதில் யாழ். மத்திய கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.
(ம-108-422)






## ஜொலிஸ்ரார் வி.கழகம் சம்பியன் முல்லைக் கூடைப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 25
முல்லைத்தீவு கூடைப்பந்தாட்டச் சங்கம் வட மாகாண ரீதியாக நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் ஜொலிஸ்ரார் அணி சம்பியனாகியுள்ளது.
மல்லாகம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்த இறுதியாட்டம் நடை பெற்றது. ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஜொலிஸ் ரார் அணி 52:50 என்ற புள்ளி களின் அடிப்படையில் போராடி வெற்றி பெற்றது. ஜொலிஸ்ரார் அணியின் சார்பில் சிறந்த வீரராக வாகிசனும், சென்ற லைட்ஸ் அணி யின் சார்பில் பிரசாந்தமனும் தெரிவானர்கள். (ம-23)




## கொக்குவில் இந்துவிடம் கிண்ணம்

யாழ்ப்பாணம், மே 25
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மேசைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியனானது.
மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. இதில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று மாகாணச் சம்பியனாகியது கொக்குவில் இந்துக்கல்லூரி. மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயரதரப் பாடசாலை தனதாக்கியது. (ம-108,433,422)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 25

**வவு. கால்பந்தாட்டச் சங்கத்தின் தொடர்**

வவுனியா கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யுனிபைட் அணியை எதிர்த்து அல் இக்பால் அணி மோதவுள்ளது.

**திருமகள் வி.கழகத் தொடர்**

அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜேம்ஸ் அணியை எதிர்த்து துணவி சென். நியூஸ்ரார் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது.

**யங்ஹென்றிஸின் தொடர்**

யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செம்மலை உதய தாரகை அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பனங்கட்டுக் கொட்டு சென்.ஜோசெப் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது.

**கழுகுகள் வி.கழகத் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் ஜோசவாஸ்நகர் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவுள்ளது. தொடர்ந்து பி.பகல் 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதவுள்ளது.
(ம-422,108,23)

## ஞானமுருகனுக்கு அட்டகாசமான வெற்றி



யாழ்ப்பாணம், மே 25
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றுள்ளது.
கழுகுகளின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து யாழ். பாரதி அணி மோதியது. ஆட்டத்தின் 28 ஆவது நிமிடத்தில் ஞானமுருகனின் வீரன் தவறூபன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். அந்தக் கோலே முதல் பாதியின் ஒரே கோலு மாக அமைந்தது.
இரண்டாம் பாதியின் ஐந்தாவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது பாரதி. தற்போது நிலமை 1:1. ஞான முருகன் அணியின் பார்த்தீபன் 47ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்ய அந்த அணியின் ஆதிக்கம் ஆரம்பமானது. பார்த்தீபனின் மின்னல் வேக ஆட்டம் தொடர்ந்தது. 49ஆவது, 51ஆவது, 53ஆவது நிமிடங்களில் அவர் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தார். ஜெகதீஸ் மற்றுமொரு கோலைப் விளாச முடிவில் ஞானமுருகன் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக பார்த்தீபன் தெரிவானார்.
(ம-23)

## காமாட்சியின் கரப்பந்தாட்டம்

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட 19 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர் இன்று முதல் குறித்த கழகத்தின் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.
இதன்படி இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் சரஸ்வதி அணியை எதிர்த்து நீர்வேலி கலையொளி அணியும், மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி அணியை எதிர்த்து கலைமகள் அணியும் மோதவுள்ளன. (ம-108)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
FLC
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French-
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் ...
விரிவுரையாளர்: MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டு வருபவர்)
DELF A1, A2 Exam இல் 100% சித்தி.. 1095 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
DELF A1,A2,B1 வகுப்புக்கள் ஆரம்பம் உடன் பதியுங்கள்...
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம்: 28.05.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 30.05.16 Mon @ 4pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

ஆங்கிலம்
O/L, A/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்களும் கூட பயிற்சியில் இணைந்துசரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!
2 வது சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 28.05.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
28-05-2016 இற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் வேண்டும்.
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம்,
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## உருத்திரபுரம், ஜெகமீட்பர் இறுதியில்

கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் உருத்திரபுரம், ஜெகமீட்பர் அணிகள் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

வட்டக்கச்சி இளந்தளிர் அணியை உருத்திரபுரம் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியும் உதயதாரகை அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி 1:0 என்றகோல் கணக்கில் வீழ்த்தியும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன. (ம-23)




தேவை
மும்மொழிகளும் தெரிந்த ஹோட்டல் அனுபவமுள்ளவர்கள் தேவை. உதவியாளரும் தேவை
077 724 2427, 077 741 2713

பணியாளர்கள் தேவை
யாழிலும் கொழும்பிலும் இயங்கும் வர்த்தக நிலையத்திற்கு பாரவூர்தி உதவியாளர் உடன் தேவை.
021 492 3724

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1976 இல் பிறந்த 5'6" உயரமுடைய பட்டதாரி அரச உத்தியோக மணமகனுக்கு நற்குணமுள்ள தகுந்த மணமகள் தேவை. உத்தியோகம் அற்ற A/L சித்தியடைந்தவர்களும் தொடர்புகொள்ளலாம். சீதனம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர் : 0768078732

பணியாளர் தேவை
யாழ். கொழும்பு பயணிகள் போக்குவரத்து சேவைக்கு கொழும்பில் ஆசனம் பதிவதற்கு பணியாளர்கள் தேவை.
021 492 3724




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.